





## 1

டெலிபோன் விடாப்பிடியாய் வீறிட்டுக் கொண்டிருந்தது.

ஷவருக்குக் கீழே நின்றிருந்த கல்பனா - சீக்கிரம் சீக்கிரமாய்க் குளியலை முடித்துக் கொண்டு - ரோஜா நிறத்தில் இருந்த பெரிய தேங்காய்ப்பூ துவாலையால் உடம்பைப் போர்த்திக் கொண்டு பாத்ரூமினின்றும் வெளிப்பட்டாள். ஹாலின் சுவரோரமாய் இருந்த டீபாயின் மேல், இளம் நீல நிறத்தில் தெரிந்த 'பிரியதர்சினி' இன்னமும் கதறிக் கொண்டிருக்க , மொஸைக் தரையில் ஈரக் காலோடு, 'ச்சப்...ச்சப்' என்று நடந்து போய் ரிஸீவரை எடுத்தாள் கல்பனா.

''ஹலோ...'' - குரல் கொடுத்தாள்.

மறுமுனையில் ஓர் ஆண் குரல் கேட்டது.

''ஹலோ! தீபக் இருக்காரா?''

''இல்லையே! அவர் டென்னிஸ் போயிருக்கார். நீங்க யார் பேசறது?''

''எம் பேர் சுப்ரமண்யராஜா. ராஜபாளையத்திலிருந்து பேசிட்டிருக்கேன். தீபக்கோட ஃப்ரெண்ட் நான். தீபக் எப்போ வருவார்?''

''எட்டுமணி ஆயிடும்.''

''நீங்க தீபக்கோட மனைவியா?''

''ஆமா.''

''ஸாரி.. போன வாரம் நடந்த உங்க கல்யாணத்துக்கு என்னால வர முடியலை. ராஜபாளையத்துல என்னோட ப்ரதர்-இன்-லா

கல்யாணம். அந்த அமளியெல்லாம் இன்னிக்குத்தான் முடிஞ்சது. நான் நாளைக்குக் காலையில ஒன்பது மணிக்கு தீபக்கைப் பார்க்க வர்றதா சொல்லுங்க...''

''நாளைக்கா வர்றீங்க...?'' கல்பனா தயக்கமாய்க் கேட்டாள்.

''ஆமா...''

''மன்னிக்கணும்.''

''ஏன்..?''

''இன்னிக்கு ராத்திரி நானும் அவரும் ஒரு சின்ன டூர் புறப்படறோம்...''

''ஓ... ஹனிமூனா..!'' - மறுமுனையில் சுப்ரமண்யராஜா சிரித்தார். ''போயிட்டு வாங்க. போயிட்டு எப்ப வருவீங்க?''

''ஒரு வாரமாயிடும்...''

''சரி.. நான் அடுத்த வாரம் ஃபோன் பண்ணிட்டு வர்றேன். தீபக்கிட்டே நான் போன் பண்ணினதா சொல்லுங்க.''

''கண்டிப்பா சொல்றேன்.''

ரிஸிவரை சாத்தினாள் கல்பனா. ஈரம் இன்னமும் உடம்பிலிருந்து சொட்டிக் கொண்டிருந்தது. தேங்காய்ப்பூத் துவாலையை மேலே இறுக்கிக் கட்டிக் கொண்டு - ட்ரஸ்ஸிங் டேபிளை நோக்கிப் போனாள்.

**ஒரு நிமிஷம் வாசகர்களே! பெண் வாசகிகள் மட்டும் கல்பனாவோடு உள்ளே போகட்டும். நாம் வெளியே நிற்போம். கல்பனா சேலையில் நிரம்பி வெளியே**



வருவதற்குள் அவளைப் பற்றி நான் சொல்லி விடுகிறேன்.

கல்பனாவுக்கு வயது 240 மாதங்கள். பாலில் லேசாய் மஞ்சள் கலந்த மாதிரியான நிறம். ரோஜா உறைந்து போன உதடுகள். பெரிசு பெரிசான இரண்டு கண்களில் ஒன்றில் குந்தா மின்சார நிலையமும் - இன்னொன்றில் பைகாரா மின்சார நிலையமும் இயங்கிக் கொண்டிருந்தன. வெண்ணெய்க் கட்டியான மோவாய்த் திரட்சியில் என்னைப் பதித்த மாதிரி ஒரு கடுகு மச்சம் தெரிந்தது - ரொம்பவும் விசேஷம்.

கல்பனா காரட் நிற ஷிபான் சேலையில் - மஞ்சள் பூக்கள் சிரித்த பின்னணியில் அறையை விட்டு வெளியே வந்தாள். போன வாரத்துப் புதன்கிழமை காலை ஆறு மணிக்கு - ஏராளமான அட்சதை தலைக்கு மேலே பொழிய - தீபக் கட்டின அந்தத் தாலி இந்த நிமிஷம் ஜன்னல் வழியே பீறிட்டுவந்த சூரிய வெளிச்சத்தில் மின்னியது.

'எங்கே வேலைக்காரி சரோஜாவைக் காணோம்?' என்று யோசித்த விநாடி வாசலில் 'ப்ப்ப்ர்' என்று பஸ்ஸர் சத்தம் கேட்டது.

வேகவேகமாய்ப் போய்க் கதவைத் திறந்தாள்.

வேலைக்காரி சரோஜா அள்ளி முடித்த கொண்டையோடும் - மொச்சை மொச்சையாய் தெரிந்த காவிநிறப் பற்களோடும் நின்றிருந்தாள். கல்பனாவைப் பார்த்ததும் ஓர் இளிப்பு இளித்தாள்.

''கோவிச்சுக்காதேம்மா! லேட்டா விடுச்சு...''

''தினமும் நீ லேட்டுதான்...''

''நா... இன்னாம்மா பண்ணட்டும்? எருக் கம்பெனியாண்டை ஆடு. பாளாப்போன பஸ் டிரைவர் ஸ்டாப்பிங்கல வண்டியை நிறுத் தாம வந்துடறான். கண்ணுக்கு லட்சணமா - காலேஜுக்குப் போர பொண்ணுங்க பஸ் ஸ்டாப்புல இருந்தா மட்டும் பஸ்ஸை நிறுத்தறான். காலேஜ் பொண்ணுங்க வர்றவரைக்கும் நான் பஸ் ஸ்டாப்புல வெத்தலை பாக்கு போட்டுகிட்டு நின்னுட் டிருக்க வேண்டியதுதான்.''

''சரி...சரி... வாயாடாமே போய் வேலையைப் பாரு. அய்யா வர்ற நேரம்.''

''நீ கவலைப்படாதேம்மா. இந்த சரோஜா போய் சமையலறைக்குள்ளே நுழைஞ்சா சரசரன்னு வேலையாயிடும்.'' கொண் டையை அவிழ்த்து முடிந்து கொண்டே சமையலறைக்குள் நுழைந்தாள் சரோஜா.

கல்பனா சிரித்துக்கொண்டே போர்டி கோவுக்குப் போனாள். போர்டிகோவுக்குக் கொஞ்சம் தள்ளித் தெரிந்த லானின் ஓரமாய் ரோஜாப் பதியன்கள் செழிப்பாய் வளர்ந்திருக்க - அதன் தலையில் ரோஜாக்கள் தெரிந்தன. ஒரு ரோஜாச் செடியை நெருங்கி - பூவொன்றைப் பறித்து கூந்தலில் சொருகினாள்.

அவள் திரும்பிய விநாடி -

காம்பௌண்ட் கேட்டுக்குள் அந்த



ஹோண்டா பைக் 'த்தட் த்தட்' என்று மூச்சு விட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தது. அதில் ஆரோகணித்துத் தெரிந்தான் தீபக்.

கல்பனா மலர்ந்து - வேகவேகமாய்ப் போர்டிகோவுக்குப் போக, தீபக், ஹோண் டாவின் இயக்கத்தை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். சராசரி உயரம். சராசரி நிறம். முன் மண்டையில் முடி கொட்டிப் போய் வழுக்கை என்னும் பெயரை வாங்கக் காத்திருந்தது. மீசை வளர்ப்பில் பிரியம் காட்டியவன் மோவாயை சுத்தமாய் வைத்திருந்தான். அந்த நிமிஷம் அவன் அணிந்திருந்த வெள்ளை பனியனும் வெள்ளை ஷர்ட்டும் வியர்வையில் ஊறிச் செம்மண் படிந்திருந்தது.

''என்ன மகாராணி! குளிச்சாச்சு போலிருக்கே?'' டென்னிஸ் ராக்கெட்டோடு அவளை நெருங்கினான்.

கல்பனா வெட்கமாய் புன்னகைத்தாள்.

''ஆச்சு...''

''இந்தப் புடவையிலே நீ தூள் கிளப்பறே கல்பனா...''

''பொண்டாட்டியை அப்புறமா வந்து வர்ணிக்கலாம். நீங்க முதல்ல போய்க் குளிங்க. இந்த வெள்ளை பனியன், வெள்ளை ஷர்ட் பூராவும் ஒரே வேர்வையும் செம்மண்ணுமாய்... சகிக்கலை.''

''ஐயா இன்னிக்கு ரெண்டு செட் ஆடி ஜெயிச்சிருக்கார். சோடாபுட்டி பட்டாபி ராமனை ரெண்டு செட்லேயும் மண்ணைக்

கல்வ வெச்சேன்.''

''அவர் கண்ணாடியைக் கழற்றி வீட்ல வெச்சுட்டு வந்து ஆடியிருப்பாரு!''

''யூ... நாட்டி...'' - டென்னிஸ் மட்டையைச் சுழற்றி கல்பனாவின் தலையில் விளையாட்டாய் அடிக்கப்போனான் தீபக்.

அதே விநாடி பின்பக்கமாய்க் குரல் கேட்டது.

''நோ... மிஸ்டர் தீபக்..! என்னோட த்தை பொண்ணை நீங்க அடிச்சா அதை என்னால பாத்திட்டிருக்க முடியாது..''

இருவரும் திரும்பினார்கள்.

ரமணன் வந்து கொண்டிருந்தான். அசப்பில் நடிகர் ரகுமானை ஞாபகத்துக்குக் கொண்டு வந்தான். நிறம்மட்டும் கொஞ்சம் உதைத்தது. அடர்த்தியான தலைமுடி, காற்றில் எழுந்து எழுந்து அடங்கியது. இடது தோளில் நீளமான ஜோல்னா பையும் வலது தோளில் யாஷிகா காமிராவும் ஊஞ்சலாடின. ஜிப்பாவுக்கும் குர்தாவுக்கும் இடைப்பட்ட ஓர் உடையில் கஷ்டமாய் உள்ளே நுழைந்திருந்தான்.

''வாங்க ரமணன்...'' என்றாள் கல்பனா.

''ஹலோ...'' என்று சொல்லிப் புன்னகைத்தான் தீபக். ''கல்யாண மண்டபத்துல கடைசியாப் பார்த்ததோட சரி... அதுக்கப்புறம் உங்களைப் பார்க்கவே முடியலையே ரமணன். எங்கே போயிருந்தீங்க?''

''ஒரு வாரமா கிராமத்துப் பக்கம் டூர் அடிச்சிட்டிருந்தேன்...''



''எதுக்கு?''

''அடுத்த வாரம் சென்னைல இன்டர் ஸ்டேட் போட்டோகிராபிக் காம்படீஷன் ஒண்ணு நடக்கப் போகுது. அந்தக் காம்படீஷனுக்காக சில போட்டோ கிராப்ஸ் வேணும்... அதுக்காக... கிராமத்துப் பக்கம் போயிருந்தேன்.''

''கிராமத்துல என்ன கிடைக்கும்?''

''என்ன... கிடைக்குமாவா...? கோவணம் கட்டின சேரிப்பையன் - பொட்டக் காட்டுல கருகியும் கருகாமலும் நிக்கிற ஒத்தைப் பனைமரம் - மூஞ்சி பூராவும் சுருக்கம் விழுந்த கிழவன் - குளத்துல குளிக்கிற எருமை மாடு - புல்லுக்கட்டைத் தூக்கிட்டுப் போற பொண்ணு - ஏரோட்டற ஆளு - நடவு செய்யற பெண்கள்...'' ரமணன் சொல்லச் சொல்ல தீபக் கைகளை மேலே உயர்த்திக் கும்பிட்டான்.

''போதும் போதும்...''

''வாங்க ரமணன். உள்ளே வாங்க.'' கல்பனா ரமணனை உள்ளே கூட்டிக் கொண்டு போக, தீபக் பின்தொடர்ந்தான். ரமணன் கேட்டான்.

''நான் எதுக்காக இவ்வளவு காலைல உங்க வீட்டுக்கு வந்திருக்கேன் தெரியுமா கல்பனா?''

''சொன்னாத்தானே தெரியும்?''

''உன்னோட கல்யாண ஃபோட்டோ பூராவையும் - ஆல்பம் பண்ணிக் கொண்டு வந்திருக்கேன்.''

கண்களை அகல விரித்தாள் கல்பனா.

''நிஜமாவா? எங்கே பார்க்கலாம்..!''

''மொதல்ல எனக்குக் காப்பி கொண்டு வா... காப்பி உள்ளே போன பின்னாடிதான் - ஆல்பம் பையிலிருந்து வெளியே வரும்.''

சொல்லிக் கொண்டே ஹாலில் இருந்த சோபாவில் 'தொப்'பென்று உட்கார்ந்தான் ரமணன். தீபக் சொன்னான்: ''கல்பனா.. ரமணன் ஸாருக்கு காப்பி குடுத்து - நீ ஆல்பம் பார்த்துட்டிரு... நான் பத்து நிமிஷத்துல குளிச்சுட்டு வந்துடறேன்.''

''நிதானமாவே குளிச்சுட்டு வாங்க தீபக்... இன்னிக்கு உங்ககூட உட்கார்ந்துதான் டிபன் சாப்பிடப் போறேன்.''

தீபக் சிரித்துக் கொண்டே பாத்ரூமை நோக்கி போனான். கல்பனா சமையலறைக்குள் நுழைந்து - காப்பி டம்ளரோடு ரமணனை நெருங்கினாள்.

''இந்தாங்க நீங்க கேட்ட காபி... ஆல்பம் எங்கே?''

''இதோ...'' தன் ஜோல்னா பையிலிருந்து சிவப்பு வெல்வெட் மேய்ந்த ஆல்பத்தை எடுத்து நீட்டினான் ரமணன்; நீட்டிக் கொண்டே சொன்னான்: ''கல்பனா... நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்கக் கூடாது. ஃபோட்டோவில நீ இருக்கிற பளபளப்புக்கு மாப்பிள்ளை எடுபடவே இல்லை... நூறு வாட்ஸ் பல்புக்குப் பக்கத்துல ஜீரோ வாட்ஸ் பல்பு மாதிரி மங்கிப் போய்த் தெரியறார், மாப்பிள்ளை... நீ இன்னும் கொஞ்சம்



கவனமாயிருந்து மாப்பிள்ளையை செலக்ட் பண்ணியிருக்கலாம்.''

ஆல்பத்தைப் புரட்டப் போன கல்பனாவின் கை விரல்கள் சட்டென்று நின்றன. மெல்லத் தலையை உயர்த்தி ரமணனை ஏறிட்டாள். குரலில் கோபம் முலாம் அடித்திருந்தது.

''என்ன சொன்னீங்க ரமணன்?''

''ஸாரி... நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா... கல்பனா? எம்மனசுல இருந்து 'பளிச்'ன்னு வந்திடுச்சு... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னதாலே - வயித்தெரிச்சல் பட்டு இந்த மாதிரி சொல்றேன்னு... என்னைவிடு... நான் ரொம்பவும் சாதாரணம். ஒரு புவர் ஃபோட்டோ கிராபர். பர்சனாலிட்டியும் கிடையாது.... சம்பாதிக்கிற சாமர்த்தியமும் போதாது... ஆனா இந்த தீபக்கைக் காட்டிலும் அழகு, சொத்து, திறமை எல்லாத்திலேயும் நூத்துக்கு நூறு மார்க் வாங்கியிருந்த அந்த மகேந்திரனைக் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டே.... அதுதான் ஏன்னு எனக்குப் புரியலை. நீ அந்த மகேந்திரனைக் கல்யாணம் பண்ணியிருந்தா ஜோடிப் பொருத்தம் நல்லா இருந்திருக்கும்.''

கல்பனா ஆல்பத்தை பட்டென்று மூடினாள். ''ரமணன்! இதைச் சொல்றதுக்காகவா இங்கே வந்திருக்கீங்க? நான் சரியான பர்சனைத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கேன். உங்களை நான் கல்யாணம்

பண்ணிக்க மாட்டேன்னு சொன்னதுக்குக் காரணம் - நீங்க என்னோட அத்தை மகன், சொந்தத்திலே கல்யாணம் பண்ணிக்கிட்டா பின்னாடி பல பிரச்னைகள் வரும்.... அதுக்கு சரியான உதாரணம் என்னோட அம்மா, அவங்க பண்ணின தப்பை நானும் பண்ணக் கூடாதுன்னு நினைச்சுத்தான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னேன்... என்னைப் பெண் பார்க்க வந்த மகேந்திரன்கிட்டே எல்லாம் சரியா இருந்தும் ஒண்ணு மட்டும் எனக்கு அவர்கிட்டே பிடிக்கலை. அது, அவர் செய்யற தொழில்.''

''சினிமா எடுக்கிறது கேவலமான தொழிலா?''

''என்னைப் பொறுத்த வரைக்கும் சினிமா எப்பேர்ப்பட்ட உத்தமனையும் கெடுத்து விடும். அந்த மகேந்திரன் விஷயத்துல நான் ரிஸ்க் எடுக்க விரும்பலை. ஸோ... அவரை நிராகரிச்சேன். விளக்கம் போதுமா ரமணன்?''

''ஸாரி கல்பனா... நீ ஆல்பத்தைப் பாரு.''

''நான் ஆல்பத்தைப் பார்க்க விரும்பலை ரமணன். நீங்க இதை எடுத்துட்டுப் போயிடுங்க. அவர் ஏற்பாடு பண்ணின ஃபோட்டோகிராபர் ஒருத்தர் வேற ஆல்பத்தைக் கொண்டுட்டு வருவார். அதைப் பார்த்துக்கறேன்.''

''நான்தான் 'ஸாரி' சொல்லிட்டேனே கல்பனா! இனி ஒரு தடவை இப்படிப் பேச மாட்டேன். என்னைப் பத்திதான் உனக்குத்



தெரியுமே - நான் ஓர் ஓட்டை வாயன்னு.''

''இல்ல ரமணன். இன்னிக்கு நீங்க பேசின வார்த்தை சரியில்லை; அவரை க்ரிட்டிசைஸ் பண்ணிப் பேசினது எனக்குப் பிடிக்கலை. நீங்க தயவு பண்ணிப் போயிடுங்க.''

ரமணன் கையிலிருந்த காப்பி டம்ளரை - டீபாயின் மேல் அப்படியே வைத்துவிட்டு எழுந்தான். ரெண்டு கண்களிலும் 'அவமானம் அவமானம்' என்று போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. மறுபடியும் ''ஸாரி கல்பனா!'' சொல்லிவிட்டு வாசலை நோக்கி நடந்து வெளியேறினான்.

கல்பனா சோபாவுக்கு நன்றாய் சாய்ந்து உட்கார்ந்து - கண்களை மூடிக் கொண்டாள். மனசுக்குள் ரமணன் சற்று முன் பேசிய வார்த்தைகள் உஷ்ணமாய் தகித்தன.

சில நிமிஷங்கள் கழித்து -

பாத்ரூமின் கதவு 'க்க்ளக்க்க்' என்று திறக்க .. தலையைத் துவட்டியபடியே வெளிப்பட்டான் தீபக். கல்பனாவுக்கு எதிரேயிருந்த சோபா வெறுமையாயிருப் பதைப் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டான். ''கல்பனா! எங்கே ரமணனைக் காணோம்?''

''போயிட்டார்.''

''போயிட்டாரா? என்கூட, 'டிபன் சாப்பிடறேன்னு சொன்னாரே?''

''ஏதோ ஒரு முக்கியமான வேலையா, யாரையோ பார்க்கணுமாம். திடீர்னு ஞாபகம் வந்ததுமே புறப்பட்டுப் போயிட் டார். உங்ககிட்ட சொல்லச் சொன்னார்.''

''ஆல்பம்?''

''அது வேற ஆல்பமாம். மாத்திக் கொண்டு வந்துட்டாராம். நாளைக்குக் கொண்டு வர்றேன்னு சொல்லிட்டுப் போயிட்டார்.''

தீபக் அவளை உன்னிப்பாய் பார்த்தான். ''சரி... நீ ஏன் என்னவோ மாதிரி இருக்கே?''

''நல்லாத்தானே இருக்கேன்..? வாங்க டிபன் சாப்பிடலாம்.'' - தீபக்கின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு - டைனிங் ஹாலை நோக்கிப் போனாள் கல்பனா.

**கா**லை பதினோரு மணி.

பங்களாவில் தனியாய் இருந்த கல்பனா டி.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டி ருந்த நிமிஷம் - அந்த டெலிஃபோன் அழைப்பு வந்தது. டி.வி.யின் வால்யூமைக் குறைத்து விட்டு ரிஸீவரைப் போய் எடுத்தாள்.

''பேசறது யார்... கல்பனாவா?'' - ஓர் ஆண்குரல் கரகரப்பாய்க் கேட்டது.

''ஆமா... நீங்க யாரு?''

''என்னோட பெயரைச் சொல்றதுக்கு முன்னாடி புதுசாக் கல்யாணமான உனக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டாமா..? சொல்லிடறேன். கேட்டுக்கோ... சீக்கிரமே நீ உங்கம்மா வீட்டுக்குப் போகப் போறே!''

''என்ன சொல்றே...?''

''புருஷன் செத்துப் போனா... பெண்டாட்டி பொறந்த வீட்டுக்குத்தானே



போகணும்?'' - சொல்லிவிட்டுக் குரல் சிரிக்க -

கல்பனாவின் கையிலிருந்த ரிஸீவர் மெல்ல அதிர்ந்தது.

## 2

''**யா**ர்ரா நீ?'' - ரிஸீவரில் வெடித்தாள் கல்பனா.

மறுமுனையில் குரல் சிரித்தது. ''நீ வெள்ளைச் சேலை கட்டி - குங்குமத்தை அழிக்கிற அந்த விசேஷ நிகழ்ச்சிக்கு நானும் வருவேன்... அப்போ பார்த்துக்கோ... வெச்சிடட்டுமா ரிஸீவரை?''

''வெச்சிடாதே...'' - கல்பனா பதட்டமானாள்.

''வைக்க வேண்டாமா...? சரி பேசுவோம்... என்ன பேசப்போற?''

''நீ யார்ன்னு சொல்ல வேண்டாம். அவரை எதுக்காகக் கொல்லப்போறேன்னு சொல்லு. அவர் என்ன தப்புப் பண்ணினார்?''

''அவர் பண்ணின தப்பைச் சொல்லட்டுமா?''

''ம்... சொல்லு...''

''உன்னைக் கல்யாணம் பண்ணிக் கிட்டாரே... அது தான் தப்பு.'' - சொல்லிவிட்டு ரிஸீவரைப் பட்டென்று சாத்தினான், மறுமுனையில் இருந்தவன்.

கல்பனா ரிஸீவரை வைக்கத் தோன்றாமல்

அதன் வாயையே வெறித்துப் பார்த்து
கொண்டிருந்தாள்.

**தீ**பக் டிஸ்கஷன் ஹாலில் - ச
ஆபீஸர்களோடு ஒரு முக்கியமான
விவாதத்தில் இருந்தான். ஜப்பானிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட டிஜிட்டல்
கம்ப்யூட்டர்களின் செயல்பாடுகளில்
நேரிட்ட சில தவறுகள் நிர்வாகத்தைக்
குழப்பியிருந்தன.

டெக்னிஷியன் அட்வைஸர் தியானேஸ்
வரன் தீர்மானமான குரலில் சொல்லிக்
கொண்டிருந்தார்: ''டிஜிட்டல் நெட் ஒர்க்
சரியில்லை மிஸ்டர் தீபக்... இன்புட்டும்,
அவுட்புட்டும் மறுபடியும் டிஸ்பிளே
பண்ணிப் பார்க்கணும்.''

''க்ராபிக்ஸ் ரொம்பவும் மோசம்...
பிளாட்டர்லை சேர்ச் பண்ணுற கம்ப்யூட்டர்
எய்டட் டிசைன் நல்லா வரும்...''

''அதுக்குப் பதிலா எலக்ட்ரோ ஸ்டாடிக்
பிரிண்ட்டரை யூஸ் பண்ணலாம். என்ஜினியர்
ராமச்சந்திரராவை பம்பாயிலிருந்து
வரவழைக்கணும்.''

நிதானமான குரலில் - தீர்மானமான
முகங்களோடு - எதிரெதிரே உட்கார்ந்தபடி
தீவிரமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று அருகிலிருந்த இண்ட்டர்காம்
கூப்பிட்டது. ''வீ...வீ...வீ...வீ'' தியானேஸ்
வரன் ரிஸீவரை எடுத்துக் காதுக்குக்
கொடுத்துவிட்டு - 'அந்த விநாடியே



ரிஸீவரை தீபக்கிடம் நீட்டினார்.

''ஃபோன்கால் உங்களுக்கு மிஸ்டர்
தீபக்...''

ரிஸீவரை வாங்கி ''ஹலோ'' என்றான்.

''என்னங்க... நான் கல்பனா பேசறேன்.''

''சொல்லு கல்பனா... என்ன விஷயம்?''

''ஒரு நிமிஷம் வீட்டுக்கு வந்துட்டுப்
போறீங்களா?''

''ஏன்... ஏதாவது முக்கியமான
விஷயமா?''

''ஆமா... சீக்கிரமா வாங்க.''

''நான் அட்வைஸ் கமிட்டி மீட்டிங்ல
இருக்கேன் கல்பனா.''

''மீட்டிங் எத்தனை மணிக்கு முடியும்?''

''இன்னும் ஒருமணி நேரமாகும்.''

''மீட்டிங் முடிஞ்சதுமே நேரா வீட்டுக்கு
வாங்க.''

''ஏன்... கெஸ்ட் யாராவது வந்திருக்
காங்களா?''

''நேர்ல வாங்க சொல்றேன்.''

''சரி...''

தீபக் ரிஸீவரை வைத்துவிட்டு - சட்டைப்
பாக்கெட்டில் இருந்த கர்ச்சீப்பை எடுத்து
வியர்வை மினுமினுத்த முகத்தைத்
துடைத்துக் கொண்டான். அருகில் உட்கார்ந்
திருந்த தியானேஸ்வரன் கேட்டார்.

''என்ன மிஸ்டர் தீபக்... எனிதிங்
இம்பார்டெண்ட்?''

''நத்திங்.''

அடுத்த நாற்பது நிமிஷம் பூராவும் மறுபடியும் விவாதத்தில் போயிற்று. தீபக்கும் மற்றவர்களும் டிஸ்கஷன் ஹாலைவிட்டு வெளியே வரும்போது மத்தியானம் 12-00 மணி.

தீபக் நேராய்த் தன் மேஜைக்குப் போய் நாற்காலியில் சாய்ந்தான். சிகரெட் பாக்கெட்டையும் ஆஷ் ட்ரேயையும் நகர்த்தி வைத்துக் கொண்டு புகை பிடிப்பதற்கான ஆயத்தங்களில் இறங்கியபோது, மானேஜிங் டைரக்டர் சக்கரவர்த்தி அவனை அழைப்பதாக - ப்யூன் டேவிட் வந்து சொன்னான்.

தீபக் எழுந்து எம்.டி.யின் அறையை நோக்கிப் போனான். கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு ஏ.ஸி. அறைக்குள் நுழைந்தான்.

மானேஜிங் டைரக்டர் சக்கரவர்த்தி பேப்பர் வெயிட்டைக் கண்ணாடி மேஜையின் மேல் சுழற்றிக் கொண்டே காத்திருந்தார். தேக்குக் கட்டையை பாலீஷ் செய்த மாதிரியான வழுக்கை. சின்னக் கண்கள். வளைந்த மூக்கிற்குக் கீழே சொற்ப மீசை. மீசையின் அடிவாரத்தில் புன்னகைக்க மறந்த உதடுகள். சம்பிரதாயத்துக்காகச் சொன்னார், ''லஞ்சுக்குப் போற நேரத்துல உங்களைக் கூப்பிடறேன்...''

''ஸோ.. வாட்... ஸார்?''

''உட்காருங்க.'' - ஃபோம் நாற்காலியில்



தீபக் உட்கார்ந்தான். அவரையே பார்த்தான். அவர் கூப்பிட்டார்.

''மிஸ்டர் தீபக்!''

''ஸார்!''

''நீங்க இன்னிக்கு ராத்திரி ட்ரெய்ன்ல - டூர் போறீங்க, இல்லையா?''

''எஸ்... ஸார்.''

''ஹனிமூன்?''

''எஸ்...ஸார்'' என்றான் கொஞ்சம் வெட்கமாய்.

''இந்த ஹனிமூன் டூரை ரெண்டுநாள் கழிச்சு நீங்க வெச்சுக்க முடியாதா?''

''ஏன் ஸார்?''

''நீங்க இன்னும் ஒருமணி நேரத்துல சென்னை புறப்பட்டுப் போகவேண்டியிருக்கும் மிஸ்டர் தீபக். இது ரொம்பவும் கான்ஃபிடென்ஷியல். நம்ம ஸ்டாக் ஏஜெண்ட் ரத்தன் ஷாவைப் பத்தி ஒரு கம்ப்ளைண்ட் வந்திருக்கு. அது உண்மையா பொய்யான்னு கன்ஃபார்ம் பண்ணணும். யூ... ஆர்... த ரைட் பர்சன், ஃபார் திஸ். நீங்க ஒரேயொரு நாள் சென்னைல இருந்துட்டு - ரத்தன்ஷாவைப் பத்தி விசாரிச்சுட்டு உடனே கோயமுத்தூருக்கு வந்துடலாம். உங்களுக்கு சென்னை போய்ட்டு வர்றதிலே ஆட்சேபணை ஒண்ணுமில்லையே.''

''நோ... ஸார். நான் போய்ட்டு வர்றேன்.''

''தட்ஸ் குட். இன்னிக்கு மத்தியானம் கோவை எக்ஸ்பிரஸ்ல உங்களுக்காக ஏ.ஸி.

சேர் கார்ல ஒரு டிக்கெட் ரிசர்வ் பண்ணி யிருக்கு. இந்தாங்க டிக்கெட்."

"ட்ரெயின் டிபார்ச்சர் எத்தனை மணிக்கு சார்?"

"ஒன் ஃபார்ட்டி ஃபைவ். நீங்க இப்போ கிளம்பினா வீட்டுக்குப் போய் லஞ்ச்சை முடிச்சுக்கிட்டு ஸ்டேஷன் போக சரியா இருக்கும். இந்தாங்க, ரத்தன்ஷாவோட ஃபைல். ட்ரெயின் ஜர்னியிலேயே தரோவா படிச்சுப் பார்த்துடுங்க. ரிமாக்ஸ் பூராவையும் நோட் பண்ணிக்கிட்டு ஆளை மடக்கிக் கேளுங்க."

"[illegible]ஸ்... ஸார்..."

[illegible]ம்.டி. சக்கரவர்த்தி நீட்டிய ஃபைலையும், ரயில் டிக்கெட்டையும் வாங்கிக் கொண்டான் தீபக். அவருடைய கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு வெளியே வந்தான். லஞ்ச்சுக்காக ஆபீஸ் கலைந்து போயிருந்தது. கீழ்தள போர்ஷனுக்கு வந்து - அங்கே ஷெல்டரில் நின்றிருந்த - தன்னுடைய ஹோண்டாவின் மேல் பரவி அதன் இடுப்பை நெக்கென்று உதைத்தான். முதல் உதையிலேயே அதற்கு உயிர் பிடித்துக் கொண்டது.

போர்டிகோவின் வாசற்படியில் மோவாயைத் தாங்கியபடி உட்கார்ந்திருந்த கல்பனா ஹோண்டாவைப் பார்த்ததும் விசுக்கென்று எழுந்து நின்று கொண்டாள். ஹோண்டாவை ஊமையாக்கிவிட்டு



அவளை நெருங்கினான் தீபக். கேட்டான், "என்ன கல்பனா, என்ன விஷயம்..?"

"உள்ளே வாங்க சொல்றேன்..."

தீபக்கை இழுத்துக் கொண்டு உள்ளே ஓடினாள் கல்பனா. அவளுடைய நெற்றிப் பொட்டு, வியர்வையால் இளகியிருந்தது. அகலமான கண்களில் அமோக திகில் பயிராகியிருந்தது. கணவனை சோபாவில் உட்கார வைத்து விட்டுத் தானும் அவனருகே உட்கார்ந்தாள்.

கல்பனா குரல் உடையச் சொன்னாள்: "என்னங்க! நீங்க ஆபீசுக்குப் போனதுமே ஒரு பதினொரு மணிக்கு எனக்கு ஒரு ஃபோன் கால் வந்தது. 'பேசறது கல்பனாவா?'ன்னு கேட்டாங்க. நான் 'ஆமா'ன்னு சொன்னேன். 'உனக்கு கல்யாண வாழ்த்துத் தெரிவிக்க வேண்டாமா'ன்னு சொல்லிட்டு - 'நீ சீக்கிரமே உன்னோட பிறந்த வீட்டுக்குப் போகப் போறே. உன்னோட கணவன் உயிரோடு இருக்கப் போவதில்லை. நீ வெள்ளைச் சேலை கட்ற விசேஷத்துக்கு நான் வரப் போறேன். அப்போ என்னைப் பார்த்துக்கோ. உம் புருஷன் பண்ணின தப்பு, உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தான்'னு சொல்லிட்டு ரிஸீவரை வெச்சுட்டான்..."

கல்பனா சொல்லச் சொல்ல-

முகம் மாறியிருந்தான் தீபக்.

"ஃபோன் எத்தனை மணிக்கு வந்தது?"

"பதினொரு மணிக்கு..."

''பேசினது ஆண் குரலா?''

''ஆமா...''

''அந்தக் குரலை இதுக்கு முந்தி எங்கேயாவது கேட்டிருக்கியா?''

''இல்லீங்க. ரொம்பவும் முரட்டுத் தனமான குரல். குரலைக் கேட்கிறப்பவே வயித்தையெல்லாம் பிசையுதுங்க.''

தீபக் புன்னகைத்தான். ''உன்கூட யாரோ விளையாடியிருக்காங்க கல்பனா. என்னைக் கொலை செய்யற அளவுக்கு நான் யாருக்கும் எந்தத் துரோகமும் செய்யலையே!''

''இல்லீங்க. அந்த மிரட்டல் நிஜந்தான்னு என் மனசுக்குப் படுது.''

''இதோ பார் கல்பனா! என்னைக் கொலை செய்யப் போறவன் யாருக்கும் தெரியாம ரகசியமாகத்தான் அந்த விஷயத்தை மனசுல வெச்சிருப்பான். இப்படி டெலிபோன்ல சொல்லிப் பகிரங்கப்படுத்த மாட்டான். சரி வா சாப்பிடுவோம். நான் சாப்பிட்டுட்டு இன்னும் அரைமணி நேரத்துல கோவை எக்ஸ்பிரஸ்ஸைப் பிடிக்கணும்...''

''எதுக்கு...?''

''ஆபீஸ் வேலையா நான் சென்னை போகணும்.''

''அப்போ நம்ம டூர்?''

''சென்னை போயிட்டு வந்ததும் புறப்பட்டுடுவோம். சென்னைல ஒருநாள் வேலைதான். இன்னிக்கு ராத்திரியே போய் சென்னை சேர்ந்து நாளைக்குக் காலை



லேயே வேலையை முடிச்சுக்கிட்டு, த்தியானம் இன்டர்சிட்டியில புறப்பட்டு ாத்திரி பத்து மணிக்கெல்லாம் இங்கே ந்துடுவேன்.''

கல்பனாவின் கண்களில் மிரட்சி தரிந்தது.

''என்னங்க...?''

''ம்...''

''நீங்க இன்னிக்கு அவசியம் மெட்ராஸ் பாய்த்தான் தீரணுமா?''

''ஆமா கல்பனா. எம்.டி.யே கூப்பிட்டு, 'யூ ஆர் த ரைட் பர்சன். நீங்கதான் போயிட்டு ரணும்'னு சொல்லிட்டார்...''

''எனக்குப் பயமா இருக்குங்க...''

''அந்த டெலிபோன்காலை நினைச்சுப் யப்படறியா கல்பனா? அதெல்லாம் ம்மா. சிலபேருக்கு இதெல்லாம் ஒரு ஹாபி ாதிரி. வீட்ல பெண்கள் தனியா இருக்காங்கன்னு தெரிஞ்சாப் போதும். சில யோக்கியப் பசங்க ஏதாவது ஒரு டெலிபோன் பூத்துக்குள்ளே நுழைஞ்சு ஒரு பா காயினைப் போட்டு ஆபாசமாப் பேச ரம்பிச்சுடுவாங்க. கொலை பண்ணப் போறேன்னு மிரட்டுவாங்க.''

''இல்லீங்க, இந்த போன்கால் அப்பேர்பட்டதா தெரியலைங்க. அவன் பேசற பேச்சிலேயே ஓர் உஷ்ணம் தெரிஞ்சது.''

''இதைப்பத்தி நீ அலட்டிக்காதே கல்பனா.

வந்து பரிமாறு, நான் கிளம்பணும்.'
சொல்லிக் கொண்டே டைனிங் டேபி
நோக்கி வேகமாய்ப் போனான் தீபக்.

"என்னங்க, உங்க ஆபீஸ்ல உங்களுக்
பதிலா வேறயாரையாவது சென்னை
அனுப்பக் கூடாதா?"

"மாசம் பத்தாயிரம் ரூபா சம்பளம் த
எங்க எம்.டி. யோட பேச்சை நான் கே
வேண்டாமா கல்பனா? நான் சென்ன
போறதே ஒரு கான்ஃபிடென்ஷி
விவகாரம். என்னைத் தவிர வேற
பேர்லேயும் எம்.டி.க்கு நம்பிக்
யில்லை."

வாஷ்பேஸினில் கையைக் கழுவ
கொண்டு உட்கார்ந்தான் தீபக். கல்ப
தட்டை எடுத்து வைத்துப் பரிம
ஆரம்பித்தாள்.

"என்னங்க..."

"ம்..."

"நானும் உங்ககூட சென்ன
வரட்டுமா?"

"எனக்குத் துணையா, நீ வரப் போறியா

"ஆமா..."

தீபக் சிரித்தான். "நான் சென்னைக்
போறது ஆபீஸ் விஷயமா! அது
'கான்பிஃடென்ஷியல்'னு எம்.
சொல்லிட்டார். உன்னையும் கூட்டிட்
போனா அவர் ஒரு மாதிரியா ஃபீ
பண்ணுவார். நீ எதுக்கும் பயப்படா
கல்பனா. யாரும் என்னை ஒண்ணும் பண்



டியாது. சென்னைல ஒரு நாள்
வலைதான். நாளைக்கு ராத்திரியெல்லாம்
ன் சிரிச்சுக்கிட்டே வந்துடுவேன். ம்...
ம்பாரை இன்னும் கொஞ்சம் ஊத்து."

"எனக்கென்னமோ மனசு பூராவும்
க்திக்'ன்னு இருக்குங்க..."

தீபக் சாம்பார் சாத வாயோடு
சான்னான்: "வேணும்ன்னா உன்னோட
னநிம்மதிக்காக நான் ஒரு காரியம்
ண்ணட்டுமா?"

"என்னங்க?"

"பீரோவில் தூங்கிட்டிருக்கிற என்னோட
ஸ்டலை எடுத்துட்டுப் போறேன்."

"நீங்க என்னதான் சொன்னாலும்
ம்மனசுக்கு நிம்மதியில்லீங்க. நீங்க
ன்னையிலிருந்து திரும்பி வர்றவரைக்கும்
ன் நெருப்புல நின்னுட்டிருப்பேன்."

தீபக் சிரித்தான். "பட்டிக்காட்டுப்
பொண்ணுமாதிரி பேசாதே கல்பனா. நீ
லேஜுக்குப் போய் படிச்சவ. எவனோ
ருத்தன் மிரட்டினாங்கிறதுக்காகப் பயந்
றதா? தைரியமா இரு. இன்னிக்கு ராத்திரி
ந்த வீட்ல தனியா படுக்கப் பயமாயிருந்தா
ராஜாவையும் துணைக்கு வந்து படுக்கச்
சால்லு..."

தலையாட்டினாள் கல்பனா.

"ரசம் நல்லாயிருக்கு. இன்னொரு கரண்டி
த்து. எம் மூஞ்சியையே பார்த்துட்
ருக்கே..."

ரசத்தை ஊற்றினாள் கல்பனா.

''நான் தயிர் சாதத்தை முடிக்கிற...
குள்ளே நீ என்ன பண்றே... ஒரு சூட்கேஸ்...
ஒரு செட் டிரெஸ், ஷேவிங் செட், டேபி...
மேலே வச்சிருக்கிற ஆபீஸ் ஃபைல்...
எல்லாத்தையும் போட்டு ரெடி...
வெச்சிருக்கணும். நான் சாப்பிட்டு - ...
கழுவினதும் அப்படியே புறப்படணும்.''

கனமான வருத்தம் தோய்ந்த முகத்தோ...
அடுத்த அறையை நோக்கிப் போனா...
கல்பனா. அடிவயிற்றில் அவஸ்தைய...
அந்தத் திகில் புரண்டது.

**ரா**த்திரி மணி ஒன்பது.

பங்களாவின் எல்லா ஜன்னல்களை...
சாத்திவிட்டுப் படுக்கையறைக்குள் நுழை...
தாள் கல்பனா. அறைக்கு வெளியே பாய்...
உதறிப் போட்டுக் கொண்டிரு...
வேலைக்காரி சரோஜா கேட்டா...

''எம்மா.... அய்யா என்னிக்கு சென்னை...
யிலிருந்து திரும்பி வருவாரு?''

''நாளைக்கு ராத்திரி.''

''அப்போ நாளைக்கு ராத்திரி நான் படு...
வரவேண்டாம்?''

''வேண்டாம்...''

''இது ரொம்ப அநியாயம்மா.''

''எது?''

''கல்யாணமான ஒரு வாரத்துல அய்...
இது மாதிரி தனியா விட்டுட்டுப் போறத...

''பேசாம.. தொண தொணக்காமப்...



...ரோஜா.''

''சரிம்மா.''- நீர் யானை மாதிரி வாயைப் பிளந்து கொட்டாவி விட்டுக் கொண்டே போர்வையை உதறினாள் சரோஜா.

அதே விநாடி -

டெலிபோன் வீறிட்டது.

''அம்மா போன் கத்துது.''

படுக்கையில் சாயப் போன கல்பனா விருட்டென்று எழுந்து - டெலிபோனை நோக்கிப் போனாள். மனம் படபடத்தது. போனில் யார்? காலையில் பேசிய ஆசாமியா?'

ரிஸீவரை எடுத்தாள். ''ஹலோ...''

மறுமுனையில் அந்தக் கரகரப்பான குரல்

''என்ன கல்பனா... வீட்ல தனியாத்தான் இருக்கே போலிருக்கே?''

## 3

**ரி**ஸீவரில் வழிந்த குரலைக் கேட்டதும் - கல்பனா ஒரு விநாடி சுவாசிக்கத் திணறினாள். நடுங்கின கையால் ரிஸீவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

''நீ... நீ... யார்?''

மறு முனையில் குரல் சிரித்தது. ''நான் யார்ன்னு தெரிஞ்சு நீ என்ன பண்ணப் போறே கல்பனா? நாளைக்கு மத்தியானம்

விருந்துக்குக் கூப்பிடலாம்னு நினை
கிறியா?''

''அ....அ... அவரை ஒண்ணும் பண்
டாதே!'' குரல் குளிரியது கல்பனாவுக்கு.

''யாரை? உம் புருஷனைத்தானே? உ
இருக்கிற அத்தனை சாமிகளை
வேண்டிக்க கல்பனா... மெட்ராஸிலிரு
தீபக் உயிரோடு திரும்பி வந்தா
உன்னோட தாலி பாக்கியம். சரி... ச
போய் நிம்மதியாய்த் தூங்கு. ரிஸீவ
வெச்சுடட்டுமா?''

''ரிஸீவரை வெச்சுடாதே.''

''ஏன்?''

''எதுக்காக அவரோட உயிரை வாங்
துடிக்கிறே? அவர் உனக்கு என்ன கெடு
பண்ணினார்?''

''அவர் ஒண்ணும் பண்ணலை.''

''பின்னே?''

''உன்னை மாதிரியான ஓர் அழகு
பெண்ணை அந்த தீபக் கல்யாண
பண்ணியிருக்கானே, அதுதான் அவ
பண்ணின குற்றம்.''

''உனக்கென்ன பைத்தியமா பிடி
சிருக்கு?''

''அப்படித்தான் வெச்சுக்கோயே
குட்நைட். நாளைக்குக் காலைய
மறுபடியும் போன் பண்றேன். குளிச்சிட்
ஃப்ரெஷ்ஷா டெலிபோனுக்குப் பக்கத்தி
காத்திட்டிரு.''



சொல்லிவிட்டு -

மறுமுனையில் ரிஸீவரை பட்டென்று
மாத்தினான்.

கல்பனாவின் உடம்பு பூராவும் வியர்த்து
ஊற்றியது. கைகள் உதறிக் கொள்ள -
ரிஸீவரை வைத்தவள், தலையைப் பிடித்துக்
கொண்டு அப்படியே உட்கார்ந்தாள்.

'என்ன செய்யலாம்?'

'இதை வெறும் மிரட்டல் என்று
அலட்சியப்படுத்தி விட்டுவிடலாமா?
இல்லை... போலீஸுக்கு ஃபோன் செய்து
விஷயத்தைச் சொல்லலாமா?'

குழப்பமான சில நிமிஷ
யோசனைக்குப்பின்-

மறுபடியும் டெலிஃபோனைத் தொட்டு
ரிஸீவரை எடுத்தாள் கல்பனா. அவசர
போலீஸ் நெம்பரைச் சுழற்றினாள். உடனே
மறுமுனையில் போலீஸ் வாசனையோடு
அந்தக் குரல் சொன்னது. ''எமர்ஜென்ஸி
போலீஸ்.''

''ஸார்... இங்கே செவன் த்ரீ... ஒன்...
செவன்...டூ... எய்ட்... எய்ட் லேர்ந்து
பேசறேன். யாரோ ஒருத்தன் எங்க வீட்டுக்கு
ஃபோன் பண்ணி என்னை மிரட்டறான்.''

''நீங்க... யாரு? எங்கேருந்து பேசறீங்க?''

கல்பனா தன்னுடைய பெயரையும் வீடு
இருந்த இடத்தையும் சொன்னாள்.

மறுமுனை மறுபடியும் உத்யோகத்

தோரணையோடு கேட்டது.

''ஃபோன்ல என்னான்னு சொல்
மிரட்டறான்?''

''என்னோட கணவரைக் கொன்னுட
போறதா மிரட்டறான்.''

''உங்க கணவருடை பேரு?''

''தீபக்...''

''அவர் இப்போ எங்கே?''

''மெட்ராஸ் போயிருக்கார்.''

''எப்போ போனார்?''

''இன்னிக்கு மத்தியானம் கோவ
எக்ஸ்பிரஸ்ல.''

''அப்பஒன்னா இந்நேரம் அவர் சென்ன
போய் சேர்ந்திருப்பார்.''

'மே... பி... ஸார்.''

''சென்னைல எந்த லாட்ஜ்ல தங்குவார்

''தெரியலை ஸார். அவர் அவசரம
புறப்பட்டுப் போனதால நான் ஒண்ணு
கேக்கலை.''

''சரி. இந்த நிமிஷம் வீட்ல யார் ய
இருக்கீங்க?''

''நானும் வேலைக்காரியும்தான்.''

''உங்க கணவர் சென்னை போ
சேர்ந்ததும் ஃபோன் பண்ணுவாரா?''

''பண்ணினாலும் பண்ணுவார்.''

''ஓ... கே... அவர் அப்படி ஃபோ
பண்ணினா அவர் எங்
தங்கியிருக்கார்ன்னு கேட்டு எங்களு



இன்ஃபார்ம் பண்ணுங்க. உங்க பேர் என்ன சொன்னீங்க?''

''கல்பனா.''

''பயப்படாமே தைரியமா இருங்க.'' தைரியம் சொல்லி விட்டு ரிஸீவரைக் கவிழ்த்தார்.

**கோ**வை எக்ஸ்பிரஸ் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனின் ஐந்தாவது பிளாட்பாரத்தில் தன் நீளமான உடம்பை நுழைத்து நின்றபோது நேரம் சரியாக 10.15. ஜனங்கள் தூக்கக் கலக்கத்தோடும் - முகத்தில் தெரிகிற அப்பட்டமான பசி மயக்கத்தோடும் - ப்ரீஃப் கேஸ்களையும் ஏர்பேஸ் கான்வாஸ் பைகளையும் சுமந்து கொண்டு வெளியேறும் வழி பார்த்து நடந்தார்கள். வெளிச்சமாய் இருந்தது ஸ்டேஷன்.

ஏ.ஸி. கோச்சிலிருந்து கீழே உதிர்ந்தான் தீபக். ஏழு மணி நேரம் ஏர்கண்டிஷன் ஜில்லிப்பில் உடம்பை ஊறப் போட்டு வந்தவனுக்கு சென்னையின் சீதோஷ்ணம் லேசான கதகதப்போடு அவனை மொய்த்தது. ஸ்டேஷனின் உட்புறக் காற்றுமண்டலம் ஜனங்கள் விட்ட மூச்சால் கெட்டுப் போயிருக்க - ஸ்டேஷன் பூராவும் தேர்ஓடும் வீதியைப்போல் ஆரவாரமாய் இருந்தது. ஸ்டேஷனின் நிர்வாகம் ஒளி பரப்பிய - மிக்கி மவுஸ் கார்ட்டூன் படத்தைப் பெரியவர்களும் பற்கள் தெரிய சிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். போர்ட்

டர்கள் தமிழ் தெரியாத வடநாட்டுக் குடும்பங்களிடம் அரைகுறை இந்தியில் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு பாஸஞ்சர் புறப்பட்டுப் போகத் தன் கடைசி நிமிஷங்களை எண்ணிக் கொண்டிருக்க - ஏராளமான குழந்தைகளோடும் - இடம் பிடிக்கக் கம்பார்ட்மெண்ட், கம்பார்ட்மெண்ட்டாய் ஒரு குடும்பம் அலைந்து கொண்டிருந்தது. ஃபிலிம் டிவிஷன்ஸ் காரர்கள் அந்தக் காட்சியைப் பார்த்திருந்தால் - அதைக் காமிராவில் சுருட்டி - 'இடத்திற்காக நீங்களும் இப்படி அலைய வேண்டுமா? குடும்பத்தைக் கட்டுப்படுத்துங்கள்' என்று பிரசாரத் துண்டுப்படத்தை எடுத்திருப்பார்கள்.

தீபக் தன் இடக் கையிலிருந்த ப்ரீஃப்கேஸை வலக்கைக்கு மாற்றிக் கொண்டே வேகவேகமாய் வெளி வாசலை நோக்கி நடந்தான்.

'எந்த ஹோட்டலுக்குப் போனால் ரூம் கிடைக்கும்?'

'மவுண்ட்ரோடு ஓட்டல்கள் பக்கமாய்ப் போனால் - தயவு தாட்சண்யம் பார்க்காமல் ரூம் இல்லை என்று சொல்லி விடுவார்கள். எக்மோர் பக்கமாய்ப் போய்விட்டால்... பிரச்னை இல்லை. ஏதாவது ஒரு லாட்ஜில் இடம் பிடித்து விடலாம். இனிமேல் ராத்திரி நேரங்களில் மெட்ராஸ் வரக்கூடாது.'

யோசித்துக் கொண்டே நடந்த தீபக்கின் தோளை யாரோ தொட்டார்கள். தீபக் சட்டென்று திரும்பிப் பார்த்தான் -



மெல்லமெல்ல மலர்ச்சிக்குப் போனான். அவனுடைய உதடுகளிலிருந்தும் அந்த வார்த்தை தன்னிச்சையாய் உதிர்ந்தது. தன் எதிரே நின்றிருந்தவனைப் பார்த்துப் புன்னகையோடு கேட்டான்:

''நீ... பீட்டர்தானே?''

''நானேதான்...! பரவாயில்லை தீபக்... என்னை நல்லா ஞாபகம் வெச்சிருக்கே!'' என்று சொல்லிச் சிரித்த பீட்டர்க்குத் தீபக்கின் வயது. சதைப்பற்றில்லாத ஒடிசலான தேகம். லேசாய் மேடு தட்டிப் போயிருந்த நெற்றிக்குக் கீழ் - கண்கள் ஒரு கத்தியின் கூர்மையோடு மின்னின. சரேலென்று வழுக்கின மூக்குக்குக் கீழே 'ஐ'ப்ரோ பென்சிலால் வரைந்த மீசை ப்ளிச்சென்று தெரிந்தது. சிகரெட் புகையில் குளித்துக் குளித்து நிக்கோடின் கறை ஏறிய உதடுகளுக்கு உள்ளே - வரிசை தவறிய பல்வரிசை தீபக்கின் கண்களை உறுத்தியது.

அந்த பீட்டர் கேட்டான்: ''என்னடா மெட்ராஸ் பக்கம்?''

''ஆபீஸ் விஷயமாத்தான்...''

''எந்த ஆபீஸ்?''

ஓர் இரண்டு நிமிஷத்தைச் செலவழித்து தீபக் சொன்னான். தான் பார்க்கிற கம்பெனியின் வேலை, வாங்குகிற சம்பளம் எப்போதாவது போகிற வெளியூர்ப் பயணம் - எல்லாவற்றையும் சொன்னான்.

''கல்யாணம் ஆயிடுச்சா?''

''ம்... ஆயிடுச்சு... ஒரு வாரந்தான் ஆச்சு

நீயும் நானும் சந்திச்சு அஞ்சு வருஷம் இருக்கும். நீ எங்கே இருக்கேன்னு தெரியாததினாலே இன்விடேஷன் அனுப்ப முடியலை. ஆமா, நீ இப்போ என்ன பண்ணிட்டிருக்கே?''

''நடந்துக்கிட்டே பேசலாமா?''

''ம்... நட....''

நடக்க நடக்கப் பீட்டர் சொன்னான், ''காலேஜ் படிப்பை முடிச்சதுமே, மும்முரமா ரெண்டு வருஷம் வேலை தேடிப் பார்த்தேன். கிடைக்கலை. சர்வீஸ் கமிஷன் எழுதிப் பார்த்தேன். ஆனா அரசாங்கம் என்னோட சேவையை இழந்துடுச்சு. ரெண்டு வருஷம் மெட்ராஸ் பூராவும் நாய் மாதிரி அலைஞ்சதுலே - ஒரு பத்திரிகையில ரிப்போர்ட்டர் வேலை கிடைச்சுது. பொய் பேசற அரசியல்வாதிகளையும் நடிகை களையும் சந்திச்சுப் பேட்டி எடுக்கிறது என்னோட வேலை.''

''எந்தப் பத்திரிகையில இருக்கே?''

''காலைக் குரல்.''

''பெரிய பத்திரிகைதான்.''

''பேர்தான் பெரிசு... அநியாயச் சம்பளம்... வேற வழியில்லாமே இதுல ஒட்டிட்டிருக்கேன். மூணு வேளையும் வயித்தைக் கழுவவேண்டாமா?''

''சென்னைல நீ எங்கே தங்கியிருக்கே பீட்டர்?''

''அடையாறுல.''

''அடையாறுல எங்கே?''



''பாரதி அவென்யூ... அஞ்சாவது க்ராஸ்.''

''அம்மாவும் நீயும் மட்டுந்தான் தங்கியிருக்கீங்களா?''

''அம்மாவா...? அம்மா ரெண்டு வருஷத்துக்கு முந்தியே இறந்துட்டாங்க.''

''அடடே! என்னாச்சு?''

''ஹார்ட் அட்டாக்...''

''அப்போ... வீட்ல நீ மட்டும்தான் இருக்கியா?''

''ஆமா... ஆனா அது வீடில்லை. ஒரெயொரு ரூம் தான். பெரிய ரூம். மூணு நாலு பேர் தங்கலாம்... வீட்டுக்காரருக்கு சொந்த ஊர் சேலம். நான் மாசா மாசம் வாடகையை அவருக்கு எம்.ஓ. பண்ணி டுவேன். மெட்ராஸ்லே நீ வழக்கமா எங்கே தங்குவே தீபக்?''

தீபக் சிரித்தான். ''குறிப்பிட்ட லாட்ஜ்ன்னு கிடையாது. டீஸண்டா எந்த ஓட்டல் இருக்கோ... அந்த ஓட்டல்லே ரூம் கேட்டுப் பார்ப்பேன். இல்லேன்னா வேற லாட்ஜைத் தேடிப் போவேன்.''

''இன்னிக்கு நீ எந்த லாட்ஜையும் தேடிட்டுப் போக வேண்டாம். என்னோட ரூமுக்கே வந்து தங்கிக்கலாம்.''

''வேண்டாம்... உனக்கெதுக்கு சிரமம்?''

''இதிலென்ன சிரமம்...? நீ சென்னைல எத்தனை நாள் தங்கப்போறே?''

''நாளைக்கு ஒருநாள் மட்டுந்தான்.''

''நாளைக்கு ஒரு நாள்தானே..? வா... நம்ம

ரூமுக்கே போயிடலாம். அஞ்சு வருஷக் கதையைப் பேசித் தீர்க்கலாம் வா.''

''சொன்னாக் கேளு பீட்டர்...''

''நோ... நோ.. கேக்கமாட்டேன். அஞ்சு வருஷம் கழிச்சு அதிர்ஷ்டவசமாப் பாத்திருக்கோம். அஞ்சு நிமிஷம் பேசிட்டு உடனே கழட்டிட்டுப் போகப் பார்க்கறியா? நீ வசதியா செல்வச் செழிப்போடு இருக்கே. நான் ஒரு புவர் ரிப்போர்ட்டர். என்கூட வந்து தங்கறதை இன்சூலன்ட்ன்னு நினைக்கிறியா?''

''நோ.. நோ... அப்படியெல்லாம் இல்லை.''

''பின்னே... என் ரூமுக்கு... வாடா.'' - சொல்லிக் கொண்டே தீபக்கின் கையிலிருந்த ப்ரீஃப் கேஸை வாங்கிக் கொண்டான் பீட்டர்.

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள். பீட்டர், அடையாறு போக - அநியாய வாடகைக்கு ஓர் ஆட்டோவைப் பிடித்தான்.

**அடையாறு, பாரதி அவென்யூ.**

ஐந்தாவது க்ராஸ் ரோட்டின் கடைசியில் ஆட்டோ தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டு ஊமையானதும் - பீட்டரும் தீபக்கும் கீழே இறங்கினார்கள். பீட்டர் ஆட்டோ டிரைவருக்கு சார்ஜைக் கொடுத்து அனுப்பிக்கொண்டிருக்க - தீபக் தன் பார்வையால் அந்த பிராந்தியத்தைச் சுற்றிப்



பார்த்தான். அநேகமாய் அது ஓர் எக்ஸ்டென்ஷன் ஏரியா. வீடுகள் அதிகம் முளைக்காத பகுதி அது. நிறைய இருட்டு. நடுநடுவே சில இடங்களில் வெளிச்சப் பொட்டுகள். 'ஙொய்...' என்று ஓர் அமானுஷ்ய நிசப்தம்.

ஆட்டோ கிளம்பி - தெருமுனையைத் தாண்டியதும் - பீட்டர் தன் சட்டைப் பையிலிருந்த சாவியை எடுத்துக் கொண்டு அந்த வீட்டின் வாசற்படியில் ஏறினான். ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த வீடு. நீலநிறப் பெயிண்ட் அடித்த கதவைத் திறந்துகொண்டு பீட்டர் உள்ளே நுழைந்தான்.

''வாடா தீபக்.''

தீபக் உள்ளே போனான். பீட்டர் இடப்பக்கச் சுவரில் கையை வைக்க - இரண்டடி ட்யூப்லைட் ஒன்று வெட்கப்பட்டு - வெட்கப்பட்டு ஒளிர்ந்தது. கொஞ்சம் பெரிதான அறைதான். சுவரோரமாய் ஒரு கட்டில். அதனையொட்டி ஒரு மர பீரோ. காலண்டர்களில் சிரித்த நமீதா, ஆண்ட்ரியா. ஓர் அரசியல் தலைவரின் போட்டோ. இடப்பக்கச் சுவரோரமாய் ஒரு மேஜை. மேஜையின்மேல் காகிதங்கள். வர்ண ஸ்கெட்ச் பேனாக்கள். பாதி எழுதப்பட்ட ஒரு கட்டுரை.

பீட்டர் தன் சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டிக் கொண்டே கேட்டான், ''என்ன தீபக், நம்ம 'வசந்த மாளிகை' எப்படியிருக்கு?''

''பிரமாதமா இருக்கு.''

''ஓங்கி தாட்டுமா?''

''இல்லே. நானே வெச்சிருக்கேன்.''

''ஃபேஸ் வாஷ் பண்றியா தீபக்...? வீட்டுக்குப் பின்னாடி தொட்டி இருக்கு. குளிக்கிறதானாலும் குளிக்கலாம்.''

''வேண்டாம். நான் மொதல்ல படுக்கையில் சாயணும். ட்ரெய்ன்ல எழு மணி நேரம் பயணம் செஞ்ச அலுப்பு - கண்ணு ரெண்டையும் அசத்துது.''

''சரி. நீ கட்டிலில் படு. நான் இன்னிக்குக் கீழே பாயை விரிச்சுடறேன். நானும் நாளைக்குக் காலையில அஞ்சு மணிக்கு எந்திரிச்சு ஒரு கல்யாணத்துக்குப் போகணும்.''

''கல்யாணமா? யாருக்குக் கல்யாணம்?''

''நடிகை சங்கீதாவுக்கு.''

''அவளுக்குத்தான் ரெண்டு வருஷத்துக்கு முந்தியே கல்யாணமாயிடுச்சே!''

''போன வருஷம் அவ விவாகரத்து வாங்கிட்டாளே... அந்த விஷயம் உனக்குத் தெரியாதா? இது ரெண்டாவது கல்யாணம்... மாப்பிள்ளை கோடீஸ்வரன். அம்பது வயசு... முக்கியமான பத்திரிகை நிருபர்களுக்கு மட்டுந்தான் அழைப்பு. அதுல நானும் ஒருத்தன்.''

''நீ கல்யாணத்துக்குப் போயிட்டு எத்தனை மணிக்கு வருவே?''

''ஒருமணி நேரத்துலே வந்துடுவேன்.



நான் கல்யாணத்துக்குப் போயிட்டு வர்ற வரைக்கும் நிம்மதியாத் தூங்கு.'' - பீட்டர் சொல்லிக் கொண்டே மேஜை மேலிருந்த டைம்பீஸை எடுத்து அலாரம் செட் பண்ணினான்.

''அலாரம் எத்தனை மணிக்கு வெக்கிறே பீட்டர்?''

''அஞ்சு மணிக்கு.''

''என்னையும் அந்த நேரத்துக்குக் கொஞ்சம் எழுப்பி விடு... ஆஃபீஸ் ஃபைல்களைப் பார்க்கணும்...'' - தீபக் சொல்லிக் கொண்டே - ப்ரீஃப்கேஸைத் திறந்து - ஒரு ஃபைலை உருவி அதற்குள் நுழைந்தான். பீட்டர் வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு - ட்யூப்லைட்டை அணைத்து ஜீரோ வாட்ஸை ஒளிரவிட்டான்.

தீபக் கட்டிலிலும் - பீட்டர் பாயிலும் படுத்து -

வெகு நேரம் வரைக்கும் -

தம் கல்லூரிக் கால வாழ்க்கையைப் பற்றிப் பேசினார்கள். நண்பர்களைப் பற்றிப் பேசினார்கள். குடும்பங்களைப் பற்றிப் பேசினார்கள்.

பிறகு...

அசதி கண்களை அழுத்தியபோது மெல்ல மெல்ல தூங்கிப்போனார்கள்.

நிசப்தத்தை அறுத்துக் கொண்டு அலாரம் டைம்பீஸ் வீறிட்டது.

தீபக்கின் செவிப்பறையில் அது எதிரொலிக்க - அவன் போர்வையை விலக்கிக் கொண்டு விருட்டென்று எழுந்து உட்கார்ந்தான். அந்த மாற்றத்தைச் சட்டென்று உணர்ந்தான்.

எரிந்து கொண்டிருந்த ஜீரோ வாட்ஸ் விளக்கு இப்போது அணைந்து போயிருக்க - அறை அசாத்தியமான இருட்டில் இருந்தது.

அலறிக் கொண்டிருந்த அலாரத்தை நிறுத்துவதற்காக தீபக் எழுந்தான். அதே விநாடி

வீட்டின் பின்பக்கம் யாரோ 'தொம்' என்று குதிக்கும் சத்தம் கேட்டது.

## 4

தீபக் நிதானித்தான்.

அலாரம் இன்னமும் அலறிக் கொண்டிருந்தது. கையை நீட்டி அலாரத்தின் தலையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு - கட்டிலைவிட்டு இறங்கினான்.

சில விநாடிகளுக்கு முன் -

'தொம் என்று வீட்டின் பின்பக்கமாய் எழுந்த சத்தம் பிரமைதானா? இல்லை... நிஜமாகவே யாராவது குதித்தார்களா?'

'போய்ப் பார்க்கலாமா?'

'வேண்டாம்... பீட்டரையும் எழுப்பி - அவனையும் கூட்டிக் கொண்டு போகலாம்' - எண்ணத்தைச் செயலுக்குக் கொண்டுவர வாயைத் திறந்தான்.



''பீட்டர்... பீட்டர்...''

மௌனம்.

''பீட்டர்.''

நிசப்தம்.

'என்ன இப்படி தூங்குகிறான். அலாரம் மில் சைரன் மாதிரி இந்தக் கத்துக் கத்துகிறது. புரண்டுகூடப் படுக்காமல் அப்படியென்ன தூக்கம்?'

''பீ...ட்...டர்...'' - குரல் கொடுத்துக் கொண்டே கட்டிலினின்றும் மெல்ல நடந்து போய் இருட்டில் மசமசப்பாய்ப் படுத்திருந்த பீட்டரை நெருங்கி உட்கார்ந்தான்.

''பீட்டர்... அலாரம் அடிச்சாச்சு. எந்திரி... யாரோ நடிகை வீட்டுக் கல்யாணத்துக்குப் போகணும்னு சொல்லிட்டிருந்தியே'' - சொல்லிக் கொண்டே பீட்டரின் தோளைத் தட்டியவன் சட்டென்று அந்த - வித்தியாசத்தை உணர்ந்தான்.

தொட்ட கையில்-

'இச்சா - பிச்சா 'என்று எதுவோ ஒட்டியது.

என்ன அது?

ராத்திரி படுக்கும்போதே மேஜையின் மேல் பார்த்த சிகரெட் லைட்டரின் ஞாபகம் வரவே - மேஜை இருந்த இடத்தை அனுமானித்துக் கொண்டு வேகமாய்ப் போய் - இடது கையால் துழாவி லைட்டரை எடுத்து க்ளிக்கி - அது உமிழ்ந்த ஒளியில் தன் வலக்கையைப் பார்த்தான்.

ரத்தம்.

கட்டிகட்டியாகப் பிசுபிசுத்துப் போன ரத்தம்.

இருதயம் இரைச்சலோடு துடிக்க - சட்டென்று திரும்பிப் பார்த்தான். இடது கையால் அசைத்த லைட்டரின் ஒளியில்-

பீட்டர்-

கண்கள் நின்றுபோய்-

மார்பில் ஏராளமாய் வழிந்த ரத்தத்தோடும், - குத்திட்டு நின்ற கத்தியோடும் தெரிந்தான். விரித்திருந்த பாய் பூராவும் ரத்தம் சிதறியிருந்தது. தீபக் பயப் பார்வை பார்த்துக் கொண்டே பீட்டரிடம் வந்தான்.

'எப்படி..?'

'யார் வந்தார்கள்?'

கதவு லேசாய்த் திறந்திருந்தது: காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. 'சற்று நேரத்துக்கு முன்னால் 'தொம்' என்று கேட்ட சத்தம் - உள்ளே வந்துவிட்டுப் போனவன் மறு பக்கம் சுவரேறிக் குதித்த சத்தமாய் இருக்க வேண்டும். குதித்தவன் இன்னமும் தெரு முனையைத் தாண்டியிருக்கமாட்டான்.'

'போய்ப் பார்க்கலாமா?'

தீபக் எழுந்து வீட்டின் பின்பக்கக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் இருட்டுத் தெரிந்தது. கையிலிருந்த லைட்டர் ஒளியோடு, மெல்ல நடந்துபோய் வீட்டின் சுற்றுச் சுவர்க்கு அப்பால் மெல்ல எட்டிப் பார்த்தான்.



நீளமாய்த் தெரு கிடந்தது. ஒன்றிரண்டு தெரு விளக்குகள் மட்டும் தொலைவில் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தன.

'வந்தவன் எப்படிப் போயிருப்பான்?'

சுவரின்றும் கீழே இறங்கி மறுபடியும் வீட்டிற்குள் வந்தான். பீட்டரை முதலில் பார்த்தபோது இருந்த அதிர்ச்சி இப்போது மறைந்துபோய் மனசுக்குள் பயம் தலை தூக்க ஆரம்பித்தது.

'என்ன செய்யலாம்?'

'போலீசில் போய்த் தகவல் சொல்லலாமா? இல்லை... வந்த சுவடு தெரியாமல் வெளியே போய் விடலாமா?'

பின்னதுதான் உத்தமம் என்று அவனுக்குப் பட்டது. 'பீட்டரும் நானும் இங்கே வந்தது யாருக்கும் தெரியாது. பீட்டரைக் கொன்றவனுக்கு நான் முக்கியமில்லை. பீட்டரை முடித்ததும் கிளம்பி விட்டான். கிளம்பியவன் சும்மா இருக்காமல் ஒரு டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து போலீசுக்குப் போன் செய்து - தகவல் சொன்னாலும் சொல்வான். இங்கே இருக்கிற ஒவ்வொரு விநாடியும் ஆபத்தான விநாடி. 'முதலில் இந்த வீட்டை விட்டு வெளியேறவேண்டும்.'

யோசித்த தீபக் பரபரவென்று செயல்பட்டான். கட்டியிருந்த லுங்கியை அவிழ்த்துக் காமாசோமாவென்று மடித்து - தன்னுடைய ப்ரீஃப்கேஸுக்குள் தள்ளி னான். கண்களுக்குப் பழக்கமான இருட்டில்

நடந்து போய் - ஹேங்கரில் தொங்கிக் கொண்டிருந்த தன் பேண்ட் சர்ட்டுக்குள் நுழைந்து கொண்டான். ப்ரீஃப்கேஸின் வாயை 'ப்ளக்' என்று மூடி - எடுத்துக் கொண்டான்.

வாசல் கதவை நோக்கிப் போனவன்-

சட்டென்று நின்றான்.

'எதையாவது மறந்து வைத்துவிட்டுப் போகிறோமா..?'

யோசித்தவன் 'எதுவும் இல்லை' என்று தீர்மானம் செய்து கொண்டு வாசல் கதவைத் திறந்தான். தலையை மெல்ல வெளியே நீட்டி எட்டிப் பார்த்தான்.

தெருவில் யாருமில்லை.

ஏதோ ஒரு வீட்டில் கிழவனொருவன் விடாப்பிடியாய் இருமிக்கொண்டிருக்கிற சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

வாசற்படிகளில்-

மளமளவென்று இறங்கி - தெருவில் காலை வைத்தான்.

அதே விநாடி -

''தம்பி... தம்பி..''

முதுகுக்குப் பின்னால் அந்தக் குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான் தீபக்.

பக்கத்து வீட்டுத் திண்ணையில் குளிருக்கு முடங்கியிருந்த யாரோ ஒரு வயதான



பேர்வழி பீடி புகையும் வாயோடு தெரிந்தான்; கேட்டான்.

''மணி எத்தினி தம்பி..?''

''அஞ்சே கால்...''

''காசு இருந்தாக் குடுத்துட்டுப் போங்க தம்பி. டீ சாப்பிடணும்...'' சை! பிச்சை! தீபக் கொஞ்சம் நிம்மதியாகி வேகமாக நடந்தான். அந்தக் குறுக்குத் தெருவின் இரண்டுபக்கங்களிலும் இருந்த வீடுகள் சிலவற்றில் வெளிச்சம் தெரிந்தது.

'மின்சாரம் உயிரோடுதான் இருக்கிறது. பீட்டரின் அறைக்கு வந்தவன் வேண்டுமென்றே மின்சார இணைப்பைக் கெடுத்திருக்கிறான்.'

'வந்தவன் யார்?'

'பீட்டருக்கும் அவனுக்கும் என்ன விரோதம்?'

யோசித்துக்கொண்டே குறுக்குத் தெரு முழுவதையும் கடந்து - அடையாறு ரோட்டுக்கு வந்தான். தெருவின் திருப்பத்தில் கான்வாஸ் படுதாக்களைப் போர்த்திக் கொண்டு - நிறைய ஆட்டோக்கள் வரிசையோடு காத்திருக்க, தெரு முழுவதும் ப்ளாரஸண்ட் வெளிச்சம் தூவப்பட்டிருந்தது.

'இந்த ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ பிடிக்கக் கூடாது. கொஞ்சத்தூரம் நடந்து போய் - ஏதாவது ஓர் ஆட்டோ காலியாக வந்தால் ஏறிக்கொள்ள வேண்டியது. ஏதாவது ஒரு லாட்ஜுக்குப் போகச் சொல்லி

- அங்கே தங்கி வேலையை முடித்துக் கொண்டு உடனடியாக ஃப்ளைட்டையோ, ரயிலையோ பிடித்து ஊர் போய்ச் சேர்ந்துவிட வேண்டியதுதான்.'

''ஸார்..!''

குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தான் தீபக். வரிசை ஆட்டோக்களில் ஒன்றிலிருந்து வெளிப்பட்ட அந்த ஆட்டோ டிரைவர் நின்றிருந்தான். கேட்டான்.

''ஆட்டோ வேணுமா... ஸார்?''

''வேண்டாம்ப்பா.''

''மீட்டருக்கு மேல நீங்க ஒரு பைசா எக்ஸ்ட்ரா தர வேண்டாம் ஸார்... மீட்டர் ரேட்டே போட்டுக்கலாம்... சென்ட்ரலா? பஸ் ஸ்டாண்டா ஸார்?''

''ஆட்டோ வேண்டாம்பா.''

சொல்லிவிட்டு விடுவிடுவென்று நடந்தான். மெயின் ரோட்டில் அந்த விடிகாலையில் லேசாய்ப் போக்குவரத்து ஆரம்பமாகியிருந்தது. ரோட்டோரத்தில் முதுகு மடங்கியிருந்த சைக்கிள் ரிக்‌ஷாக்கள் நிமிர்ந்து கொண்டிருக்க - ஆவின் பால் பூத்துக்களில் க்யூக்கள் அரும்பியிருந்தன. ஹைவேஸ் மரங்களில் குடியிருந்த பட்சி வர்க்கங்கள் காச் மூச்சிட்டன. ராத்திரி ட்யூட்டி பார்த்து (?) தூக்கம் கெட்ட கண்களோடும் - கொட்டாவி விடும் வாய்களோடும் எதிரே வந்து கொண்டிருந்த கான்ஸ்டபிள்களைப் பயமாய்ப் பார்த்துக்



கொண்டே அவர்களைக் கடந்தான்.

பத்து நிமிஷ நடை.

அடையார் கேட் வந்தது.

அந்தத் திருப்பத்தில் நின்று - எதிர்ப் பக்கமாய் பிறிட்டு வந்த ஒரு காலியான ஆட்டோவில் ஏறிக் கொண்டான்.

''எங்கே ஸார் போகணும்?''

''ஹோட்டல் சேர்மாணி.''

''மீட்டருக்கு மேலே அஞ்சு ரூபா ஆகும் ஸார்!''

''தர்றேன்.''

டிரைவர் மீட்டரைப் போட்டுவிட்டு - ஆட்டோவை நகர்த்தினான். குளிர்காற்றை அறுத்துக் கொண்டு ஆக்ஸிலேட்டரைப் பிடித்தான். ஆட்டோ 'சிர்ர்ர்ர்'ரென்று பறந்தது.

தீபக் தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்த கர்ச்சிப்பை எடுத்து - வியர்த்துப் போயிருந்த தன் முகத்தை அழுத்தமாய்த் துடைத்துக் கொண்டான். பயத்தில் காய்ந்து போன உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான்.

சேர்மாணி ஹோட்டல் வாசலில் ஆட்டோ நின்ற போது - நேரம் 5.25. டிரைவர் கேட்டதைக் கொடுத்து விட்டு - ப்ரீஃப்கேஸோடு ஹோட்டலின் ரிசப்ஷன் அறையை நோக்கிப் போனான் தீபக்.

ஹோட்டல் சேர்மாணி - சமீபத்திய புது ஹோட்டல், நெட்டுக்குத்தாய் ஏழு மாடிகளோடு நின்றிருந்தது.

'ஹோட்டல் செர்மாணி இன்டர் நேஷனல்' என்று பெயர்ப்பலகையில் ஆங்கிலப் பாஷையில் பெருமையடித்துக் கொண்டார்கள். போர்டிகோவின் வாசற் படிகளில் சிவப்பு நிற கார்ப்பெட்டை விரித்து - இருபக்கத்திலும் ரோஜாத் தொட்டிகள் வைத்து, அதை ஆரோக்கியமாய் வளர்த் திருந்தார்கள். ரிசப்ஷன் கௌண்ட்டரில் நின்றிருந்த பெண் அந்த அதிகாலையில் ஒர் அல்ட்ரா வயலெட் கதிர் மாதிரி - ஆட்களை அசரடித்தாள். தீபக்கைப் பார்த்ததும் லேசாய் லிப்ஸ்டிக் பூசிய உதடுகளில் 'குட்மார்னிங்' சொல்லிப் புன்னகைத்தாள்.

''வாட் கேன் ஐ டூ ஃபார் யூ ஸார்?''

''ஐ வுட் லைக் டு ஸ்டே ஹியர்.''

''வெல்கம் ஸார்... மே... ஐ... நோ... யுவர் நேம்?''

''தீபக்.''

''வாட் கைண்ட் ஆஃப் அக்காமடேஷன் டு யூ நீட்?''

''சிங்கிள் ரூம்.''

''வித் ஏ.ஸி... ஆர் நான் - ஏ. ஸி?''

''நான் - ஏ. ஸி....''

அவள் லெட்ஜரை நகர்த்திக் கொண்டு தீபக்கின் அட்ரஸ், உத்யோக விவரங்களைக் குறித்துக் கொண்டு, வெல்வெட் பரப்பில் தொங்கிய கீ போர்டிலிருந்து சாவியொன்றை உருவினாள். அருகே நின்றிருந்த ரூம் பாயிடம் கொச்சைத் தமிழில் பேசி தீபக்கோடு லிஃப்டில் அனுப்பி வைத்தாள்.



லிஃப்ட் மேலேறிக் கொண்டிருந்தது.

அவனுடைய ப்ரீஃப்கேஸைக் கையில் பற்றியிருந்த அந்த ரூம் பாய் தயக்கமாய் தீபக்கை ஏறிட்டான்.

''ஸார்..''

''என்னப்பா..?''

''உங்க இடது கையிலே என்ன ஸார் சிவப்பா? ரத்தமா...?''

திடுக்கிட்டுப் போய் தன் இடக்கையைக் குனித்து பார்த்தான் தீபக். பீட்டரைத் தொட்டபோது அவன் விரல்களில் பட்ட ரத்தம், கை விரலிடுக்குகளில் காய்ந்து போய்த் தெரிந்தது.

''ஆ...ஆமா... ர... ரத்தம்தான்... அடிபட்டுடுச்சு..''

''ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் இருக்கு. கொண்டு வரட்டுமா ஸார்?''

''வேண்டாம். என்கிட்டயே மருந்து இருக்கு. ரூமுக்குப் போனதும் போட்டுக்கிறேன்.'' அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே-

லிஃப்ட் தட்டென்று நின்றது.

ரூம் பாய் வெளியே வந்து முன்னால் நடந்து போய் ரோட்டைப் பார்த்த மாதிரி இருந்த அந்த 401 - ம் நெம்பர் அறைக் கதவுக்குச் சாவியைக் கொடுத்தான்.

கதவைத் திறந்து உள்ளே போனார்கள். வால்பேப்பர் ஒட்டப்பட்ட சுவர்களோடு அறை சுத்தமாய்த் தெரிந்தது. ப்ஃரீப்

கேஸைக் கட்டிலின் மேல் வைத்துவிட்டுப் பையன் நகர்ந்ததும், அறைக் கதவை உட்புறமாய்த் தாழிட்டுக் கொண்டான் தீபக்.

முதலில் குளிக்க வேண்டும். தன் இடக்கையின் விரல்களுக்கு மத்தியில் காய்ந்து போயிருந்த ரத்தப் 'பொருக்கு' களைப் பார்த்துக் கொண்டே பாத்ரூமை நோக்கிப் போனான்.

சுமார் பத்து நிமிஷம் ஷவரின் பீச்சல்.

குளியலை முடித்துக் கொண்டு வெளியே வந்தான். மனதில் 'திக் திக்'கோடு டவலால் உடம்பைத் துடைத்துக் கொண்டிருந்தவனை டெலிஃபோனின் அழைப்பு மணி ஈர்த்தது.

தலையில் ஈரம் சொட்டச் சொட்டப் போய் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

ரிஷப்சனிலிருந்து கேட்டார்கள்.

''ஸார்... நீங்க மிஸ்டர் தீபக்?''

''எஸ்...''

''உங்களுக்கு ஃபோன்..''

''எனக்கா? லைன் குடுங்க...''

கொடுத்தார்கள். தீபக் குரல் கொடுத்தான்.

''ஹலோ...''

மறுமுனையில் குரல் சிரித்தது. ''என்ன தீபக், ஹோட்டல் ரூம் வசதியாயிருக்கா?''

''யார்... நீங்க?''

''பீட்டரோட ஃப்ரெண்ட்...''

''...............''



''என்ன தீபக் மௌனமாயிட்டே? பீட்டர் மேலே உனக்கு என்ன கோபம்..? அவனை ஏன்...?''

''இதோ பார், ஃபோன்ல எதும் பேசாதே நேர்ல வா... நான் உன்கிட்ட நடந்ததைச் சொல்லணும்...''

''நீ என்ன சொன்னாலும் நான் நம்பணுமே!''

''தயவு பண்ணி நம்பு. நான் எங்கே வரட்டும்?''

''இன்னும் அரைமணி நேரத்தில எல்.ஐ.சி. பில்டிங் முன்னாடி வந்து நில்லு. இப்போ மணி என்ன?''

''5.45.''

''ஆறேகால் மணிக்கு வரமுடியுமா?''

''வர்றேன்...''

''வா...''

ரிஸீவர் மறுமுனையில் சாத்தப்பட, பயத்தில் சுவாசிக்கத் திணறினான் தீபக். கண்ணுக்குத் தெரியாத வலை, தன் மேல் ஸ்லோமோஷனில் மெல்ல மெல்லக் கவிழ்வதை உணர்ந்தான்.

'யார் அவன்?'

'அவனிடமிருந்து எப்படித் தப்புவது?'

## 5

சரியாய் ஆறு மணிக்கு அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான் தீபக்.

இருதயப் பிரதேசம் முழுவதும் ஒரு போர்க்கால பதட்டம் பரவியிருந்தது. கோவையை விட்டு நேற்றைக்கு மத்தியானம் புறப்பட்டபோது, கல்பனா சொன்ன வார்த்தைகள் மனசுக்குள் மறுபடியும் புரண்டன. 'அவளுடைய எச்சரிக்கையை மீறி சென்னை வந்தது மகாத் தப்பு. யாரோ என்னைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறான்.'

'அதுவும் கோயம்புத்தூரிலிருந்தே ரயிலில் என்னோடு பயணம் செய்து இந்த சென்னைக்கு வந்திருக்கிறான். நான் பீட்டரோட போவதைப் பார்த்திருக்கிறான். பீட்டரைக் கொலை செய்து அந்தப் பழியில் என்னை மாட்டிவிட முயற்சி செய்திருக்கிறான்.'

'யாரவன்?'

தீபக் வியர்த்துப். போன முகத்தோடு அறைச்சாவியை ரிஷப்சன் கௌன்ட்டரில் கொடுத்துவிட்டு வெளியே வந்தான். ஹோட்டல் வாசலில் காத்திருந்த ஆட்டோ வரிசையில் ஓர் ஆட்டோவை பொறுக்கிக் கொண்டான். போக வேண்டிய இடத்தைச் சொல்லி விட்டுச் சாய்ந்து உட்கார்ந்தான். இருதயம் வேகமான துடிப்பில் பம்மியது.

ஆட்டோ கிளம்பியது.

ஓர் இரண்டு நிமிஷப் பயணம்.

வெறிச்சோடிப் போயிருந்த மவுண்ட் ரோட்டில் சுகமாய் வழுக்கிய ஆட்டோ எல்.ஐ.சி. கட்டடத்தின் முன்னால் போய்



மௌனமானது. தீபக் இறங்கிக் காசைக் கொடுத்து டிரைவரை அனுப்பிவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான். வெறிச்சென்ற ஒரு சூழ்நிலை.

பஸ் ஷெல்டருக்குக் கீழே நின்று கவலையாய் - பஸ் வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்த நான்கைந்து பேர்களைத் தவிர அங்கே வேறு யாருமில்லை. எல்.ஐ.சி. கட்டடத்தின் பிரம்மாண்டமான உடம்பின் மேல் மோதிய கடல்காற்று சட்டென்று கீழே இறங்கி அண்ணாசாலையை அலம்பிக் கொண்டு போக - அந்த வரிசைக் கட்டடங்கள் யாவும் கண் விழிக்காமல் இருந்தன.

தீபக் தன் மணிக்கட்டிலிருந்த வாட்சைப் பார்த்தான்.

நேரம் 6.06.

'வரப் போகிறவன் யார்..?'

'என்மேல் அவனுக்கு என்ன கோபம்? பீட்டரைக் கொலை செய்து அந்தப் பழியில் என்னை மாட்ட வைப்பதில் அவனுக்கு என்ன லாபம்?' - யோசித்துக் கொண்டிருந்த போதே-

''ஸார்...''

தனக்குப் பின்பக்கமாய் ஒரு கீச்சுக் குரல் கேட்க-

திரும்பிப் பார்த்தான் தீபக்.

அந்தப் பிச்சைக்காரச் சிறுவன் நின்றிருந்தான். அழுக்கு முகம். காற்றில் பறக்கும் செம்பட்டை முடி. கிழிந்த கந்தல்

சொக்காய், நார் நாராய்ப் பிய்ந்து போனா டிராயர். பிச்சை கேட்க வந்தவன் மாதிரி தெரியாத பாவனையோடு அந்தச் சிறுவன் சுற்று முற்றும் ஒரு ஜாக்கிரதைப் பார்வை பார்த்துக் கொண்டு தீபக்கை நெருங்கினான்.

''ஸார்... உங்க பேர்தான் தீபக்கா?''

தலையாட்டினான் தீபக்.

அடுத்த விநாடி தன் இடது உள்ளங்கையில் மறைத்து வைத்திருந்த ஒரு காகிதத் துண்டை எடுத்து தீபக்கிடம் நீட்டினான் அவன்.

''இந்தாங்க ஸார்...''

''என்னடா அது?''

''கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒர் ஆள் பைக்கிலே இங்கே வந்தார் ஸார். நான் அந்தக் கட்டடத்துப் படிக்கட்டுல உட்கார்ந்துட்டிருந்தேன். என்னைக் கூப்பிட்டார். இந்தக் காகிதத்தையும் ஒரு பத்து ருபா நோட்டையும் கையில குடுத்து, 'இன்னும் கொஞ்ச நேரத்துல 'தீபக்'ன்னு ஒருத்தர் இங்கே வருவார். அவர்கிட்டே இந்த லெட்டரைக் குடுத்துடு'ன்னு சொன்னார் ஸார்.''

கைநீட்டிக் கடிதத்தை வாங்கிக் கொண்டான் தீபக். மெல்லப் பிரித்துப் பார்வையை அதில் போட்டான். ஆங்கிலத்தில் வேகமான கையெழுத்தில் நான்கே வரிகள்.

**''போலீஸ் மோப்பம் பிடிக்கிறது. நீ சென்னையில் இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்து. உடனே ஊருக்குப் புறப்பட்டுப் போய்விடுவது உத்தமம். நான் அங்கே வந்து உன்னைத் தொடர்பு கொள்கிறேன்.**

**- இப்படிக்கு உன் புது நண்பன்.**



கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு நிமிர்ந்தான் தீபக். நெற்றியோரம் சரசரவென்று வியர்வை அரும்பிக் கண்ணின் மேல் சொட்டியது. அந்த அழுக்குச் சிறுவன் இன்னமும் தீபக்கின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, தீபக் குறுக்கிட்டான்.

''தம்பி, பைக்ல வந்த ஆள் எப்படியிருந்தான்?''

''குண்டாயிருந்தார் ஸார்... கண்ணாடி போட்டிருந்தாரு. கோட்டுப் போட்டிருந்தாரு. மீசை பெரிசா வெச்சிருந்தாரு.''

தீபக் யோசித்தான்.

'இந்த அடையாளங்களில் நமக்குப் பரிச்சயமானவர் யாராவது இருக்கிறார்களா?' தீவிரமாய் யோசித்தவன் மனசுக்குள் யாரும் பிடிபடாமல் போகவே அந்தச் சிறுவனை ஏறிட்டான்.

''தம்பி..!''

''ஸார்..!''

''அந்த ஆள் பைக்குலேதானே வந்தார்?''

''ஆமா... ஸார்...''

''பைக் நம்பரைக் கவனிச்சியா?''

பையன் பின்னந்தலையைச் சொறிந்தான். ''நான் பார்க்கலை ஸார். வந்தவர்

பணத்தையும் சீட்டையும் குடுத்துட்டு உடனே பொறப்பட்டுப் போயிட்டார்.''

''நல்லா ஞாபகப்படுத்திச் சொல்லு தம்பி. காசு தர்றேன்.'' - தீபக் தன் மணிப்பர்ஸை உருவ ''இல்ல... ஸார். நான் நம்பரைப் பார்க்கலை.'' - சொல்லிக்கொண்டே அந்தப் பையன் - தீபக்கின் முகத்தைப் பார்த்து - மெதுவாய் ஓட ஆரம்பித்தான். கண்களில் பயம் வந்திருந்தது.

''டேய்... தம்பி... நில்லு!''

அவன் நிற்கவில்லை. எல்.ஐ.சி.க்குப் பக்கத்தில் பிரிந்து போன ஒரு குறுகலான சந்தில் நுழைந்து மறைந்து விட்டான்.

தீபக் மறுபடியும் கையிலிருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்தான். கிறுக்கலாய் ஓடியிருந்த அந்த ஆங்கில வரிகளை இதற்கு முன் எங்கேயாவது பார்த்திருக்கிறோமா என்று அரை நிமிஷ நேரம் பார்வையை அதில் நிலைநிறுத்தினான்.

அந்தக் கையெழுத்தை இதுவரை - எங்கேயும் பார்த்ததாகவே அவனுக்கு ஞாபகமில்லை. தீபக் மெதுவாய் நடந்துகொண்டே கண்களைச் சுழற்றினான்.

'அந்த பைக் பேர்வழி நிச்சயமாய் - இதே ரோட்டில் எங்கேயாவது நின்று கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்.'

'யாரவன்?'

தீபக் யோசித்துக்கொண்டே-

ஹோட்டல் அறைக்குப் போக ஆட்டோ ஏதாவது கிடைக்குமாவென்று பார்த்தான்.



கொஞ்சத்தொலைவில் ஆட்டோ ஒன்று வேகமாய் வந்து கொண்டிருந்தது.

**கா**லை ஏழேகால் செய்தியைச் சிரத்தையாய்க் கேட்டு விட்டு - ரேடியோவின் வாயைச் சாத்தினாள் கல்பனா. அந்த நேரத்துக்கே குளித்து அருகேயிருந்த ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயிலுக்குப் போய் தீபக்கின் பெயருக்கு ஓர் அர்ச்சனையையும் செய்து வந்திருந்தாள். தூங்கும் நிமிஷங்களைத் தவிர மற்ற எல்லா நேரமும் தீபக்கின் ஞாபகமாகவே இருந்தது.

வேலைக்காரி சரோஜா சமையலறையினின்றும் வெளியே வந்தாள். வெற்றிலைச் சாறை வாய் நிறைய அதக்கிக் கொண்டு கேட்டாள்.

''டிபன் என்னாம்மா பண்ணட்டும்?''

''எதையாவது பண்ணு...''

''வெங்காய உப்புமா பண்ணட்டுமா?'' -வேலைக்காரி சரோஜாவுக்குப் பிடித்த அயிட்டம் அது. கல்பனா தலையாட்டினாள்.

''பண்ணு... பண்ணு...''

''ஏம்மா மூஞ்சி ஒரு மாதிரி இருக்குது?''

''நல்லாத்தானே இருக்குது?''

''அய்யா மெட்ராஸு போயிட்டார்ன்னு கவலைப்படறியாம்மா? அதான் ராத்திரி வந்துடப் போறாரே. அய்யா மாத்திரம் மெட்ராஸ்ல சந்தோஷமாவா இருப்பாரு..?

அவருக்கும் உங்க ஞாபகமாத்தான் இருக்கும். எனக்கும் இப்படித்தாம்மா. எனக்குக் கண்ணாலம் ஆன புதுசுல எம் புருஷன் பக்கத்து வீட்ல இருக்கிற அண்டாவைத் திருடிட்டு ஜெயிலுக்குப் போயிட்டாரு. அப்போ... அந்த மூணு மாசமும் நான் பட்ட பா...டு... இ...ரு...க்...கே.''

கல்பனா முறைப்பதைப் பார்த்ததும் சரோஜா மெல்லப் பின்வாங்கிச் சமையலறையை நோக்கிப் போனாள். கல்பனா நெற்றியைப் பிடித்துக் கொண்டு சோபாவுக்கு வந்து சாய்ந்தாள்.

அதே விநாடி

வாசல் அழைப்பு மணி கிணுகிணுத்தது.

வேகவேகமாய் எழுந்து போய்க் கதவைத் திறந்தாள்.

முதல் அத்தியாயத்தில் வந்த ரமணன் மறுபடியும் வந்திருந்தான். அதே கோலம். தோளில் ஜோல்னாப் பை. யாஷிகா காமிரா. உதட்டில் புன்னகை.

''குட்மார்னிங் கல்பனா.''

''குட்மார்னிங்...''

''எம்மேல இன்னமும் கோபம் இருக்கா?''

''உள்ளே வாங்க ரமணன்.''

''அம்மாடி! எம்மேல உனக்குக் கோபமில்லை. தப்பிச்சேன்.'' சொல்லிக் கொண்டே ரமணன் கல்பனாவைப் பின்தொடர்ந்து உள்ளே போனான்.



...னாவைக் காட்டினாள் கல்பனா.

...உட்காருங்க ரமணன்.''

...மணன் உட்கார்ந்தான். ''மிஸ்டர் தீபக் ...னமும் டென்னிஸ் கோர்ட்டிலிருந்தே ...லையா?''

...அவர் சென்னை போயிருக்கார்.''

...அட..... எப்போ?''

...நேத்தைக்கு மத்தியானம்.''

...என்ன திடீர்னு?''

...கம்பெனி விஷயமாய்.''

...எப்போ திரும்பறார்?''

...இன்னிக்கு ராத்திரி.''

...சொன்ன கல்பனாவை உற்றுப் பார்த்தான். ...ன்ன கல்பனா, உன்னோட ஃபேஸ்ல ...னமோ மிஸ்ஸிங்? ஏன் என்னவோ மாதிரி ...க்கே? நேத்தைக்கு நான் சொன்ன ...ர்த்தை இன்னமும் உன்னோட மனசுக்குக் ...டமாயிருக்கா?''

...நோ... நோ... அதையெல்லாம் அப்பவே ...ந்துட்டேன்...''

...பின்னே?''

...ரமணன்! நான் இப்போ... ...ால்லப்போற விஷயத்தை வேற ...ர்கிட்டேயும் சொல்லக்கூடாது...''

...லைத் தாழ்த்திக் கொண்டாள் கல்பனா.

ரமணன் முகம் மாறினான்.

''என்ன கல்பனா?''

''நேத்திலிருந்து டெலிபோன்ல ஒரு

மிரட்டல் வந்துட்டேயிருக்கு.''

''மிரட்டலா... என்ன மிரட்டல்?''

''கொலை பண்ணப்போறதா மிரட்டல்...''

''யாரை?''

''அவரைத்தான்...''

''மிஸ்டர் தீபக்கையா...? யாரவன்?'' பதட்டமானான் ரமணன். ஜோல்னாப் பையையும் - காமிராவையும் சுழற்றி சோபாவின் மேல் வைத்தான்.

''தெரியலை... ரமணன்!'' கல்பனாவின் கண்களில் நீர் கோர்த்தது.

''இந்த மிரட்டல் தீபக்குக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''தெரிஞ்சுமா... சென்னை போயிருக்கார்? நீ எப்படி அவரைப் போகவிட்டே?''

''அவர் கேட்கலை.''

''போலீசுக்குத் தகவல் குடுத்திருக்கியா?''

''ஆமா...''

''ஃபோன்ல மிரட்டினவன் என்ன சொல்றான்..? மிஸ்டர் தீபக்கை எதுக்காக கொலை செய்யப் போறானாம்?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுதான் அவர் செஞ்ச தப்பாம்...''

''ராஸ்கல்! கடைசியா எத்தனை மணிக்கு டெலிபோன் பண்ணினான்?'' ரமணனின் முகம் சிவந்து போயிருந்தது.



கல்பனா மெல்லிய குரலில் சொன்னாள்.

''ராத்திரி பத்து மணிக்கு...''

''இன்னிக்குக் காலைல போன் வந்ததா?''

''வரலை.''

''நான் இங்கே ஒரு போன் பண்ணிக்கலாமா... கல்பனா?''

''யாருக்கு?''

''இப்போ இருக்கிற டி.எஸ்.பி. எனக்குத் தெரிஞ்சவர். அவர்கிட்டே விஷயத்தைச் சொல்லி - ஏதாவது ஸ்டெப்ஸ் எடுக்க முடியுமான்னு பார்க்கிறேன்.''

''வேண்டாம் ரமணன். நான்தான் போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணியிருக்கேனே. அவரும் இன்னிக்கு ராத்திரி சென்னையிலிருந்து வந்துரட்டும்... வந்ததுமே ஒரு முடிவு எடுப்போம்.''

ரமணன் உட்கார்ந்திருந்த சோபாவை விட்டு எழுந்தான். ''நோ... நோ... இதெல்லாம் விளையாட்டு விஷயமில்லை கல்பனா. நான் எதுக்கும் விஷயத்தை டி.எஸ்.பி. காதுல போட்டு வெச்சுடறேன்.'' சொல்லிக் கொண்டே டெலிபோனை நோக்கிப் போனான். ரிஸீவரைக் கையில் எடுத்துக் கொண்டு டி.எஸ்.பி. நெம்பரை டயலில் சுழற்றினான். மறுமுனையில் எங்கேஜ்ட் டோன் கேட்டது. தொடர்ந்து முயற்சிக்க - எங்கேஜ்ட் டோன் விடாப்பிடியாய்க் கேட்டது.

''கல்பனா...''

''ம்...''

''ஒரு பத்து நிமிஷத்துல நா வந்துடறேன். டி.எஸ்.பி. தெம்ப கிடைக்கலை. நான் நேர்ல போ சொல்லிட்டு வந்துடறேன்...''

''ரமணன்... நான் சொல்றதை கொஞ்சம்...''

''கேட்க மாட்டேன் கல்பனா... போலீ நமக்கு உதவி செய்யத்தான் இருக்காங்க... இந்த மாதிரி விஷயத்துக்கெல்லா அவங்களை உபயோகப்படுத்திக்கணும்.'' சொல்லிக் கொண்டே போர்டிகோவி நிறுத்தியிருந்த தன்னுடைய யமஹாவை நோக்கி ஓடினான் ரமணன்.

**ர**மணன் வெளியே சென்ற பத்தாவது நிமிஷம்-

கல்பனா வீட்டு டெலிபோன் கதறியது.

கல்பனா ஓடிப்போய் ரிஸீவரை எடுத்தாள் மறுமுனையில் ஆண் குரல் ஒலித்தது ''ஹலோ... மிஸஸ் தீபக்?''

''எஸ்.''

''நாங்க இங்கே சென்னை க்ரைம் பிராஞ்சிலிருந்து பேசறோம்.''

இருதயத்தில் ஒரு 'த்தட்' வாங்கினாள் கல்பனா. குரல் சட்டென்று கம்மிப் போகக் கேட்டாள். ''என்ன விஷயம்?''

''ஒரு துக்கமான விஷயம்''

''எ... ன்...ன?''

''சென்னைக்கு வந்த உங்க கணவ



க்கை யாரோ கொலை செஞ்சு ட்டோரமாய்ப் போட்டிருந்தாங்க. அவர் கயிலிருந்த ப்ரீஃப்கேஸைக் கிளறிப் ர்த்தோம்... உங்க அட்ரஸ்ஸும் போன் ம்பரும் கிடைச்சுது.''

கல்பனா ஒரு சின்ன பிரளயமாய்ச் தறினாள். ரிஸீவரும் கை விரல்களும் ன்றாய் நடுங்க - டெலிபோன் குரல் தொடர்ந்து சொன்னது.

''உங்க கணவரோட பிணத்தை ர்ச்சுவரியில் வைத்திருக்கிறோம்... நீங்க ப்போ சென்னை வர்றீங்க?''

## 6

**க**ல்பனா குரல் நடுங்கக் கேட்டாள்.

''அ...வ...ரை.... யார்... யார்?''

''கொலை செஞ்சதுன்னு தெரியலை ஸஸ் தீபக்... இன்வெஸ்டிகேட் பண்ணிட் ருக்கோம்.... உங்களையும் விசாரிச்ச ன்னாடிதான் எங்களாலே ஒரு முடிவுக்கு வர முடியும்!''

''நா... நான்... வர்றேன்... இப்பவே றப்பட்டு வர்றேன்...'' சொல்லிக் கொண்டே ரிஸீவரை வைக்கப் போன கல்பனாவை டெலிபோன் குரல் நிறுத்தியது.

''ஒரு நிமிஷம் கல்பனா.''

அந்தக் குரல் மாற்றம் சட்டென்று புரிந்தது கல்பனாவுக்கு. குரல் சிரித்தபடியே கேட்டது, ''என்ன... கல்பனா,

பயந்துட்டியா? இவ்வளவு நேரம் உன்கிட்டே பேசிட்டிருந்தது மெட்ராஸ் க்ரைம் பிராஞ்ச் இல்லை... நான்தான்.''

''அப்போ... அப்போ...''

''பயப்படாதே... நீ இன்னும் சுமங்கலிதான் கல்பனா. உன் புருஷன் இன்னும் சாகலை. சென்னை க்ரைம் பிராஞ்சிலிருந்து அப்படி ஒரு நியூஸ் வந்தா எப்படி அதைத் தாங்கிக்கப் போறேன்னு டெஸ்ட் பண்ணினேன்.''

கல்பனாவுக்கு சந்தோஷம் நெஞ்சை அடைத்தது. பரபரத்துப் போய்க் கேட்டாள்.

''அந்த நியூஸ் பொய்தானே?''

''இந்த நிமிஷம் வரைக்கும் பொய்தான். இனிமே வரப்போகிற நிமிஷங்கள்ல உம்புருஷன் உயிரோடு இருப்பானா இருக்க மாட்டானான்னு சொல்ல முடியாது.''

''அவரை ஒண்ணும் பண்ணிடாதே... அவருக்குப் பதிலா என்னைக் கொன்னுடு... நானும் அவரும் கணவன் மனைவியா இருக்கக்கூடாது... அதுதானே உன்னோட ஆசை. எங்க ரெண்டு பேர்ல யார் செத்தா என்ன?''

''நீ தப்புப் பண்றே கல்பனா... உன்னை விதவைக் கோலத்துல பார்க்கத்தானே நான் ஆசைப்பட்டுட்டிருக்கேன்... நீ வெள்ளைச் சேலையும் - பாழ் நெற்றியுமா பல்லாண்டு வாழணும்.... நான் அடிக்கடி இந்த மாதிரிச் சின்னச் சின்ன 'ஷாக் ட்ரீட்மெண்ட்' கொடுப்பேன். சந்திக்கத் தயாராயிரு.'' குரல்



த்துக் கொண்டே தேய, ரிஸீவர் தப்பட்டது.

ளித்துவிட்டு வந்த மாதிரி வியர்த்துப் ாயிருந்தாள் கல்பனா. சமையலறை ிருந்து வெளிப்பட்ட வேலைக்காரி ாஜா - ''அம்மா உப்புமா ரெடி... சாப்பிட ீங்களா?''

எனக்கு வேண்டாம்.''

''ஏம்மா அப்படி சொல்றீங்க? வாங்கம்மா! வாய் சாப்பிடுவீங்களாம்...'' சரோஜா புறுத்திக் கூப்பிட - கல்பனா எரிந்து ழுந்தாள்.

'வேண்டாம்ன்னா விடு... நீ போய்ச் ப்பிடு. சும்மா தொண தொணக்காதே.''

பனாவின் கோபத்தைப் பார்த்து சரோஜா ந்தாள்.

கல்பனா சோபாவில் நன்றாகச் சாய்ந்து ரண்டு கண்களை மூடிக்கொண்டாள். ிஷங்கள் நகர்ந்து கொண்டிருக்க - ார்டிகோவில் திடீரென்று 'அந்தச் தம்கேட்டது.

மோட்டார் பைக் சத்தம்.

கல்பனா எட்டிப் பார்த்தாள்.

ரமணன் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே ந்து கொண்டிருந்தான். முகத்தில் ஒரு லிதான கவலை எட்டியிருந்தது.

கல்பனா எழுந்தாள்.

''என்னாச்சு ரமணன்? டி.எஸ்.பி.யைப் ர்த்தீங்களா?''

''பார்க்க முடியலை கல்பனா. ஏதோ ஓ இன்வெஸ்டிகேஷன் விஷயமா வெளியூ போயிருக்காராம்.''

''ரமணன்..!'' - கல்பனாவின் குர தழுதழுத்தது.

''என்ன கல்பனா?''

''நீங்க வெளியே போன கொஞ் நேரத்துல அந்த மிரட்டல் பேர்வழி எனக்கு போன் பண்ணியிருந்தான். மெட்ராஸ் க்ரை பிராஞ்சிலிருந்து பேசறதாச் சொல்லி அவரை யாரோ கொலை பண்ண ரோட்டோரமாய் போட்டிருக்கிறதாகவும் என்னை உடனடியா மெட்ரா வரும்படியாவும் சொன்னான்.''

''ராஸ்கல்... அப்புறம்?''

''அப்புறம் சிரிச்சுக்கிட்டே, 'நா சொன்னதெல்லாம் பொய். நான் சொன் பொய் எந்த நிமிஷமும் நிஜமாகலாம். நா அடிக்கடி இந்த மாதிரியான சின்னச் சின் ஷாக்ட்ரீட்மெண்ட் தருவேன். சந்திக்க தயாராயிரு'ன்னு சொல்லிட்டு ரிஸீவரை வெச்சுட்டான்.''

''அந்தக் குரலை இதுக்குமுன்ன எங்கேயாவது... எப்போதாவது கேட்டி ருக்கிறியா?''

''ஊ... ஹூ... ம்''

''நல்லா யோசிச்சுப் பாரு.''

''யோசிச்சுப் பார்த்துட்டேன் ரமணன் அந்தமாதிரியான குரலை நான் இதுக்கு முன்னாடி கேட்டதேயில்லை.''



'இந்த விபரீதமான விளையாட்டை விளையாடுகிற ஆசாமி யார்?' ரமணன் உச்சபட்சக் கவலைக்குப் போய்க் கல்பனாவைக் கொஞ்சம் பயமாய்ப் பார்த்தான்.

**லா**ட்ஜ் அறையை ஐந்தே நிமிஷத்தில் காலி செய்து கொண்டு - ரிசப்ஷன் கெளன்ட்டருக்கு வந்தான் தீபக். கெளன்ட்டரில் இருந்த ஹோட்டல் ஆசாமி அவனை ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

''என்ன ஸார்?''

''ரூமை வெகேட் பண்றேன்.''

''ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி தானே ரூம் போட்டீங்க?''

''ஆமா...''

''இப்போ எதுக்காக காலி பண்றீங்க?''

''அவசர செய்தி ஒண்ணு. நான் வெளியூர் போகணும்... அதனால ரூமைக் காலி பண்றேன். பில் பிரிபேர் பண்ணுங்க.''

''ஒரு நாள் வாடகை போடுவோம்.''

''போடுங்க.''

அவன் பில் போட ஆரம்பித்தான்.

தீபக் கெளன்ட்டரில் இருந்த இன்னோர் ஆசாமியிடம் கேட்டான்.

''கோயமுத்தூர் போக இப்போ ஃபிளைட் இருக்குமா?''

''ஒன்பது மணிக்குக் கொச்சி போற ஃபிளைட் இருக்கு ஸார்... ஏன்... நீங்க

கோயமுத்தூர் போகணுமா?''

''ஆமாம்.''

''ஹோட்டலுக்கு அடுத்த கட்டடத்தில் ட்ராவல் ஏஜென்சீஸ் ஒண்ணு இருக்கு. அங்கே ட்ரை பண்ணிப்பாருங்க. யூ மே கெட் த டிக்கெட்...''

''நீங்களே ஏற்பாடு பண்ணித் தர முடியுமா?''

''வெயிட் எ மினிட்...'' அந்த ஆசாமி சொல்லிவிட்டு டெலிபோனில் சில எண்களைச் சுழற்றினான். பிறகு கேட்டான்.

''ஃபோர்வேஸ் ட்ராவல்ஸ்?''

''.............''

''கோயமுத்தூர் போக ஃப்ளைட் டிக்கெட் கிடைக்குமா?''

''..........''

''தேங்க்யூ... ஒன் மிஸ்டர் தீபக் வில் கம் தேர்... ப்ளீஸ் டு நீட்ஃபுல்.'' அவன் ரிஸீவரை வைத்துவிட்டுத் தீபக்கிடம் திரும்பினான்.

''டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன் ஸார்... நீங்க போய் டிக்கெட்டை வாங்கிக்கலாம்.''

''தேங்க்யூ வெரிமச்...''

ஹோட்டல் பில் தயாரிக்கப்பட்டு அவனுக்கு முன்னால் நீட்டப்பட - ஒரு ஐந்நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான் தீபக். மீதிச் சில்லறைக்காகக் காத்துக் கொண்டிருந்த அந்த நிமிஷத்தில் டெலிபோன் கூப்பிட - கௌண்ட்டர் ஆசாமி



ரிஸீவரை எடுத்துச் செவிமடுத்துவிட்டு - ''ஸார்... திஸ் கால்... ஃபார் யூ...'' என்று சொல்லி ரிஸீவரை நீட்டினான்.

தீபக் வாங்கி ''ஹலோ'' என்றான்.

''என்ன தீபக் புறப்பட்டுட்டியா...? என்னோட லெட்டருக்கு மதிப்புக் கொடுத்த உனக்கு நன்றி. பீட்டர் குடியிருக்கிற தெரு பூராவும் மொலுமொலுன்னு கூட்டம்... போலீஸ் ரொம்பவும் மும்முரமா இருக்காங்க. அதான் உன்னை மெட்ராஸ்ல இருக்க வேண்டாம்ன்னு சொன்னேன்.''

''நான் இப்போ ஃப்ளைட்ல புறப்படறேன்.''

''புத்திசாலித்தனமான காரியம்... நீ மொதல்ல கோயமுத்தூர் போய்ச் சேரு... நான் பின்னாடியே வர்றேன்.''

''நீ எதுக்காக வர்றே?''

''உன்கிட்ட கொஞ்சம் பேசணும்.''

''என்ன பேசப் போறே?''

''அதைப் போன்ல சொல்லிட்டிருக்க முடியாது தீபக். நான் ரிஸீவரை வெச்சுடறேன். கோயமுத்தூர்ல சந்திப்போம்.''

அவன் ரிஸீவரை சார்த்த - தீபக்கும் ரிஸீவரை அதனிடத்துக்குக் கொடுத்து விட்டு, கௌண்ட்டர் ஆசாமி கொடுத்த நோட்டுகளை வாங்கிக் கொண்டு - ப்ரீஃப்கேஸோடு வெளியே வந்தான். ஹோட்டலுக்கு கொஞ்சம் தள்ளித் தெரிந்த ஃபோர்வேஸ் ட்ராவல்ஸ் ஆபீஸை நோக்கி

நடந்தான்.

ட்ராவல் ஏஜென்ஸியில் ஒரு பத்து நிமிஷத்தைச் செலவழித்து ஃபிளைட் டிக்கெட்டை வாங்கிக் கொண்டு டாக்ஸி பிடித்து - மீனம்பாக்கம் ஏர்போர்ட் போய்ச் சேர்ந்தபோது மணி எட்டு.

கொச்சி போகும் ஃபிளைட் வாலைத் திருப்பிக்கொண்டு சாதுவாய் நின்றிருக்க - ஜனங்கள் ஸ்டெப்ஸ்களில் ஏறிக்கொண்டிருந்தார்கள்.

என்கொய்ரி கௌன்ட்டரை நோக்கிப் போன தீபக் - தன் தோளை யாரோ தொடுவதை உணர்ந்து திரும்பினான்.

அவனுடைய கம்பெனி ஏஜெண்ட் ரத்தன்ஷா நின்றிருந்தார். அவன் சென்னைக்கு வந்து சந்திக்க வேண்டிய நபர். புன்னகைத்தார்.

''என்ன மிஸ்டர் தீபக்... மெட்ராஸ் வந்துட்டு என்னைப் பார்க்காமலே போறீங்க?''

தீபக் திணறினான். சென்னைக்கு யாரைப் பார்க்க வந்தானோ அவரே - நேரில் பிரசன்னமாகவும் தடுமாறினான். ''ஸாரி... மிஸ்டர் ரத்தன் ஷா... உங்களைப் பார்க்கத்தான் நினைச்சுட்டிருந்தேன். ஆனா வீட்லேயிருந்து ஓர் அவசர மெஸேஜ். நான் உடனடியாகப் புறப்படணும். அடுத்த வாரத்துல ஒருநாள் மெட்ராஸ் வருவேன். அப்போ உங்களை வந்து சந்திக்கிறேன்.''

''எம்.டி. சக்கரவர்த்தி எப்படியிருக்கார்?''



''ஃபைன்...''

''உங்க கல்யாணத்துக்கு வரணும்னு நினைச்சேன் மிஸ்டர் தீபக். பட் த டைம் டிட் நாட் பர்மிட் மீ...''

''ஸோ... வாட்...? ஆமா நீங்க எங்கே ஸார் பயணம்?''

''பாம்பே...''

''பர்சனல் ஆர்... அபிஷியல்?''

''பர்சனல். ரிலேடிவ் ஒருத்தர் வீட்ல சம்பவம். கண்டலென்ஸ் கன்வே பண்ணப் போறேன். வரட்டுமா மிஸ்டர் தீபக்..? நான் செக்யூரிடி செல்லுக்குப் போகணும். அடுத்த வாரம் பார்ப்போம்.''

தீபக்கின் கையைப் பற்றிக் குலுக்கி விட்டு - அந்த உயரமான ரத்தன்ஷா கையில் ப்ரீப்கேஸோடு செக்யூரிடி செல்லை நோக்கி நடந்தார்.

'யார் கண்களில் பட்டுவிடக்கூடாது என்று நினைத்தோமோ, அவருடைய கண்களில் பட்டாயிற்று. நான் மெட்ராஸ் வந்தது - அவசர அவசரமாய் ஃபிளைட்டில் திரும்பியது எல்லாமே நாளைக்கு கான்க்ரீட் ப்ரூஃபாய் நிரூபணமாகிவிடும்.'

தீபக்கின் அடிவயிற்றில்-

கட்டியாய் ஓர் அவஸ்தை உட்கார்ந்தது.

**கா**லை மணி 10.45.

கதவைத் திறந்ததுமே - அகலமாய் ஆச்சர்யப்பட்டாள் கல்பனா. கலைந்த

தலையோடும் - இருட்டடித்த முகத்தோடும் நின்றிருந்த தீபக், அவளுடைய வயிற்றைக் [illegible]க்கினான்.

''என்னங்க, இது திடீர்னு?''

''போன வேலை முடிஞ்சதுடுச்ச கல்பனா. உடனே ஃப்ளைட் டிக்கெட்டும் கிடைச்சது. புறப்பட்டு வந்துட்டேன்.''

''மெட்ராஸ்ல உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லையே?''

''இல்லை. ஏன் கேட்கிறே?'' ப்ரீஃப்கேஸை சோபாவில் எறிந்துவிட்டு அயர்ச்சியோடு உட்கார்ந்தான் தீபக்.

''டெலிஃபோன்ல அந்த ஆசாமி என்னை மிரட்டிட்டே இருந்தான். போலீஸ்ல கம்ப்ளைண்ட் குடுத்திருக்கேன். நீங்க மெட்ராஸிலிருந்து வந்ததும் போலீஸ் இன்ஸ்பெக்டர் உங்களைக் காண்டாக்ட் பண்ணச் சொன்னார்.''

போலீஸ் என்ற வார்த்தையைக் கேட்டதும் உடம்பு முழுவதும் ஒரு தடவை வியர்த்து ஊற்றினான் தீபக்.

''போலீஸா... அதுக்குள்ளே ஏன் கல்பனா போலீஸுக்குப் போனே? விவகாரத்தை நீயே பெரிசு பண்ணிடுவே போலிருக்கே?''

''கம்ப்ளைண்ட் பண்ணாமே என்னங்க செய்யறது? உங்க உயிருக்கு ஆபத்துன்னு அடிக்கடி போன் பண்ணி மிரட்டிட்டே இருக்கான்... நான் பயந்து நடுங்கறது எனக்குத்தானே தெரியும்?''

''என்ன இருந்தாலும் நீ



அவசரப்பட்டுட்டே!''

''சரி, உங்க முகம் ஏன் இப்படி இருக்கு..?''

''எப்படியிருக்கு?''

''கறுத்துப் போய் - பார்க்கவே என்னமோ மாதிரி இருக்கு...''

''ஜர்னி டயர்ட்னஸ்.''

''ஃப்ளைட்லதானே வந்தீங்க?''

தீபக் அவளுக்குப் பதில் சொல்வதற்காக வாயைத் திறந்த நேரம் - டெலிபோன் அலறிக் கூப்பிட்டது. கல்பனா போய் ரிஸீவரை எடுத்தாள். குரல் கொடுத்தாள்.

''ஹலோ...''

''ஹலோ... கல்பனா - நான் ரமணன் பேசறேன்...''

''என்ன ரமணன்?''

''விஜிலென்ஸ் டிபார்ட்மென்டிலிருந்து பேசறேன் கல்பனா.. என்னோட ஃப்ரண்ட் ஒருத்தர் ஜார்ஜ்ன்னு பேரு. இங்கே வேலை பார்க்கிறார். அவர்கிட்டே உன்னோட விஷயத்தைப் பத்திச் சொன்னேன். அவர் இருபத்திநாலு மணி நேரத்தில ஆளை மடக்கிக் காட்றதா சொல்லியிருக்கார்...''

''அவர் செய்வாரா ரமணன்?''

''கண்டிப்பா செய்வார், முக்கியமான பப்ளிக் டெலிபோன் பூத்ல எல்லாம் மப்டியில காப்ஸை போடப் போறாங்க. உன்னோட வீட்டுக்கு வர்ற போன்கால்ஸை எக்ஸ்சேஞ்ச்ல வாட்ச் பண்ணிட்டிருக்காங்க.

அவன் உனக்குப் போன் பண்ணினதுமே எந்த டெலிபோன் பூத்ல யார் பேசிட்டிருந்தாலும் அவங்களைப் போலீஸ் அமுக்கப் போறாங்க...''

''தேங்க்யூ ரமணன். எங்களுக்காக சிரமப்படறீங்க! பை... த... பை... அவர் மெட்ராஸிலிருந்து வந்துட்டார்.''

''அட... எப்போ...?''

''இப்பத்தான் அஞ்சு நிமிஷமாச்சு...''

''அவரை வெளியே விடாதே கல்பனா. டெலிபோன் பேர்வழியை அமுக்கிற வரைக்கும் அவரைக் கொஞ்சம் ஜாக்கிரதையாப் பார்த்துக்க...''

''அதைவிட வேற வேலை என்ன இருக்கு எனக்கு? நீங்க வீட்டுக்கு வர்றீங்களா ரமணன்?''

''நான் சாயந்தரமா வர்றேன்...''

''ரிஸீவரை வெச்சுடட்டுமா?''

''ம்...''

ரிஸீவரை வைத்துவிட்டுத் திரும்பினாள் கல்பனா. முகம் பிரகாசித்துப் போயிருந்தது. நடையில் ஒரு துள்ளல் வந்திருந்தது.

''என்னங்க... அந்த டெலிபோன் பேர்வழியைப் பிடிக்கிறதுக்காக போலீஸ் முயற்சி எடுத்திட்டிருக்காங்களாம். ரமணன் இந்த விஷயத்துல ரொம்பவும் தீவிரமாக இருக்கார்...''

கல்பனா உற்சாகமான குரலில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே-



காம்பௌண்ட் கேட்டுக்குள் சர்ரென்று- உள்ளே நுழைந்த அந்த போலீஸ் ஜீப் வேகத்தைக் குறைக்காமல் போர்டிகோவில் வந்து நின்றது. ஜீப்பினின்றும் அந்த இன்ஸ்பெக்டர் இறங்கினார்.

வெளியே எட்டிப் பார்த்த கல்பனாவிடம் கேட்டார்:

''மிஸ்டர் தீபக் இருக்காரா?''

## 7

ஜீப்பினின்றும் இறங்கிய இன்ஸ்பெக்டர் சமீபத்திய ரெக்ரூட்மெண்டில் வந்தவர் மாதிரித் தெரிந்தார். மொடமொட யூனிஃபார்முக்குள் கச்சிதமாய்ச் சிக்கி இருந்தார். முகத்திற்கு ஒழுங்காய் பிளேடையும் சோப்பையும் காட்டுகிறவர் என்று மின்னிய தாடைப் பிரதேசம் சொன்னது.

கல்பனா திகைப்பாய் அவரையே பார்க்க - இன்ஸ்பெக்டர் மறுபடியும் கேட்டார். ''வீட்ல தீபக் இருக்காரா?''

''இருக்கார். இப்பத்தான் சென்னையிலிருந்து வந்தார். என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?''

''அவரை யாரோ த்ரெட்டன் பண்ணிக் கொலை பண்ணப் போறதா நீங்க ரிப்போர்ட் கொடுத்திருக்கீங்க இல்லையா?''

''ஆமா...''

''அது சம்பந்தமா ஒரு டீப் என்கொயரி

நடத்தனும். உங்க ஹஸ்பெண்டோட ஃப்ரெண்ட்ஸ்... ரிலேட்டிவ்ஸ் - இவங்களைப் பத்தின டிடெய்ல்ஸ் வேணும்...''

''தர்றேன் இன்ஸ்பெக்டர்.''

இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றி கக்கத்தில் இடுக்கிக்கொண்டபடி உள்ளே வந்து கல்பனா கட்டிக் காட்டிய நாற்காலியை நிரப்பினார்.

**கம்**பெனி மானேஜிங் டைரக்டர் சக்கரவர்த்தி ரிவால்விங் நாற்காலியில் அரை வட்டம் ஆடிக்கொண்டே பைப்பை உறிஞ்சிப் புகையை மெலிதாய் விட்டார். எதிரே நின்றிருந்த தீபக்கைக் கவலைக் கண்களோடு ஏறிட்டார். ''நீங்க ஹேப்பி மூடில் இல்லைன்னு உங்க முகமே சொல்லுது மிஸ்டர் தீபக். நான் ரத்தன்ஷாவை ஹேண்டில் பண்ணிக்கிறேன். நீங்க ஒருவாரம் பத்துநாள் வீட்ல ரெஸ்ட் எடுங்க...''

''தாங்க்யூ ஸார்...''

''நீங்க மெட்ராஸ் போயும் அந்த ரத்தன்ஷாவை ஏன் பார்க்க முடியலைன்னு சொல்ல முடியுமா?''

''ஐ வாஸ் நாட் ஃபீலிங் வெல் ஸார்.''

''ஃபிஸிகலி? ஆர் மெண்டலி?''

''ஃபிஸிகலி...''

''ஓ...கே... நீங்க போய் வீட்ல ரெஸ்ட் எடுங்க. ஹனிமூனை அடுத்த மாசம்



வச்சுக்குங்க.'' சக்கரவர்த்தி சிரித்துச் சொல்ல - தீபக் அவருக்கு ஒரு வலுக்கட்டாயமான புன்னகையைக் கொடுத்துவிட்டு அறையினின்றும் வெளியே வந்தான்.

ஆபீஸ் வெறிச்சோடியிருந்தது.

மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தான்.

மணி 6.30.

வெளியே இருட்டு வேகமாய்க் கவிழ்ந்து கொண்டிருக்க வராந்தாவில் நடந்து சைக்கிள்கள் நின்றிருந்த ஷெல்டரை நோக்கி வந்தான். எப்போதுமே இருபது வண்டிகளுக்கு மேல் நின்றிருக்கும் அந்த ஷெல்டரில், அவனுடைய பைக் மட்டும் தலையைத் திருப்பிக்கொண்டு நின்றிருந்தது. கையிலிருந்த ஆபீஸ் பேக்கை பைக்கின் கேரியர் பாக்ஸிற்குள் திணிப்பதற்காகத் திறந்தவன் நெற்றியைக் கோடுகளால் நிரப்பினான்.

கேரி பாக்ஸுக்குள்-

சுருட்டப்பட்ட தமிழ் நாளிதழ் ஒன்று தெரிந்தது.

'நாளிதழை வாங்கி கேரி பாக்ஸுக்குள் போட்டதாய் ஞாபகம் இல்லையே?' யோசித்தபடியே அந்த நாளிதழை எடுத்தான். அது ஒரு மாலைத் தினசரி. சென்னைப் பதிப்பு என்று கொட்டை எழுத்துக்களில் தெரிந்தது. பேப்பரை பரபரவென்று பிரித்தான் தீபக்.

**'ராஜபக்ஷேவைக் கொலை செய்ய முயற்சி'** என்ற தலைப்புச் செய்திக்குக் கீழே

கட்டம் கட்டி அந்தச் செய்தி வந்திருந்தது.

**அறையில் வாலிபர் மர்மச் சாவு!**

**உடன் தங்கிய ஆசாமி எங்கே?**

**போலீஸ் வலைவீச்சு!**

இது பற்றிக் கூறப்படுவதாவது: சென்னை அடையாறைச் சேர்ந்தவர் வாலிபர் பீட்டர். வயது இருபத்தைந்து. ஒரு பத்திரிகையில் நிருபராகப் பணி புரிந்து வந்தார். நேற்று இரவு அவர் மர்மமான முறையில் கத்தியால் குத்தப்பட்டுப் படுக்கையில் இறந்து கிடந்தார். போலீஸார் பிரேதத்தைக் கைப்பற்றி விசாரணை நடத்தினார்கள். விசாரணையில் முன்னிரவில் - யாரோ ஓர் ஆசாமி அவரோடு வந்து தங்கியதாகவும் விடிவதற்கு முன்பே புறப்பட்டுப் போய் விட்டதாகவும் தெரிந்தது. அறையில் வந்து தங்கின ஆசாமிதான் பீட்டரைக் கொலை செய்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் போலீஸார் அந்த ஆசாமியை வலை வீசித் தேடி வருகிறார்கள்.

-பத்திரிகைச் செய்தி தீபக்கைக் 'குப்'பென்று வியர்க்க வைத்தது. மறுபடியும் மறுபடியும் அந்தசெய்திக்குள் பார்வையைப் போட்டான்.

'இந்தச் சென்னை பதிப்பு இங்கே எப்படி வந்தது?'

'யார் கொண்டு வந்து போட்டிருப்பார்கள்?'

சுற்றும்முற்றும் பார்வையைப் போட்டான் தீபக். ஆபீஸ் கேட்டில் நின்றிருந்த வாட்ச்மேன் மட்டும் தெரிய - வாட்ச்



மேனைக் கையசைத்துக் கூப்பிட்டான்.

அவன் ஓடி வந்தான்.

''என்ன ஸார்?''

''இங்கே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி யார் வந்திருந்தாங்க?''

''யாரும் வரலையே சார்...''

''விசிட்டர்ஸ் யாரும் வரலையா?''

''அரைமணி நேரத்துக்கு முன்னாடி எலக்ட்ரீசியன் ஒருத்தர் மீட்டர் ரீடிங் பார்க்கிறதுக்காக உள்ளே வந்தார்.''

''எப்பவும் வர்றவரா?''

''இல்லே ஸார்... இன்னிக்கு வந்தவர் புதுசா இருந்தார்.''

''அவருக்குப் பின்னாடி யாரும் வரலைய்யா?''

''ஊஹூம்.''

''சரி... நீ போ...''

வாட்ச்மேன் நகர்ந்ததும்-

அந்த நாளிதழை மடக்கி கேரி பாக்ஸுக்குள் திணித்துக் கொண்டு - பைக்கில் பரவினான் தீபக். மனசு பூராவும், 'திக் திக்' ஊர்வலம்.

'விஷயம் பேப்பரளவு வந்து விட்டது. ராஜபக்ஷேயின் பிரதான செய்தியால், இந்த பீட்டர் செய்தி அடிபட்டுப் போயிருக்கிறது. இல்லாவிட்டால் விசுவரூபமே எடுத்திருக்கும்.'

வழி பூராவும் யோசித்து - பைக்கை

மெதுவாக ஓட்டி வந்து பங்களாவைத் தொட்டான். வாசல் படிகளில் காத்திருந்த கல்பனா ஓடி வந்து அவனை எதிர் கொண்டாள்.

''என்னங்க இவ்வளவு நேரம்? ஆபீஸுக்குப் போயிட்டு உடனடியாக வந்துடறேன்னு சொல்லிட்டுப் போனீங்க. சாவகாசமா வர்றீங்க?''

''எம்.டி. பேச்சுக்குப் பிடிச்சுகிட்டார்.''

''சரி உள்ளே வாங்க.''

பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே போனார்கள். கல்பனா சொன்னாள். ''நீங்க ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வர்றதுக்குள்ளே நான் காப்பி கலந்துட்டு வந்துடறேன்.''

''ம்...ம்...'' தீபக் தன்னுடைய அறைக்குள் நுழைந்து சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டின அதே விநாடி

டெலிபோன் தன் வாயைத் திறந்தது. மூன்றாவது தட்டலை அது அலறும் முன்பே ரிஸீவரைப் போய் எடுத்தான் தீபக்.

''ஹலோ...''

''தீபக்கா?'' ஓர் ஆண் குரல் கேட்டது.

''ஆமா...''

''பேப்பரைப் பார்த்தியா தீபக்? உனக்காகவே மெட்ராஸிலிருந்து கொண்டு வந்தேன்... ஈவ்னிங் எடிசன் பேப்பர் அது.''

''நீ யார்?''

''பீட்டருக்கு ரொம்பவும் வேண்டியவன். அவன் இப்போ செத்துப் போயிட்டதினால



இப்போ நீ எனக்கு வேண்டியவன்... பேப்பர் நியூஸ் எப்படி? டக்கரா இல்லை? தமிழ்நாடு போலீஸ்ன்னா சும்மாவா... அக்கம்பக்கத்து வீடுகள்ல சும்மா கிளறு கிளறுன்னு கிளறிட்டாங்க.''

''போன்ல எதும் பேசாதே. ரிஸீவரை வெச்சுடு.''

''நேர்ல பேசலாம்னு சொல்றியா? நான் ரெடி. நீ... எங்கே வரச் சொன்னாலும் நான் வர்றேன்.''

''பாரதி பார்க்குக்கு வர்றியா?''

''கோயமுத்தூர் எனக்கு அவ்வளவா பழக்கமில்லாத இடம்... அந்த பார்க் எங்கே இருக்கு?''

''நார்த் கோயமுத்தூர்ல டி.வி. எஸ்ஸுக்கு எதிர்லே!''

''வந்துடறேன். எத்தனை மணிக்கு?''

''நாளைக்கு காலையில ஆறு மணிக்கு.''

''ஆறு மணிக்கா?''

''அந்நேரத்துக்குத்தான் நான் டென்னிஸ் ஆடக் கிளம்புவேன்.''

''ஓ! விளையாடப் போற நேரத்துலேயே இந்த விவகாரத்தை முடிச்சிக்கலாம்னு நினைக்கறியா? அதுவும் நல்லதுதான்... வர்றேன்... சரியா ஆறு மணிக்கு வர்றேன்.''

தீபக் ரிஸீவரைச் சாத்தினான்.

கல்பனா காபி டம்ளரோடு அவனை நெருங்கினாள்.

''போன்ல யாருங்க?''

''டென்னிஸ் கிளப் ஃப்ரெண்ட் ஒருத்தன்.''

''என்ன விஷயமாம்?''

''நாளைக்கு இருக்கிற மேட்ச்சைப் பத்தி ஞாபகப் படுத்தினான்.''

''வேற வேலையில்லை... இந்த அமளியெல்லாம் ஓயறவரைக்கும் நீங்க எங்கேயும் போக வேண்டாம்.''

''நாளைக்கு மட்டும்...''

''நேத்தைக்கு வந்த இன்ஸ்பெக்டர் நீங்க தேவையில்லாம வெளியே எங்கேயும் போகக்கூடாதுன்னு சொல்லியிருக்கார்.''

''போலீஸ் அப்படித்தான் சொல்லுவாங்க... நான் நாளைக்கு மட்டும் ஒரு நாள் டென்னிஸ் போயிட்டு வந்துடறேன்.''

''சொன்னாக் கேக்க மாட்டீங்களே..!'' கல்பனா உஷ்ணமாய் முறைப்பதையும் பொருட்படுத்தாமல் பாத்ரூமுக்குள் நுழைந்தான் தீபக்.

**ம**றுநாள் காலை ஆறு மணி.

கோவையின் கிழக்குத் திசை கோவைப் பழமாய்ச் சிவந்திருக்க - சூரியனின் வெளிச்ச மொட்டை லேசாய் தெரிந்தது. மரங்களில் இருந்த பட்சிகள் உயிர்மெய் எழுத்துக்களை இரைச்சலோடு சொல்ல - தீபக் தன் பைக்கை விரட்டி - வடகோவையின் அகல வீதியில் பயணித்து, பாரதி பார்க்கின் வாசலில் - அதை ஊமையாக்கினான்.



ஸ்டாண்டிட்டு நிறுத்திவிட்டு - டென்னிஸ் க்கெட்டோடு உள்ளே போனான். பார்க் ந்த நேரத்துக்கு ஒருவித சூன்யத் னத்தோடு இருந்தது. பார்க்கில் ட்டப்பட்டிருந்த புதிய வாட்டர் டாங்கிற் க் கீழே - நெசவாளர் காலனியைச் சேர்ந்த பெண்கள் குடங்களோடு பொறுமையாய்த் ண்ணீர் பிடிக்கக் காத்திருந்தார்கள். ார்க்கில் போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சுகளில் இரண்டொருவர் லுங்கிகளைப் போர்த்திக் கொண்டு - ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்.

'எங்கே அந்த டெலிபோன் பேர்வழி?'

பார்வையைச் சுற்றும்முற்றும் போட்டபடி நிதானமாய் நடக்க ஆரம்பித்தான் தீபக். ிழக்கில் அடர்த்தியான சிவப்பு, சாயம் போய்க் கொண்டிருக்க - சூரியன் பாதியாய் அரைக் கோணமாய்த் தெரிந்தான்.

மணிக்கட்டை உயர்த்தி வாட்ச்சைப் பார்த்த தீபக் லேசாய்த் திடுக்கிட்டான்.

நேரம் 6.10.

'சரியாய் ஆறு மணிக்கு வருகிறேன் என்று சொன்னவனைக் காணோமே!' தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த பெண்கள் வேடிக்கை பார்க்க - டென்னிஸ் ராக்கெட்டை சுழற்றிக் கொண்டே பார்க்கை ஒருமுறை சுற்றி வந்தான்.

யாரையும் காணோம்!

நேரம் ஆறேகாலைத் தாண்டியிருக்க-

தீபக் எரிச்சலோடு புறப்பட்டுப்போக தன் பைக்கை நெருங்கினான். பைக்கின் பில்லியன் மேல் ஒரு கல் தெரிய - அந்த கல்லுக்கு கீழே ஒரு கடிதம் காற்றில் பறந்து போகத் தத்தளித்துக் கொண்டிருந்தது.

தீபக் வேகமாய்ப் போய் அந்தக் கடிதத்தை எடுத்தான்!

**'தீபக்! நீ சரியாய் ஆறு மணிக்கே இங்கே வந்தது குறித்து சந்தோஷம்.**

**ஆனால் ஆபத்து உன் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறது. சென்னை அடையார் போலீஸ் உன்னை எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார்கள். உன்னைத் தேடி எந்த நிமிஷமும் வரலாம். ஸோ... தற்சமயம் நான் உன்னிடம் பேச விரும்பவில்லை. போலீஸ் உன்னை வந்து விசாரித்தால் பீட்டரை எனக்குத் தெரியாதென்று அடித்துச் சொல்லி விடவும். தெரியும் என்று சொன்னால் அந்த நிமிடமே உன்னை இழுத்துக் கொண்டு போய்விடுவார்கள்.'**

கடிதம் முடிந்து போயிருந்தது.

கையில் அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தான் தீபக். எதிரே நீளமாய் தெரிந்த ரோட்டில் யாருமே தட்டுப்படவில்லை. கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு கிக் ஸ்டார்ட்டரை உதைத்து பைக்கை உசுப்பினான். அது அதிர்ந்த மாதிரியே தீபக்கின் இருதயமும் அதிர்ந்தது.



டென்னிஸ் கோர்ட்.

வக்கீல் சீதாராமன் போட்ட சர்வீஸ்களை டுக்க முடியாமல் திணறினான் தீபக். மனசு ராவும் அந்தக் கடிதம் கொடுத்த திகில் றைந்து போயிருந்தது.

''என்ன தீபக், இன்னிக்கு என்னாச்சு ங்களுக்கு? ஒரு சர்வீஸைக்கூட நீங்க ராப்பரா அட்டெண்ட் பண்ணலை.''

''லேசாத் தலைவலி...''

''தலைவலியிருந்தா எதுக்காக ஆட ர்றீங்க? கோ அண்ட் டேக் ரெஸ்ட். நான் ாக்டர் நவீனைக் கூப்பிட்டுக் காள்கிறேன்...''

''நோ... நோ... இந்த கேமை நான் டிச்சுட்டுப் போயிடறேன்.'' சொல்லிக் காண்டே சர்வீஸ் போட கோர்ட்டின் லையை நோக்கி நடந்த தீபக் 'த்த்ட் த்த்ட்' ன்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

டென்னிஸ் கோர்ட்டின் தட்டிக்குப் க்கத்தில் அந்த பைக் அணைந்து காண்டிருக்க, இன்ஸ்பெக்டர் உதிர்ந்து காண்டிருந்தார். அபார உயரம். நறுக்கு சை. ஸ்கேன் கண்கள்.

ஆட்டத்தை வேடிக்கை பார்த்துக் காண்டிருந்த டாக்டர் நவீனிடம் ''மிஸ்டர் பக்...'' என்று கேட்டுக் கொண்டிருப்பதைப் ார்த்துவிட்டு கோர்ட்டினின்றும் பிரிந்து ந்தான் தீபக்.

''எஸ்... மை செல்ஃப் இன்ஸ்பெக்டர்...''

''ஒரு நிமிஷம் இப்படி வர்றீங்களா மிஸ்டர் தீபக்.''

தீபக்கின் இதயம் உதறிக் கொள்ள அவரை மெல்ல தொடர்ந்தான். தட்டி அருகே போனதும் அவர் சொன்னார்: ''நான் சென்னை அடையாறு ஏ-2 போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்! உங்க பங்களாவுக்குப் போயிருந்தேன். நீங்க இங்கே இருப்பீங்கன்னு உங்க மனைவி சொன்னார். நான் இன்வெஸ்டிகேஷனை முடிச்சுகிட்டு இன்னிக்கே போகணும். ஸோ... டென்னிஸ் கோர்ட்டுக்கே வந்துட்டேன்...''

தீபக் வாய் உலர்ந்தான்.

''எ...எ.. என்கிட்டே என்ன எதிர்பார்க்கறீங்க இன்ஸ்பெக்டர்..?''

''ரெண்டு நாளைக்கு முன்னாடி நீங்க சென்னை வந்திருந்தீங்களா?''

''ஆ....ஆமா...''

''பீட்டர்னு ஒரு ரிப்போர்ட்டரை சந்திச்சீங்களா...?''

## 8

தீபக்கின் மூளைப் பிரதேசத்தில் விடாமல் சைரன் ஒலித்தது. 'இன்ஸ்பெக்டரிடம் என்ன சொல்லலாம்...? பீட்டரைத் தெரியுமென்று சொல்லலாமா?-

இல்லை, தெரியாதது போல் காட்டிக் கொள்ளலாமா?

எது உத்தமம்?'



''என்ன தீபக் யோசிக்கறீங்க?''

''நீ... நீங்க கேட்ட கேள்வி புரியலை ஸார்... பீட்டரா... யாரது?''

''ஒரு பிரஸ் ரிப்போர்ட்டர். சென்னைல ஒரு தினசரியில வேலை பார்க்கிறார். அவர் ரெண்டு நாளைக்கு முந்தின ராத்திரி அவரோட வீட்டிலேயே கொலை செய்யப்பட்டிருக்கிறார்.''

''மர்டரா...?''

''எஸ்... அந்த பீட்டர்கூட யாரோ ரூம்ல தங்கியிருக்காங்க. தங்கினது.. யார்னு கண்டுபிடிக்கத்தான் பெருமுயற்சி பண்ணிட்டிருக்கோம். அந்த பீட்டரோட ரூமைக் கிளறிப் பார்த்தப்ப ஒரு டயரி கிடைச்சது. அந்த டயரியில உங்க கம்பெனி விசிட்டிங் கார்டு இருந்தது. கார்டுக்குப் பின்னாடி உங்க பேரும் இருந்தது. பீட்டரை உங்களுக்குத் தெரியாதுன்னு சொல்றீங்க! ஆனா அவரோட டயரியில உங்க விசிட்டிங் கார்டு இருக்கே இது எப்படி?''

தீபக் உள்ளுக்குள் ஏராளமாய் நொறுங்கிப் போனாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தான்.

''இன்ஸ்பெக்டர், இறந்து போனவர் ஒரு பிரஸ் ரிப்போர்ட்டர்னு சொல்றீங்க! எங்க கம்பெனி அட்வர்டைஸ்மெண்ட்டுக் காகவும், ஆர்டிக்களுக்காகவும் நிறைய ஜர்னலிஸ்ட்ஸ் என்னைத் தேடி வருவாங்க.

அவங்களுக்கெல்லாம் கண்டிப்பாக என்னோட விசிட்டிங் கார்டைக் குடுத்திருப்பேன். அந்தக் கார்டு நீங்க சொல்ற பீட்டர்கிட்டயும் இருந்திருக்கலாம். அந்த பீட்டரோட போட்டோ இருந்தா குடுங்க இன்ஸ்பெக்டர். போட்டோவைப் பார்த்தா ஒருவேளை எனக்கு அடையாளம் தெரியலாம்.''

இன்ஸ்பெக்டர் தன் சர்ட் பாக்கெட்டில் இருந்த அந்த பழுப்புக் கவரை எடுத்துப் பிரித்து பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒன்றை உருவி நீட்டினார்.

தீபக் அதை வாங்கிப் பார்க்க -

போட்டோவில் பீட்டர் நேர் பார்வை பார்த்துக் கொண்டு புன்னகைத்தான். 'என்ன தீபக்... இப்படித்தான் சொல்லாம கொள்ளாம மெட்ராஸை விட்டு ஓடி வர்றதா?' என்று கேட்பதைப் போன்ற பார்வை.

போட்டோவை அவரிடமே திருப்பிக் கொடுத்தான் தீபக்.

''என்ன, இவரைப் பார்த்திருக்கீங்களா?''

''இல்ல இன்ஸ்பெக்டர். முகம் ஞாபகமில்லை...''

''ஓ....கே. மிஸ்டர் தீபக், இது ஜஸ்ட் என்கொயரிதான். உங்க கம்பெனி விசிட்டிங் கார்டு பீட்டரோட டயரியில இருந்ததினாலதான், நான் உங்களைப் பார்க்க வந்தேன். தேங்க்யூ வெரிமச் ஃபார் யுவர் கைண்ட் கோவாப்ரேஷன். கேரி ஆன் யுவர் ப்ளே...''



இன்ஸ்பெக்டர் பைக்கில் பாவி கிக்கரை உதைக்க அது புகை விட்டுப் புறப்பட்டது.

பைக் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த தீபக் டென்னிஸ் கோர்ட்டுக்குத் திரும்ப - உட்கார்ந்திருந்த டாக்டர் நவீன் கேட்டார்.

''என்ன ப்ராப்ளம் தீபக்? இன்ஸ்பெக்டர் வந்துட்டுப் போறார்...?''

''நத்திங்... கம்பெனியில நடந்த ஒரு தெப்ட் விஷயமா விசாரிக்கட்டுப் போனார்'' சொல்லிக் கொண்டே கோர்ட்டில் இறங்கின தீபக் பயத்தில் வியர்த்துக் கொட்டினான்.

எட்டுமணி வரைக்கும் மனசு பதியாமல் ஒரு செட் கேம் ஆடி விட்டுக் கிளம்பினான். வீடு போய்ச் சேர்ந்த போது வாசலில் ரமணனும் கல்பனாவும் நின்றிருந்தார்கள்.

''குட்மார்னிங் தீபக்...''

''குட்மார்னிங் ரமணன். இப்பத்தான் வர்றீங்களா?''

''வந்து நேரமாச்சு. உங்களைப் பார்க்கணும்னு சென்னையிலிருந்து ஒரு இன்ஸ்பெக்டர் வந்தார். டென்னிஸ் கோர்ட்டுக்கு அனுப்பி வெச்சோமே? வந்தாரா...?''

''ம்... வந்தார்...''

''என்னங்க... என்ன விஷயம்?''

''ஒரு விஷயமும் இல்லை...''

''ஒரு விஷயமும் இல்லாமே சென்னையிலிருந்து இன்ஸ்பெக்டர் உங்களைத் தேடிட்டு வருவாரா?'' கல்பனா குறுக்கிட்டுக்

கேட்டான்.

''என்னிக்கோ... எங்க கம்பெனி மெட்ராஸ் பிராஞ்ச்ல நடந்த ஒரு தெப்ட் விஷயமா என்கொய்ரிக்காக வந்தார்.''

''தெப்ட்டா? நீங்க என்கிட்டே இதுவரைக்கும் சொன்னதேயில்லையே? என்னிக்கு அந்தத் தெப்ட் நடந்தது? என்ன காணாமப் போச்சு?''

''ஒரு ஜெனரேட்டர்.'' வாய்க்கு வந்த பொய்யைச் சொல்லிக் கொண்டே உள்ளே போனான் தீபக். ரமணனும் கல்பனாவும் அவனைத் தொடர்ந்தார்கள்.

தீபக் பேச்சை மாற்றுவதற்காக அந்தக் கேள்வியைக் கேட்டான். ''என்னோட உயிருக்குக் கெடு வெச்சிருக்கிறதா சொல்லி ஒருத்தன் டெலிபோன்ல மிரட்டுவானே? அந்த விவகாரம் என்னாச்சு ரமணன்? ஆள் போலீஸ் கையில கிடைச்சானா?''

''இன்னும் கிடைக்கலை.''

''என்ன கல்பனா... அதுக்கப்புறம் அந்த டெலிபோன் பேர்வழி உனக்குப் போன் பண்ணினானா?''

''பண்ணலை.''

கல்பனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே -

டெலிபோன் ரீங்காரம் பண்ணியது.

மூன்று பேரும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொள்ள - கல்பனா சொன்னாள். ''ரமணன்... நீங்க போய் ரிஸீவரை எடுத்துப்



பேசுங்க.''

ரமணன் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''மிஸஸ் கல்பனா தீபக் விடுதானே?''

''ஆமா... நீங்க யாரு?''

''போலீஸ் ஸ்டேஷனிலிருந்து எஸ்.ஐ. பேசறேன்... நீங்க யாரு?''

''நான் ரமணன் சார்...''

''மிஸ்டர் ரமணன்! ஒரு சந்தோஷமான நியூஸ்... மிஸஸ் கல்பனாவுக்கு போன் பண்ணி த்ரெட்டன் செஞ்சிட்டிருந்த டெலிபோன் பேர்வழியை மடக்கிட்டோம்.''

''சனிட்? எப்போ ஸார்?''

''அரை மணி நேரத்துக்கு முன்னாடி...''

''எங்க வெச்சு ஸார்?''

''ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்துல இருந்த பூத்துல வெச்சு பி.சி. ஒருத்தர் அரெஸ்ட் பண்ணிக் கொண்டாந்தார். ஆரம்பத்துல அவன் ஒத்துக்கலை. பத்து நிமிஷம் ட்ரீட்மெண்ட் குடுத்ததுல உண்மையைக் கக்கிட்டான். மிஸஸ் கல்பனாவையும் அவங்க ஹஸ்பெண்டையும் கூட்டிக்கிட்டு ஸ்டேஷனுக்கு வர்றீங்களா?''

''இதோ... புறப்பட்டுட்டோம்.''

அடுத்த பத்தாவது நிமிஷம் -

மூன்று பேரும் ஸ்டேஷனில் இருந்தார்கள். பிடிபட்டவன் கொஞ்சம் படித்த வாசனையோடு பனிச்சென்ற பேண்ட் சர்ட்டில் இருந்தான். போலீஸ் விசாரிப்பில் உதடு வீங்கி மெலிசாய் ரத்தம் தெரிந்தது. இள வயது. கிருதா வளர்ப்பில் பிரியம் காட்டியிருந்தான்.

ரமணன்தான் அவனை விசாரித்தான்.

''உம் பேரென்னடா?''

''ரா... ராஜாராம்'' அவன் இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கொண்டே பதிலைச் சொன்னான்.

''இத்தனை நாளும் நீதான் போன் பண்ணினியா?''

''ஆ... ஆமா...''

''ராஸ்கல்...'' அடிக்கக் கையை ஓங்கினான் ரமணன். இன்ஸ்பெக்டர் புன்னகையோடு அவனுடைய கையைப் பற்றினார். ''நோ மிஸ்டர் ரமணன்... நாங்களே வேண்டிய அளவு குடுத்துட்டோம். இந்த டெலிபோன் மிரட்டல் வேலையை அவனா விரும்பிப் பண்ணலை. அவன் ஒருத்தரோட பேரைச் சொல்றான். அந்த நபரை உங்களுக்குத் தெரியுமான்னு பாருங்க...''

ரமணன் அந்த இளைஞனை ஏறிட்டான்.

''யார்ரா அவன்?''

''ம... ம... மகேந்திரன்...'' அடி விழுமோ என்கிற பயத்தில் ஒரு கையால் முகத்தை மூடிக் கொண்டே அழுதபடி சொன்னான்



அந்த இளைஞன்.

''எந்த மகேந்திரன்?''

''சி... சினிமாப் படமெல்லாம் எடுத்துட்டி ருக்காரே... அவர்தாங்க...''

ரமணன் கல்பனாவைத் திரும்பிப் பார்த்தான். ''கல்பனா! ஆள் யார்ன்னு புரியுதா? உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டு உன்னால நிராகரிக்கப்பட்டவன்.''

இளைஞன் குறுக்கிட்டான்.

''ஸார்... அந்த மகேந்திரன்கிட்ட நான் நடிக்க சான்ஸ் கேட்டுப் போனேன். அப்பத்தான் இந்த போன் நெம்பரை என் கையில குடுத்து - கல்பனாவுக்குப் போன் பண்ணி மிரட்டச் சொன்னாரு. 'என்னைக் கட்டிக்க மாட்டேன்னு சொன்னது - என்னிக்குமே சந்தோஷமா இருக்கக் கூடாது. பயத்தைக் குடுத்தே அவளைக் கொஞ்சங் கொஞ்சமா சித்ரவதை பண்ணணும். ஒரு மாசம் பூராவும் உனக்கு இதுதான் வேலை. இந்த வேலையை நீ வெற்றிகரமா முடிச்சுட்டு வா... நான் எடுக்கப் போற படத்துல உனக்கு ஒரு வேஷம் தர்றேன்'னாரு... நானும் அதுக்கு ஆசைப்பட்டு...''

ரமணன் இன்ஸ்பெக்டரிடம் திரும்பினான்.

''இன்ஸ்பெக்டர்... அந்த மகேந்திரனை மடக்கிட்டீங்களா?''

''இல்லே... ஆள்... அவுட்டோர் ஷூட்டிங்குக்காக ஜெய்ப்பூர் போயிருக்கான். அடுத்த வாரம் வர்றானாம். மடக்

விடுவோம்.''

''எனக்கு அந்த மகேந்திரன் மேலே லேசா டவுட் இருந்தது ஸார். ஆனா அவன் இப்படியெல்லாம் பண்ணுவான்னு நான் கொஞ்சம்கூட நினைச்சே பார்க்கலை. தான் கல்யாணம் பண்ணிக்க முடியாத பொண்ணு மேலே ஒருத்தனுக்கு இத்தனை வன்மம் இருக்குமா ஸார்?'' கல்பனா குறுக்கிட்டுப் படபடப்பாய்க் கேட்டாள்.

இன்ஸ்பெக்டர் சிக்கனச் சிரிப்புச் சிரித்தார். ''குரைக்கிற நாய் கடிக்காதுன்னு சொல்லுவாங்க... அந்த மகேந்திரன் விஷயமும் அப்படித்தான். அவன் சும்மா மிரட்டிப் பார்த்திருக்கான். அது ஒரு விளையாட்டு மிரட்டல்... இந்த விளையாட்டு மிரட்டலுக்கே சட்டத்துல செமத்தியான தண்டனை இருக்கு.''

தீபக் புறப்பட எழுந்தான். ''தேங்க்யூ... இன்ஸ்பெக்டர். நீங்க இவ்வளவு சீக்கிரத்துல ஆளை மடக்கி கல்பனாவுக்கு மனசு நிம்மதி குடுத்ததுக்காக என்னோட நன்றி. நாங்க வர்றோம் இன்ஸ்பெக்டர்.''

மூன்று பேரும் கிளம்பினார்கள்.

அந்த ராஜாராமனை மறுபடியும் லாக்கப்புக்குத் தள்ளிக் கொண்டு போனார்கள்.

**ர**மணன் பாதி வழியிலேயே விடைபெற்றுக் கொள்ள தீபக்கும் கல்பனாவும் பங்களாவுக்குள் நுழைந்தார்கள். தீபக் சொன்னான்:



''ஆளை அமுக்கியாச்சு. இனிமேலாவது சந்தோஷமா இருப்பியா?''

''ம் ம்...'' சிரித்தாள் கல்பனா.

''நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். சும்மாவாவது எவனோ மிரட்டறான். நீ பயப்பட வேண்டாம்னேன். நீ கேக்கலை...''

''சரி... நாம என்னிக்கு ஹனிமூன் கிளம்பறோம்?''

''நீ எப்ப சொன்னாலும்.''

''ஆபீஸுக்கு நீங்க லீவுதானே?''

''ஆமாம்...''

''இன்னிக்கு ராத்திரியே புறப்படுவோமா?''

''அவ்வளவு அவசரமா?''

''ச்சீ! எனக்கா அவசரம்? உங்க அவசரத்தைப் புரிஞ்சுகிட்டு நான் அவசரப்படறேன். அந்த டெலிபோன் பேர்வழியினாலே ரெண்டு மூணு நாளா நான் மரண அவஸ்தைப் பட்டுட்டேன் - சரியாத் தூங்காமே... சாப்பிடாமே.''

''அம்மா.''

போர்டிகோ வாசலில் தலையொன்று எட்டிப் பார்த்துக் கூப்பிட்டது.

கல்பனா திரும்பினாள்.

தோட்ட ஆள் நின்றிருந்தான்.

''என்ன குமாரசாமி?''

''போஸ்ட்மேன் வந்தாச்சம்மா... தபால் பூராவையும் நம்ம காம்பௌண்ட் கேட்

பொட்டியில் போட்டுட்டுப் போயிருக்கார். சாவி குடுத்திங்கன்னா.., தொறந்து எடுத்துட்டு வர்றேம்மா...''

''கொஞ்சம் இரு...'' சொல்லிக் கொண்டே சோபாயின் மேலிருந்த தபால் பெட்டியின் சாவியை எடுத்து நீட்டினாள் கல்பனா.

அவன் அதை வாங்கிக் கொண்டு நகர -

தீபக் சொன்னான். ''நீ லெட்டரெல்லாம் பார்த்துப் பிரிச்சு வை கல்பனா... நான் போய்க் குளிச்சுட்டு வந்துடறேன்.''

''சீக்கிரமா குளிச்சுட்டு வாங்க. எனக்கு அகோரப் பசி. இன்னிக்கு நான் நிறையச் சாப்பிடப் போறேன்.''

''பத்தே நிமிஷம்! வந்துடறேன்.''

சரியாய்ப் பத்து நிமிஷம்!

குளித்து இடுப்பில் டவலோடு வெளிப்பட்டான் தீபக். ட்ரஸ்ஸிங் ரூம் போக ஹாலைக் கடந்த போது - சோபாவில் கன்னத்திற்குக் கைகொடுத்து உட்கார்ந்திருந்த கல்பனா பார்வைக்குப் பட்டாள்.

''என்ன கல்பனா... பிரச்னைதான் முடிஞ்சு போச்சே...! இனியும் கன்னத்துல எதுக்காகக் கை?''

''ட்ரஸ் பண்ணிட்டு வர்றீங்களா? உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்.''

''என்கிட்ட பேசணுமா...? என்ன திடீர்ன்னு?''

''ட்ரஸ் பண்ணிட்டு வாங்க சொல்றேன்.''

தீபக் கல்பனாவின் முகத்திலிருந்த



தீவிரத்தைப் பார்த்து விட்டு ஸ்ட்ரஸ்ஸிங் அறைக்குள் நுழைந்து - குர்தா போன்ற ட்ரஸ்ஸில் சிக்கி வெளிப்பட்டான். கல்பனாவை நெருங்கினான்.

''என்ன விஷயம் சொல்லு...''

''மொதல்ல உட்காருங்க.''

அவளுக்கு எதிரே இருந்த நாற்காலியில் நிரம்பினான். கல்பனா அவனையே இமைக்காமல் பார்த்தாள்.

''என்ன கல்பனா, அப்படிப் பார்க்கிறே?''

''நான் கேக்கப்போற கேள்விக்கு உண்மையான பதிலைச் சொல்வீங்களா?''

''கேளு... சொல்றேன்.''

''பீட்டர்ங்கிறது யாருங்க?''

## 9

கல்பனா கேட்ட கேள்வியில் மனசுக்குள் ஒரு 'திடுக்' வாங்கினான் தீபக். முகத்தில் பாய்ந்து கொண்டிருந்த இரத்தம் சட்டென்று ஓடிப்போய் ஒளிந்து கொண்டது.

''பீ... பீட்டரா?'' குரல் குழறக் கேட்டான். மூளை பொய் சொல்ல யோசித்தது.

''ஆமாங்க...''

''அப்படி யாரையும் எனக்குத் தெரியாதே.''

கல்பனா முறைத்தாள். ''சரி... பீட்டரை உங்களுக்குத் தெரியாது. அப்படித்தானே?''

''ம்...''

''சென்னைக்குப் போன நீங்க ஏன் அப்படி

அவசர அவசரமா ஓடி வந்திங்க?'' கல்பனாவின் கேள்வியில் தீபக் எரிச்சலானான்.

''என்ன கல்பனா... கம்மா க்ராஸ் சொஸ்டியன் போட்டுட்டிருக்கே? எனக்குப் பசிக்குது. வந்து டிபனைப் பரிமாறு.''

படபடவென்று சொல்லிக் கொண்டே எழ முயன்றவனைக் கையமர்த்தினாள் கல்பனா. ''ஒரு நிமிஷம் உட்கார்ந்து இந்த லெட்டரைப் படிக்கப் பார்க்கறீங்களா?''

கையிலிருந்த கடிதத்தைக் காட்டினாள்.

''லெட்டரா?''

''ம்... உங்க பேருக்கு வந்த லெட்டர். படிச்சுப் பாருங்க.''

நீட்டிய கடிதத்தை வாங்கிப் படித்தான் தீபக்.

**அன்புள்ள தீபக்,**

**இது என்னுடைய மூன்றாவது கடிதம். பீட்டரின் விவகாரத்தில் உன்னுடைய பெயர் நியூஸ் பேப்பருக்கும், போலீஸுக்கும் போவதற்கு முன் நான் உன்னிடம் கொஞ்சம் பிசினஸ் பேச வேண்டும். உன்னுடைய கம்பெனியின் ப்ரொடக்டிவிடி சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் எனக்குத் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு தஸ்தாவேஜையும் பாதுகாக்கிற பொறுப்பு உன்னிடம்தான் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். உனக்கு**



**இன்னும் இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். இந்த இரண்டு நாள் அவகாசத்தில் ஒவ்வொரு தஸ்தா வேஜையும் ஜெராக்ஸ் காப்பி எடுத்து எனக்குத் தர வேண்டும். 'இது விஷயமாய்... நீ... போலீஸுக்குப் போனால் உனக்குக் கெட்ட காலம் ஆரம்பமாகி விட்டது என்று அர்த்தம். தஸ்தாவேஜுகளின் ஜெராக்ஸ் காப்பிகளை ஒரு ப்ரீஃப்கேஸில் வைத்து நான் அடுத்த கடிதத்தில் குறிப்பிடுகிற இடத்துக்கு நீ வர வேண்டும்.**

**இப்படிக்கு,**

**உன் பிரியமான நண்பன்.**

கடிதத்தைப் படித்து முடித்த தீபக்கின் நெற்றியில் சரம் சரமாய் வியர்வை. எதிரே உட்கார்ந்து மோவாயைத் தாங்கியிருந்த கல்பனா கேட்டாள் - மெல்லிய குரலில்.

''இப்பவாவது சொல்றீங்களா? யார் அந்தப் பீட்டர்?''

''அ... அது வந்து கல்பனா...''

''சொல்லுங்க. இப்பத்தான் ஓர் ஆபத்திலிருந்து தப்பிச்சோம். இந்தப் புது ஆபத்து என்னான்னு எனக்குப் புரியலை! யாரிந்தப் பீட்டர்? யாரிந்தப் 'பிரியமான நண்பன்'?''

''க... கல்பனா...'' குரல் திக்கியது தயக்கிற்கு.

''ம்... சொல்லுங்க...'' கல்பனா கொஞ்சம்

அதட்டலாய்க் கேட்டதும் - இதற்கு மேலும் மறைக்க விரும்பாத தீபக் ஓர் ஐந்து நிமிஷம் செலவழித்து எல்லாவற்றையும் சொன்னான். அதை மௌனமாய்க் கேட்டு முடித்த கல்பனா சொன்னாள்:

''நீங்க தப்புப் பண்ணிட்டீங்க.''

''தப்பா?''

''ஆமாங்க. தப்புதான். அந்த பீட்டர் உங்க ஃப்ரெண்ட் தானே?''

''ஆமா...''

''அவரை நீங்க கொலை செய்யலை தானே?''

''ஆமா...''

''பின்னே எதுக்காகப் பயந்துட்டு வந்தீங்க? நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தகவலைச் சொல்றதை விட்டுட்டு நீங்களே கொலை செஞ்ச மாதிரி பயந்து போய் ஓடி வந்திருக்கீங்க. போலீஸுக்கு இப்பத்தான் உங்க மேல சந்தேகம் அதிகமாகியிருக்கும். பீட்டரைக் கொலை செஞ்ச யாரோ அந்தப் பழியை உங்க மேலே போட்டு தஸ்தாவேஜுகளுக்காக பிளாக் மெயில் பண்ணிட்டிருக்காங்க.''

''இப்போ என்ன பண்ணலாம் கல்பனா?''

''போலீஸுக்குப் போய் இந்த விஷயத்தைச் சொல்லி இந்த லெட்டரையும் கொடுத்துட்டு வந்துடலாம். இந்தப் பிரியமான நண்பனை அவங்க கவனிச்சுக்குவாங்க.''



''வேண்டாம் கல்பனா.''

''என் வேண்டாம்னு சொல்றீங்க?''

''போலீஸ் என்மேலதான் சந்தேகப்படுவாங்க. பேப்பர்ல போட்டோவோட எம்பேரும் அடிபடும். நான் வேலை பார்க்கிற கம்பெனிக்கு என்னால கெட்ட பேர் வரும்.''

''சரி! போலீஸுக்குப் போகாமே இந்த விஷயத்தை எப்படி முடிக்கப் போறீங்க? அவன் கேட்ட தஸ்தாவேஜுகளை ஜெராக்ஸ் காப்பி எடுத்துக் கொண்டு போய்த் தரப் போறீங்களா?''

''இல்லை. தர்ற மாதிரி நடிச்சு அவனைக் கையும் களவுமாய்ப் பிடிக்கப் போறேன். பிடிச்சு ரெண்டு தட்டுத் தட்டி உண்மையைச் சொல்ல வெச்சுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போயிடலாம்.''

''நீங்க கொக்கு தலையில வெண்ணெய் வெக்கறீங்க!''

''வெச்சாலும் பரவாயில்லை கல்பனா. அவசரப்பட்டுப் போலீஸுக்குப் போனா வீண் சிக்கல்ல மாட்டிக்குவோம். இப்பத்தான் உன்னைப் போன்ல மிரட்டிட்டிருந்த ஒருத்தனைப் போலீஸ் பிடிச்ச விவகாரம் முடிஞ்சிருக்கு. ஸோ இந்த விவகாரத்தை நாம முடிப்போம்.''

சொன்ன கணவனை -

புதுக் கவலையோடு பார்த்தாள் கல்பனா.

**ரா**த்திரி பதினோரு மணி.

கோவை மாநகராட்சி **'மீண்டும் வருக - வணக்கம்'** என்று சொன்ன சிமெண்ட் பலகையை ஒட்டின மாதிரிச் சென்ற மண் பாதையில் அந்த பைக் திரும்பியது. தலையில் தொப்பி. மார்பில் ஜெர்கின் கோட். கால்களில் மிலிடெரித் தனமான பூட்ஸ் சகிதம் அந்த உருவம் பைக்கின் மேல் ஆரோகணித்திருந்தது. வாயில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

மண் ரோட்டில் அப்பியிருந்த இருட்டை பைக்கின் ஹெட்லைட் வெளிச்சம் கழுவிக் கொண்டே போய்ப் பாதையின் முடிவிலிருந்த அந்த பங்களா காம்பௌண்ட் கேட்டின் முன்னால் மௌனமானது. வாயிலிருந்த சிகரெட்டை உதிர்த்தது. உருவம் கீழே இறங்கி இருட்டில் நடந்து காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போயிற்று. போர்டிகோ படிகளில் உட்கார்ந்திருந்த ஓர் ஆசாமி உருவத்தைப் பார்த்ததும் எழுந்தான். கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டான்.

''யார்?''

''நான்தான்...''

உருவத்தை ஆசாமி அடையாளம் கண்டு கொண்டதும் புன்னகைத்தான். கதவைத் திறந்து விட்டான். ''உங்களுக்காகத்தான் ஐயா காத்திட்டிருக்கார். மேலே ரூமுக்கு வர வேண்டாம்ன்னு சொல்லிட்டார். உங்களைக் கீழிருந்தே இண்ட்டர்காம் மூலமாப் பேசச் சொன்னார்.''



''சரி...'' என்று சொல்லித் தலையாட்டிய உருவம் உள்ளே போய் மேஜையின் மேலிருந்த இண்ட்டர்காமை தொட்டு ரிஸீவரை எடுத்து பட்டனைத் தட்டிவிட்டுக் காத்திருந்தது.

சில விநாடிகளுக்குப் பிறகு -

ரிஸீவர் எடுக்கப்படும் சத்தம். ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

''யாரது?''

''நான்தான் ஸார்.''

''ம் ப்ராக்ரஸ் எப்படியிருக்கு?''

''எல்லாம் ஒழுங்கா போயிட்டிருக்கு ஸார். பீட்டரோட கொலை விவகாரத்துல தீபக் ரொம்பவும் அரண்டு போயிருக்கான்.''

''அப்போ நான் கேட்ட தஸ்தாவேஜு சீக்கிரமே கிடைக்கும்.''

''கண்டிப்பாக் கிடைக்கும் ஸார்.''

''தீபக் போலீசுக்குப் போயிடப் போறான்.''

''போக மாட்டான் ஸார்.''

''சரி... ரெண்டு நாள் கழிச்சு வந்து என்னைப் பாரு.''

''ஸார்... ஒரு சின்ன அப்ளிகேஷன்.''

''என்ன?''

''நீங்க எனக்குத் தரப் போற பணத்துல கொஞ்சம் அட்வான்ஸ் வேணும்.''

''ஏற்கனவே நீ இருபதாயிரம் வாங்கியிருக்கே.''

''நான் இல்லேன்னு சொல்லலையே ஸார்?

இனியும் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கு. குடுத்தாப் பரவாயில்லை.''

''தீபக்கிட்டேயிருந்து தஸ்தாவேஜுகளை வாங்கிக் குடுத்துட்டு - பேரின தொகை முழுசையும் வாங்கிக்க.''

''சரி ஸார்.''

''அப்புறம்... தீபக்குக்குப் போன் பேசறதாயிருந்தா பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து பேசாதே. நம்ம கோடவுன் டெலிபோனுக்குப் போயிடு.''

''சரி ஸார்.''

மறுமுனையில் ரிஸீவர் சாத்தப்பட்டது. உருவம் திரும்பி நடந்து வாசலுக்கு வந்து.. ஒரு சிகரெட்டைக் கொளுத்தி உதட்டில் பொருத்திக் காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே இருந்த பைக்கை நோக்கிப் போயிற்று.

மறுநாள் காலை.

பத்து மணி. ரமணனின் பிரத்யேக அறை.

டி.வி.யில் இந்தியா - இலங்கை கிரிக்கெட் போட்டி ஒளிபரப்பாகிக் கொண்டிருக்க - நாற்காலியைப் போட்டுக் கொண்டு சாய்ந்திருந்தான் ரமணன். வாசலில் பைக் தலையைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தது.

''அப்படி விளாசுடா... என் டோனி கண்ணா...'' ரமணன் ஆர்ப்பரித்த அதே விநாடி -

''ரமணன்...''



குரல் கேட்டுத் திரும்பினான். ஆச்சரியப் பட்டான்.

''அடேடே... வா... கல்பனா... வா! நீ தகவல் சொல்லியிருந்தா நானே உன் வீட்டுக்கு வந்திருப்பேன்'' சொல்லிக் கொண்டே டி.வி.யின் வால்யூமைக் குறைத்து நாற்காலியை இழுத்துப் போட்டான். ''உட்கார்.''

கல்பனா உட்கார்ந்தாள். ரமணன் கேட்டான்.

''என்ன விஷயம் கல்பனா?''

''ஒரு புதுப் பிரச்னை ரமணன்...'' 'உச்' கொட்டினாள் கல்பனா.

''புதுப் பிரச்னையா?''

''எஸ்... என்னோட கணவர் சம்பந்தப் பட்ட பிரச்னை.''

ரமணன் முகம் மாறினான். ''என்ன கல்பனா... என்னென்னமோ சொல்றே? உன் கணவர் சம்பந்தப்பட்ட பிரச்னையா?''

''ஆமா! நான் சொல்றதைக் கொஞ்சம் கவனமாக் கேளுங்க ரமணன். இந்த விஷயம் வெளியே யாருக்கும் தெரியக் கூடாது. இதுசம்பந்தமா நீங்க போலீஸ் உதவிக்கும் போகக் கூடாது.''

''மொதல்ல விஷயத்தைச் சொல்லு.''

எல்லாவற்றையும் கல்பனா சொன்னாள். உன்னிப்பாய் ஐந்து நிமிஷம் கேட்ட ரமணன் நெற்றியைத் தேய்த்தான்; கேட்டான்.

''பீட்டரை இதுக்கு முன்னாடி நீ

பார்த்திருக்கியா கல்பனா?''

''நோ. பேரையே இப்பத்தான் கேள்விப் படறேன்.''

''சம்பவம் நடந்து ரெண்டு மூணு நாளாயிடுச்சு. நியூஸ் பேப்பர்லேயும் வந்தாச்சு?''

''ஆமாம்.''

''மெட்ராஸ் போலீஸ் கோயமுத்தூர் வந்து தீபக்கை விசாரிச்சிருக்காங்க?''

''ஆமா.''

''இந்த விஷயத்துல நான் எப்படி உனக்கு உதவ முடியும் கல்பனா?''

''என்னோட கணவருக்குத் தெரியாமே அந்தப் பேர் வழியை நாம ரெண்டு பேரும் மடக்கணும்.''

''அதுதான் எப்படின்னு கேக்கறேன்?''

''என்னோட ஹஸ்பெண்ட் அந்தப் பேர்வழியைச் சந்திக்கப் போற நிமிஷம் நீங்க அவருக்குத் தெரியாமே அவரை ஃபாலோ பண்ணணும்.''

''அவருக்கு ஆபத்து வராமே ஒரு பாடிகார்டா நான் போகணும் - அவ்வளவுதானே? என்னிக்குப் போகணும்?''

''நான் தகவல் சொல்றேன் ரமணன். நாளைக்குப் பூராவும் நீங்க எந்த போன் நெம்பர்லே கிடைப்பீங்க?''

செல்போன் நெம்பரைச் சொன்னான் ரமணன்.



பங்களாவுக்குத் திரும்பினாள் கல்பனா.

சோபாவில் சாய்ந்து ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த தீபக் கல்பனாவைப் பார்த்தபடி கேட்டான். ''ஆஸ்பத்திரிக்குப் போய் தோழியோட குழந்தையைப் பார்த்துட்டு வர இவ்வளவு நேரமா?''

''ஆட்டோ கிடைக்கலை.''

''சரி. இப்படி உட்கார் கல்பனா.''

சலிப்போடு கல்பனா உட்கார்ந்தாள்.

தீபக் சொன்னான். ''காலையில் எனக்கு ஒரு தபால் வந்தது.''

''தபாலா? என்ன தபால்?''

''நேத்து மாதிரியே நம்ம லெட்டர்பாக்ஸ்ல யாரோ போட்டுட்டுப் போயிருக்காங்க. பொன்னுசாமிதான் கொண்டுட்டு வந்து கொடுத்தான்.''

மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டே அந்த பழுப்பு நிறக் கவரை நீட்டினான் தீபக். கல்பனா கவரை வாங்கிப் பிரித்து அதன் வாயை ஊதினாள்.

கவரின் உள்ளேயிருந்து -

போஸ்ட் கார்டு சைஸில் போட்டோ ஒன்று வழுக்கிய படி மடியில் வந்து விழுந்தது. எடுத்துப் பார்த்தாள் கல்பனா. அடுத்த விநாடி -

மூளைக் கேந்திரத்தில் ஒரு ஹை வோல்டேஜ் ட்ரான்ஸ்பார்மர் வெடித்த

மாதிரியான உணர்ச்சி. அதிர்ச்சியை விழுங்கி

போட்டோவை மறுபடியும் பார்த்தாள்.

போட்டோவில் -

தீபக் கையில் கத்தியோடு நின்றிருக்க, கீழே தரையில் அந்த உருவம் ரத்த வழியலோடு தெரிந்தது. மல்லாந்திருந்தது.

போட்டோவின் அடியில் கிறுக்கலாய் -

ஒரு வாசகம் ஒட்டப்பட்டிருந்தது.

**'தீபக்! கொலையுண்டு கிடக்கும் பீட்டருக்குப் பக்கத்தில் நீ நிற்கிறாய். அதுவும் கையில் கத்தியோடு. இந்தப் போட்டோ போலீஸ் கைக்குப் போனால் உன் கதி என்ன? யோசி!'**

**இப்படிக்கு**

**உன் பிரியமான நண்பன்.**

## 10

கல்பனாவின் வயிற்றில், ஒரு பயமரம் விறுவிறுவென்று ஏராளமான கிளைகளோடு வளர்ந்தது. மேலுதட்டிலும் நெற்றியிலும் ஒரு குபீர் வியர்வையை வாங்கினாள். போட்டோவும் கைகளும் நடுங்க தீபக்கை ஏறிட்டாள். குரலில் எவரஸ்ட் குளிர் அடித்தது.

''என்...னங்...க... இது...?''

தீபக் பதட்டக் குரலில் சொன்னான். ''இந்தப் போட்டோ நிஜமில்லை கல்பனா...!



வனோ என்னோட போட்டோவை வச்சி... போட்டோகிராபிக் ஆர்ட்டை பயோகம் பண்ணி... இந்தப் போட்டோவைப் பிரிபேர் பண்ணியிருக்கான். இது மோசடி போட்டோ...''

பார்வையைக் கூர்மையாக்கிய கல்பனா - போட்டோவை மறுபடியும் பார்த்தாள்.

என்னால நம்ப முடியலைங்க... போட்டோ ரொம்பவும் தத்ரூபமா இருக்கு... நீங்க ன்கிட்டே எதையோ மறைக்கிறீங்க... உண்மையைச் சொல்லுங்க. பீட்டரைக் கொலை செஞ்சது நீங்கதானே?'' கல்பனாவின் குரல் தழுதழுத்தது.

''நோ... கல்பனா... நீ அந்த போட்டோவை நம்பாதே... பீட்டரைக் கொலை செஞ்ச எவனோ ஒருத்தன் எதையோ எதிர்பார்த்து ன்கூட விளையாடறான்.''

''உங்ககிட்ட அவன் எதை எதிர்பார்க்கிறான்?''

''என்னோட கம்பெனி சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் அவனுக்கு வேணுமாம். அதைத்தர வழியில்லைன்னா ரெண்டு இலட்ச ரூபாய் வேணுமாம்.''

கல்பனா கணவனை ஏறிட்டாள். கண்களில் நீர் நிறைந்திருந்தது.

''என்னங்க... நான் ஒரு கேள்வியைக் கேட்டா... நீங்க உண்மையைச் சொல்லணும்.'' போட்டோவைக் கவரில் போட்டுக் கொண்டே கேட்டாள் கல்பனா.

''கேளு...''

''நீங்க உண்மையாவே பீட்டரைக் கொலை செய்யலை தானே?''

''செய்யலை... கல்பனா... என்னை நம்பு.''

''பின்னே... நாம போலீஸுக்குப் போயிட்டா என்னங்க. இந்த லெட்டரையும் போட்டோவையும் காட்டுவோம். அவங்க உங்களை நம்புவாங்க. இது ப்ளாக் மெயில்னு அப்பட்டமாத் தெரியுது.''

''வேண்டாம் கல்பனா...! போலீஸுக்கு நாம போறது சரியில்லை. நான் அதை விரும்பலை. என்னோடு விளையாடற இந்தப் பேர்வழியை நானே டீல் பண்ணிக்கிறேன். இன்னும் ரெண்டு நாள்ல நானே அவனை மடக்க-

அவன் 'றேன்' சொல்லி முடிப்பதற்குள் டெலிபோன் வாயைத் திறந்து கூப்பிட ஆரம்பித்தது.

ரிஸீவரைப் போய் எடுத்தான் தீபக்.

''ஹலோ...''

ரிஸீவரில் குரல் கேட்டது. ''தீபக்! போட்டோ எப்படியிருக்கு?''

''ராஸ்கல்!''

''உன்னைப் பத்தி நீயே சுயவிமர்சனம் பண்ணிக்கக் கூடாது தீபக். போலீஸ் கையில அந்தப் போட்டோ ஒண்ணு மாத்திரம் கிடைச்சாப் போதும். நீ ரொம்பவும் ஈஸியா ஒரு விடியற்காலையில் தூக்குக்குப் போயிடுவே!''

''உனக்குத் துணிச்சல் இருந்தா... எம் முன்னாடி வந்து பேசடா பார்க்கலாம். பொட்டைத்தனமா... ஏன் டெலிபோன்ல பேசறே?''



''இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்கு உன்னை நான் சந்திக்கத்தான் போறேன். ரெட்ஃபீல்ட் ஏரியாவிலே அப்துல்ரஹீம் ரோடு தெரியுமா?''

''ம்... சொல்லு.''

''அங்கே நீ வரணும். சரியாப் பத்து மணிக்கு நான் உன்னை எதிர்பார்த்துக் காத்திட்டிருப்பேன். வரும் போது வெறும் கையை வீசிட்டு வந்துடாதே. நான் கேட்டிருந்த உன் கம்பெனியோட தஸ்தாவேஜுகள் வேணும். உன்னால அதைக் கொண்டுட்டு வரமுடியலைன்னா ரெண்டு இலட்ச ரூபாய் பணம் வேணும்.''

''தஸ்தாவேஜுகளையே கொண்டு வர்றேன்.''

''என்னை ஏமாத்த நினைச்சா... நீ போலீஸுக்குப் போயிடுவே தீபக்.''

''பயப்படாதே... நான் கண்ணாடி வீட்லயிருந்துகிட்டுக் கல்லெறிய மாட்டேன். தஸ்தாவேஜுகளைக் குடுத்துட்டா என்னைத் தொந்தரவு பண்ணமாட்டியே?''

''மாட்டேன்...''

''நம்பலாமா?''

''நம்பு... வரும்போது ரெட்ஃபீல்ட்ஸுக்கு நீ மட்டுந்தான் வரணும். உன்கூட யாரையும் கூட்டிட்டு வரக்கூடாது.''

''வரமாட்டேன்.''

''குட்...! ரிஸீவரை வெச்சுடு'' சிரித்துவிட்டு ரிஸீவரை சாத்தியது குரல்.

தீபக்கும் ரிஸீவரைச் சாத்தினான் - கோபமாய்.

''போன்ல யாருங்க?''

''அந்த ராஸ்கல்தான்!''

''என்ன சொல்றான்?''

''கம்பெனி தஸ்தாவேஜுகளை எடுத்துக்கிட்டு ராத்திரி பத்து மணிக்கு ரெட்ஃபீல்ட்ஸுக்கு வரச் சொல்றான்.''

''போறீங்களா?''

''போகாம இருக்க முடியுமா?''

''கம்பெனி தஸ்தாவேஜஸ்?''

''அதோ... அதுதான்... கம்பெனி தஸ்தாவேஜஸ்!'' பழைய நியூஸ் பேப்பர் நான்கைந்தைக் காட்டினான் தீபக்.

லேசாய் முகம் மாறினாள் கல்பனா. ''இதையா கொண்டுட்டுப் போறீங்க?''

''ஆமா...''

''அவனுக்குக் கோபம் வராதா?''

''வரட்டுமே!''

அலட்சியமாய்ச் சொன்ன தீபக்கைக் கொஞ்சம் பயத்தோடு பார்த்தாள் கல்பனா. மனசு பரபரத்தது. 'ரமணனிடம் இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டுமே!'

**ரா**த்திரி மணி பத்து.

ரெட்ஃபீல்ட் ஏரியா. எங்கும் நிசப்தம். எதிலும் நிசப்தம்.



ஆரோக்கியமான பங்களாக்களில் - ஆரோக்கியம் இல்லாத பணக்காரர்கள் தூங்குவதற்காகத் தூக்க மாத்திரைகளைத் தேடிக் கொண்டிருக்க - 'நைட் டூட்டி பார்க்க வந்த வாட்ச்மேன்கள் அந்நேரத்துக்கே கொட்டாவி விட்டு - தூக்கத்தைச் சொடுக்குப் போட்டு விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

தீபக், அப்துல்ரஹீம் ரோட்டின் முனையில் - கொட்டியிருந்த இருட்டில் ஒரு தோல் பையோடு நின்றிருந்தான். கொஞ்சம் தள்ளி - தாமஸ் பார்க் அருகில் அவனுடைய பைக் தலையைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தது.

ஜாக்கிரதை உணர்வோடு - தீபக் சுற்றுமுற்றும் பார்த்தான்.

அந்தப் பிராந்தியம் பூராவும் அபார நிசப்தம். தெரு விளக்குகள் சிந்திய வெளிச்சத்தை இருட்டு பாதி வழியிலேயே விழுங்கியிருந்தது. லேசாய் அடித்த குளிர்காற்று - தீபக்கின் முகத்தையும் பிடரியையும் முகர்ந்து பார்த்துவிட்டுப் போனது. யாரோ ஒருவன் வேகமாய் மணி அடித்தபடி சைக்கிளில் போனான்.

தீபக் தன் மணிக்கட்டை உயர்த்தி வாட்ச்சைப் பார்த்தான். நேரம் 10.05.

'டெலிபோன் ஆசாமி இன்றைக்காவது வருவானா மாட்டானா...? வழக்கம்போல் பாவ்லா காட்டிவிட்டுப் போய்விடுவானா?'

- யோசித்தபடி சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே காத்திருந்தான் தீபக்.

நேரம் 10.10.

கால் லேசாய்க் கடுக்க ஆரம்பித்தது தீபக்கிற்கு. மெல்ல நடந்து போய் பைக்கின் மேல் உட்கார்ந்தான். மனசுக்குள் ஒரு தீர்மானமான எண்ணம் ஓடியது.

'இனி ஒரு பத்து நிமிஷம் பார்த்துவிட்டுப் புறப்பட்டுட வேண்டியதுதான். ராஸ்கல்... விளையாடுகிறானா?'

நேரம் 10.15.

எரிச்சலுக்குப் போய்க் கொண்டிருந்தான் தீபக்.

நேரம் 10.17 ஆன போது -

கொஞ்சத் தொலைவில் அந்த உருவம் தெரிந்தது. ரோட்டோர இருட்டில் மெதுவாய் நடந்து வருவது தெரிந்தது.

தீபக் உஷாரானான். பைக்கில் சாய்ந்து நின்றிருந்தவன் நிமிர்ந்தான். 'வருகிறவன் அந்த டெலிபோன் ஆசாமி தானா?'

'இல்லை... வேறு யாராவதா?'

நடந்து வருபவனையே பார்த்துக் கொண்டிருந்தான். தீபக் கண்களைக் கூர்மையாக்கி, அவனுடைய முகத்தைத் தேடினான்.

இருட்டில் அது கிடைக்க மறுத்தது. உயரமாய் தாட்டியாய் - காற்றில் அலையும் கிராப்போடு தெரிந்த அவன் இப்பொழுது தீபக்கை நெருங்கியிருந்தான். கடந்து போகிற விநாடி சட்டென்று நின்றான். தீபக்கிடம் கேட்டான். இயல்பான குரல்.

''ஸார்... புலியகுளம் அந்தோணியார்



கோயிலுக்கு எப்படிப் போகணும்?''

''நேரா...'' என்றான் தீபக். ('டெலிபோன் பேர் வழி இவன்தானா?')

''தாங்க்யூ...! மணி எவ்வளவு ஸார் இப்போ?''

''பத்து இருபது...'' ('இவனில்லை போலிருக்கிறதே!')

''தீப்பெட்டி இருக்குமா ஸார்?''

''இல்லே'' ('யாரிவன்...?')

''என்ன தீபக்... இதெல்லாம் வெச்சுக்க வேண்டாமா?''

தீபக் சட்டென்று நிமிர்ந்தான். ''நீ... நீ?''

''நீ... அடிக்கடி திட்டுவியே... அந்த ராஸ்கல்தான்...! நான் பொட்டைப் பயல் இல்லேங்கிறத நிரூபிச்சுட்டேன்... இந்த நிமிஷம் உனக்கு முன்னாடிதான் நின்னுட்டிருக்கேன்.''

உஷ்ணமானான் தீபக்.

''பீட்டரை நீதான் கொன்னியா?''

''ஆமா...'' என்றான் அவன் அலட்சியமாய்.

''எதுக்காக?''

''உன்னை என் பிடிக்குள் கொண்டு வரவேண்டாமா?''

''என்னோட கம்பெனி தஸ்தாவேஜுகள் உனக்கு எதுக்குப் பிரயோஜனப்படும்?''

''அதைப்பத்தி நீ கவலைப்படாதே. தஸ்தாவேஜுஸ் கொண்டு வந்திருக்கியா?''

''கொண்டு வந்திருக்கேன்.''

''குடு.''

அவன் கையை நீட்டிய அதே விநாடி - தீபக் தன் கையிலிருந்த தோல் பையால் - அவன் முகத்தை இருட்டில் குறிபார்த்து 'ர்ர்ர்ரப்'பென்று அறைந்தான்.

எதிர்பார்க்காத ஒரு விநாடியில் - அடிவாங்கி - பொறி கலங்கிப் போன அவன் - சட்டென்று சுதாரித்துத் தீபக்கின் மேல் பாய்ந்தான். கையைச் சாய்மானமாகச் சாய்த்து - கழுத்தை வெட்ட - தீபக்கின் நரம்புகளில் நெருப்புப் பாய்ந்தது. கையிலிருந்த தோல் பை எகிறிப் போய் விழுந்தது.

தீபக்குக்கு புரிந்துபோயிற்று. மூளை சொல்லிக் காட்டியது.

'தீபக்! இவன் சாமானியப்பட்டவனில்லை. கராத்தேயில் பிளாக்பெல்ட் வரைக்கும் போயிருப்பான் போலிருக்கிறது. பின் வாங்கலாமா...! இல்லை...?'

யோசிப்பதற்குள் - அந்த ஆசாமி செயல்பட்டான்.

தீபக்கின் வயிற்று மையத்தில் அவனுடைய வலக்காலின் பெருவிரல் கத்தி மாதிரிப் பாய்ந்து, ஒரு மரண வலியை உற்பத்திப் பண்ணியது.

''ம்ம்... மாஆ'' - கீழே சுருண்டு விழப் போன தீபக் - சமாளித்து எழுந்து அவனை எதிர்கொள்ள முயன்ற அதே விநாடி -

அப்துல்ரஹீம் ரோட்டின் அடுத்த முனையில் ஒரு ஹெட்லைட் வெளிச்சம்



பிரகாசமாய்த் தெரிந்தது - 'த்தட்த்தட்' என்ற சத்தம் கேட்டது.

பைக் சத்தம்.

அந்த பைக்கின் ஹார்ன் சத்தம் விநோதமாய்க் கேட்க - தீபக்கைத் தாக்கிக் கொண்டிருந்த அவன் கீழே தள்ளிக் கிடந்த அந்தத் தோல்பையை எடுத்துக் கொண்டு பைக்கை நோக்கி வந்தான். மூச்சிறைத்துக் கையாட்டினான்.

பைக்கும் அவனை நெருங்கியிருந்தது. பைக்கில் இருந்து ''ஜோ... பின்னாடி போலீஸ் வருது. எப்படியோ நம்மை வாசம் புடிச்சுட்டாங்க. சீக்கிரமா வந்து பின்னால ஏறு.'' சொன்ன அந்தக் குரல்?

தீபக்கிற்கு ரொம்பவும் பரிச்சயமான குரல் அது...!

அது யார் குரல்...?

ஒரு தீர்மானத்திற்கு வருவதற்குள் - அந்த ஜோ... தோல்பையை எடுத்துக் கொண்டு - நகர்ந்து கொண்டிருந்த பைக்கைக் குறிவைத்து - பில்லியனில் தாவி ஏறினான். அவன் தாவி ஏறியதும் பைக் சீறிக் கொண்டு புறப்பட்டது. ''டேய்... நில்லுங்கடா!''

தீபக், பைக்கை நோக்கி ஓடி வந்தான். பைக் அவனைத் தவிர்த்துவிட்டு சிவப்பு விளக்கோடு - அம்பு மாதிரிப் பறந்தது.

விநாடி நேரம் ஸ்தம்பித்துப் போன தீபக் - தன்னுடைய பைக்குக்கு வந்தான். உதைத்து உயிரூட்டிக் கிளப்பினான். மனசுக்குள் பைக்கில் வந்த ஆசாமியின் குரல் இன்னமும்

எதிரொலித்துக் கொண்டிருந்தது. அந்தக் குரல்...? அந்தக் குரல்?

நிச்சயமாய் - வெகு பரிச்சயம்.

முன்னால் போய்க் கொண்டிருந்த பைக் ரேஸ்கோர்ஸ் ரோட்டைத் தாண்டி - ராகம், தாளம், பல்லவி தியேட்டர்களைத் தாண்டிக் கொண்டிருந்தது. அபார வேகம், புகை பீச்சியது.

'எந்தப் பக்கம் திரும்புவார்கள்?'

ஆக்ஸிலேட்டரை முறுக்கினான் தீபக்.

அவர்கள் வலப்பக்கம் திரும்பி - இடதில் திருப்பி - 'ர்ர்ர்ர்'ரென்ற உச்சபட்ச வேகத்தில் மேம்பாலம் ஏறினார்கள்.

தீபக் பார்த்துக் கொண்டிருந்த போதே -

பாலத்தின் மையத்தில்...

அந்த மோசமான விபத்து நடந்தது.

பாலத்தின் இறங்கு முகத்தில் மிகவேகமாய் - வந்து கொண்டிருந்த ஆட்டோ திடீரென்று ஒரு பக்கமாய் விலக - பைக் அதன் உடம்பை இடிக்க - உட்கார்ந்திருந்த இரண்டு பேரும் மேற்கிலும் - கிழக்கிலும் சிதறினார்கள்.

பைக் உருண்டு பெட்ரோல் டாங்க்கை உடைத்துக் கொண்டு 'களகள'வென்று வழிய - தீபக் அருகே போய் பைக்கை நிறுத்தி -

கிழக்கு பக்கமாய் -

விழுந்து கிடந்தவனிடம் ஓடி வந்து குனிந்தான்.

உடம்பில் ரத்தக் காயம் ஏதுமில்லாமல் - ஒரு தற்காலிக மயக்கத்திற்குப் போயிருந்த



அவனைப் பார்த்ததும் - தீபக் நெஞ்சு நிறைய அதிர்ச்சி வாங்கினான். இவன்... இவன்...?

அதிர்ச்சியில் ரத்தம் மைனஸ் உறை நிலைக்குப் போயிற்று.

## 11

'இவன்... இவன்... பீட்டர்!'

தீபக்கின் இருதயம் அதிர்ச்சியிலும் - மகிழ்ச்சியிலும் தத்தளித்தது. அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போது - பின்பக்கம் ஹெட்லைட் வெளிச்சம் தெரிந்து - பைக்குகள் படபடக்கும் தீவிர சத்தம் கேட்டது.

தீபக் திரும்பினான்.

ரமணன் ஒரு பைக்கிலும் - போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு பைக்கிலும் வேக வேகமாய் வந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தார்கள். ரமணன் தீபக்கிடம் ஓடி வந்தான்.

''தீபக்... உங்களுக்கொண்ணும் ஆபத்தில்லையே?''

''நோ... நோ...'' அவன் தலையாட்ட, ரமணன் மற்றவர்களிடம் ஓடினான். இன்ஸ்பெக்டர் விழுந்து கிடந்த ஆட்டோ டிரைவரையும் - பயணம் செய்த பிரயாணியையும் நெருங்கினார். அந்த நேரத்திலும் கும்பல் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேர்ந்து கொண்டிருக்க -

ஆம்புலன்சிற்கு டெலிபோன் போயிற்று.

ஜி. ஹெச்.

இன்டென்சிவ் வார்டில் ஜோவுக்கும், பீட்டருக்கும் ஒரு யுத்தகால அவசரத்தோடு சிகிச்சைகள் நடந்து கொண்டிருக்க - வெளியே இருந்த வராந்தாவில் இன்ஸ்பெக்டர், ரமணன், தீபக் காத்திருந்தார்கள். இன்ஸ்பெக்டர், தீபக்கிடம் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''இவன் பீட்டர்தானா... இல்லை... வேற யாராவது?''

''பீட்டர்தான் இன்ஸ்பெக்டர்.'' தீர்க்கமாய்ச் சொன்னான் தீபக்.

''சென்னைல - அந்த அதிகாலை நேரத்துல பீட்டர் - வயித்துல கத்தி பாய்ஞ்சு செத்துக் கிடந்ததை உங்க கண்ணால பார்த்ததா சொன்னீங்க?''

''எஸ்! அதையும் பார்த்தேன் இன்ஸ்பெக்டர்!''

''பீட்டர் அங்கே செத்திருந்தா... இங்கே எப்படி உயிரோடு வர முடியும் தீபக்? பேப்பர்ல நியூஸ் வந்ததா சொல்றீங்க?''

''ஆமா இன்ஸ்பெக்டர்! பேப்பர்லேயும் நியூஸ் பார்த்தேன். அது சென்னை எடிஷன்.''

''என்ன பேப்பர்?''

''காலைக் குரல்...''

''அந்தக் 'காலைக்குரல்' பேப்பரைத் தவிர - மற்ற பேப்பர்ஸைப் பார்த்தீங்களா?''

''பார்க்கலை...''



''பார்த்திருந்தா உங்களுக்கு அப்பவே உண்மை புரிஞ்சிருக்கும். அந்தப் பேப்பரைக் கையில வெச்சிருக்கீங்களா?''

''வீட்ல இருக்கு... இன்ஸ்பெக்டர்...''

அந்த இன்ஸ்பெக்டர் பக்கவாட்டில் திரும்பி ''பார்த்திபராஜன்'' என்று கூப்பிட, அந்த சப்-இன்ஸ்பெக்டர் ''எஸ்... ஸார்'' என்றபடி நெருங்கினார்.

''மிஸ்டர் தீபக் கூடக் கொஞ்சம் போங்க... அவர் ஒரு சென்னை எடிஷன் 'காலைக் குரல்' பேப்பரைக் தருவார்... அந்தப் பேப்பரோட இங்கே இருக்கிற 'காலைக் குரல்' ஆபீஸுக்கும் போய் இவர் சம்பந்தப்பட்ட நியூஸ் உண்மையா... பொய்யான்னு பார்த்துட்டு வாங்க...''

''எஸ் ஸார்...''

தீபக்கும் - சப் இன்ஸ்பெக்டர் பார்த்திப ராஜனும் புறப்பட்டார்கள்.

பிரசிடெண்ட் ஹாலுக்குப் பக்கத்தில் இருந்த - 'காலைக் குரல்' ஆபீஸ் அந்த இரவு பதினோரு மணி வேளையிலும் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்தது. உள்ளே பிரகாசமாய் ட்யூப் லைட் வெளிச்சம்.

கண்ணாடி டம்ளரில் இருந்த சூடான டீயை வாயால் ஊதி ஊதிக் குடித்துக் கொண்டிருந்த உதவி ஆசிரியர் போலீஸ் யூனிஃபார்மை பார்த்ததுமே டம்ளரை மேஜையின் மேல் 'டொக்'கென்று வைத்து விட்டு எழுந்து வரவேற்றார். ''வாங்க... ஸார்.''

''எடிட்டர் இருக்காரா?'' பார்த்திபராஜன்

கேட்டார்.

''அவர் எட்டு மணிக்கே போயிடுவார் ஸார்...''

''நீங்க?''

''நான் இங்கே சப்-எடிட்டர்...''

''உங்க பேரு?''

''திருப்பூர் பாலசுப்ரமணியம்.''

''ஊரையும் விடாப்பிடியா உங்க பேர்கூடச் சேர்த்திட்டிருக்கீங்க போலிருக்கு. ஓகே... இதோ பாருங்க... பாலசுப்ரமணியம்... உங்களாலே ஓர் உதவி ஆகணும்.''

''சொல்லுங்க ஸார்...''

''இந்தப் பேப்பரைப் பாருங்க...'' சென்னை எடிஷன் 'காலைக் குரல்' பேப்பரை எடுத்து பாலசுப்ரமணியத்திடம் கொடுத்தார் பார்த்திபராஜன்.

அவர் மூக்கைச் சொறிந்து கொண்டே பேப்பரைப் பார்த்து விட்டுச் சொன்னார். ''இது சென்னை எடிஷன் ஸார்...''

''இந்த நியூஸைப் பார்த்தீங்களா?''

அவர் பார்த்தார்.

**'அடையாறில் வாலிபர் குத்திக் கொலை...'** - என்று நியூஸை வாய் விட்டு முழுமையாய்ப் படித்து விட்டு நிமிர்ந்தார்.

''இந்த மர்டர் சம்பந்தமா விசாரிக்க வந்தீங்களா ஸார்?''

''நோ... இந்தச் செய்தியே உண்மையா பொய்யான்னு தெரியணும்.''

பார்த்திபராஜன் சொன்னதைக் கேட்டு பாலசுப்ரமணியம் மறுபடியும் மூக்கைச் சொறிந்தார். ''நீங்க சொல்றது எனக்குப்



புரியலை இன்ஸ்பெக்டர். ஒரு நியூஸ் உண்மையாய் இருந்தாத்தான் நாங்க அதை வெளியிடுவோம்.''

''இந்த நியூஸ் மத்த எடிஷன்ஸ்ல வந்திருக்கா?''

''வந்திருக்கும்.''

''பார்த்துச் சொல்றீங்களா?''

''ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ண முடியுமா?''

''தாராளமா! நீங்க மெதுவாப் பார்த்துச் சொல்லுங்க.''

பாலசுப்ரமணியம் பக்கவாட்டில் தெரிந்த ஓர் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார். சரியாய் பதினைந்து நிமிஷம் கழித்துத் திரும்பி வந்தார். முகத்தில் சோர்வு.

''அந்த நியூஸ் மத்த எடிஷன்ல வரலை ஸார். அப்படி வராமே இருக்கவே முடியாது ஸார். சென்னை எடிஷன்ஸ்ல வர்ற நியூஸ் கண்டிப்பா மத்த எடிஷன்ஸ்ல வந்துதான் ஆகணும்.''

''ஒரு நிமிஷம் பாலு சார்.''

தீபக் குறுக்கிட்டான்.

''எஸ்.''

''இந்த சென்னை எடிஷன் பேப்பர் உங்களுக்கு ஒரு காப்பி வந்திருக்குமே?''

''வந்திருக்கு.''

''அந்தப் பேப்பரைக் கொஞ்சம் கொண்டு வர முடியுமா?''

அவர் தன் அருகேயிருந்த அலமாரியைத் திறந்து - ஒரு நியூஸ் பேப்பர் கட்டை உருவி

மேஜையின் மேல் போட்டார். மேலே சிவப்பு மையில் - **காலைக் குரல் - சென்னைப் பதிப்பு** என்று கொட்டை கொட்டையாய் எழுதியிருந்தது.

''உங்க கையில இருக்கிற பேப்பர் என்ன தேதி ஸார்?''

தேதியைச் சொன்னான் தீபக்.

பேப்பர் கட்டைப் பிரித்து - அந்தக் குறிப்பிட்ட பேப்பரை எடுத்தார் அவர். பிரித்து முதல் பக்கத்தைப் பார்த்தார். பார்த்தவர் ஆச்சரியமானார்.

''நீங்க சொல்ற மர்டர் நியூஸ் இந்தப் பேப்பரில் இல்லை ஸார். அந்த ரெண்டு பத்தியிலேயும் வேற நியூஸ் தானே போட்டிருக்கு.''

மூன்று பேரும் பரபரப்பாய் இரண்டு பேப்பர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். எல்லாச் செய்திகளுமே - அந்தந்த இடத்தில் - குறிப்பிட்ட பத்திகளோடு அச்சாகியிருக்க - அந்த அடையாறு கொலைச் செய்தி மட்டும் தீபக்கின் கையிலிருந்த பேப்பரில் இடம் பெற்றிருந்தது.

''இந்தப் பேப்பர் உங்களுக்கு எப்படி ஸார் கிடைச்சுது...?'' பாலசுப்ரமணியம் கேட்க - தீபக் சொன்னான்.

''அந்த ரிப்போர்ட்டர் பேர் என்னன்னு சொன்னீங்க ஸார்?''

''பீட்டர்...''

''அவர் இந்தப் பத்திரிகைத் துறையில இருக்கிறதினாலே உங்களைப் பயமுறுத்தி ஆதாயம் தேடறதுக்காக இந்த நியூஸை யாருக்கும் தெரியாம டி.டி.பி பண்ணி ஒரு பிரதி எடுத்திருக்கார். நான் இதைப்பத்தி ஹெட் ஆபீஸுக்கு எழுதறேன் ஸார்...''



''தாங்க்யூ வெரிமச்...''

சிரித்து விடைபெற்றுக் கொண்டு பார்த்திபராஜனும் தீபக்கும் வெளியே வந்தார்கள். பார்த்திபராஜன் ஜீப்பில் போகும் போது தீபக்கிடம் கேட்டார்.

''மிஸ்டர் தீபக், பீட்டர் வயித்துல சொருகின கத்தியோடு, பிணமாக் கிடந்ததைப் பார்த்ததாச் சொன்னீங்க?''

''ஆமா... ஸார்...''

''அதைப் பத்திப் போலீஸ்ல உடனடியா சொல்லாமே ஏன் ஓடி வந்தீங்க? பீட்டர் உங்க நண்பர்னு சொல்றீங்க! நீங்க அவரைக் கொல்றதுக்கு எந்தக் காரணமும் இல்லாதப்போ ஏன் பயந்து போய் ஓடி வரணும்? நீங்க வெல்எஜுகேட்டட். ரொம்பவும் பாமரத்தனமா நடந்துக்கிட்டிருக்கீங்க மிஸ்டர் தீபக்.''

''ஸாரி... ஸார்... அந்த நிலைமையில எனக்கு வேற ஒரு பிராப்ளம்.''

''என்ன பிராப்ளம்?''

''என்னைக் கொலை செய்யப் போறதா ஒரு பேர்வழி தினமும் என்னோட மனைவிக்குப் போன் பண்ணி பயமுறுத்திக்கிட்டு இருந்தான். அது சம்பந்தமா நானும் உள்ளூரக் கொஞ்சம் பயந்து போயிருந்தேன். பீட்டரை அந்தக் கோலத்துல பார்த்ததும் நான் நடுங்கிப் போயிட்டேன். கல்யாணமான ஒரு வாரத்துக்குள்ளே எனக்கொரு பிராப்ளம்,

என்னோட மனைவிக்கு ஒரு பிராப்ளம். அவனோட பிராப்ளம் ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் தீர்வாச்சு. இன்னிக்கு என்னோட பிராப்ளம் ஒரு முடிவுக்கு வந்திருக்கு...''

பார்த்திபராஜன் சிரித்தார்.

''இருந்தாலும் பீட்டர் விஷயத்துல நீங்க ரொம்பவும் அழகா ஏமாந்திருக்கீங்க தீபக். அவனும் அவனோட கூட்டாளி ஜோவும் உங்களை முட்டாளாக்கியிருக்காங்க...''

''ஐ அக்ரி வித் யுவர் வேர்ட்ஸ் ஸார்...''

**ஜீ**ப் ஹாஸ்பிடலை நெருங்கி நின்றது.

பார்த்திபராஜனும் - தீபக்கும் இன்டென்சிவ் வார்டுக்குள் நுழைந்தார்கள். இன்ஸ்பெக்டர், ரமணனோடு இப்போது கல்பனாவும் தெரிந்தாள். கல்பனாவின் முகத்தில் ஒரு மலர்ச்சி ஒட்டியிருந்தது. பார்த்திபராஜன் இன்ஸ்பெக்டரை நோக்கிப் போக - ரமணனும் கல்பனாவும் தீபக்கை நோக்கி வந்தார்கள். ரமணன் கேட்டான்.

''என்னாச்சு தீபக்?''

''என்னைப் பயமுறுத்தறதுக்காக பீட்டர் தன்னோட பத்திரிகை வசதியைப் பயன் படுத்தி ஒரேயொரு பிரதி மட்டும் அடிச்சு எனக்கு அனுப்பியிருக்கான். ஆமா... ஜோவும், பீட்டரும் இப்போ எப்படி யிருக்காங்க?''

''பீட்டருக்கு ரத்தக்காயம் இல்லேன்னாலும் மூளைப் பிரதேசத்துல அடிபட்டு ரத்தம் உறைஞ்சிருக்குன்னு டாக்டர் சொல்றார். நோ ஹோப்ஸ்...''



''ஜோ...?''

''அவன் தேறிடுவான். இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல அவனுக்குக் கான்சியஸ் திரும்பும்னு டாக்டர் சொல்லியிருக்கார். அவனுக்கு ஞாபகம் வந்து அவன் சொல்லப் போகிற வாக்குமூலத்திற்காகத் தான் இன்ஸ்பெக்டர் காத்திட்டிருக்கார்.''

கல்பனா ரமணனை ஏறிட்டாள்.

''ரமணன்! நீங்க எங்களுக்காக ரொம்பவும் சிரமப்பட்டிருக்கீங்க. தாங்க்யூ வெரிமச். நீங்க போலீஸோடு ரெட்பீல்ட்டுக்குப் போயிருக் கலைன்னா இவருக்கு நிச்சயமா ஏதாவது ஆகியிருக்கும். இந்த உதவியை நாங்க என்னிக்குமே மறக்க மாட்டோம்.''

ரமணன் சிரித்தான்.

வெறும் வாயாலே நன்றி சொல்லிட்டாப் போதுமா கல்பனா?''

''பின்னே...?''

''ஓர் அமர்க்களமான ட்ரீட் வேணும்...''

''தந்துடறோம்'' என்றான் தீபக்.

அதே விநாடி -

இன்டென்சிவ் வார்டிலிருந்து அந்த நர்ஸ் ஓடி வந்தாள். இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கத்தினாள். ''ஸார்... பேஷண்ட்டுக்குக் கான்ஷியஸ் திரும்பிட்டிருக்கு...''

இன்ஸ்பெக்டரும், பார்த்திபராஜனும் இன்டென்சிவ் வார்டுக்குள் ஓடினார்கள்.

**ச**ரியாய் முப்பது நிமிஷம் கழித்து வெளியே வந்தார்கள்.

காத்திருந்த தீபக், ரமணன், கல்பனா மூன்று பேரும் இன்ஸ்பெக்டரைச் சூழ்ந்து கொள்ள -

அவர் தீபக்கை ஏறிட்டுக் கேட்டார்.

''தீபக், ரத்தன்ஷா யாரு...?''

''எங்க கம்பெனியோட மலர் இன்ஸ்பெக்டர்.''

''ஹி ஈஸ் த பர்சன் ஹூ இன்வால்வ்ட் இன்...''

''ரத்தன்ஷாவா?''

''எஸ்... ஜோ கான்சியஸூக்கு வந்து எல்லாத்தையும் சொல்லிட்டான். ரத்தன் ஷாவும் உங்க கம்பெனியும் சம்பந்தப்பட்ட சில ரகசியமான தஸ்தாவேஜூகள் ரத்தன் ஷாவுக்கு வேண்டியிருக்கு தீபக். அதை உங்க மூலமா வாங்கத்தான் அந்த 'அதிகாலைக் கொலை' நாடகத்தை ஜோவும், பீட்டரும், ரத்தன்ஷாவும் நடத்தியிருக்காங்க. ரத்தன் ஷாவோடு பீட்டருக்கும் ஜோவுக்கும் நல்ல பழக்கம் இருந்திருக்கு. பீட்டர் உங்க கல்லூரிக்கால நண்பன்னு தெரிஞ்சுக்கிட்ட ரத்தன்ஷா அழகாகத் திட்டம் போட்டுக் குடுத்திருக்கிறார். நீங்க கோவை எக்ஸ்பிரஸ் மூலமா சென்னை வரப்போறதை எப்படியோ மோப்பம் பிடிச்சுக்கிட்ட ரத்தன்ஷா, பீட்டரை ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பி உங்களை பீட்டரோட ரூம்ல தங்க வெச்சு, 'பீட்டர் கொலை' நாடகத்தை அற்புதமா அரங்கேற்றம் பண்ணியிருக்கார். நீங்க சென்னைல இருந்தா எங்கே உண்மையைக் கண்டுபிடிச்சிடுவீங்களோன்னு பயந்து உங்களை அங்கிருந்து போலீஸ் பயம் காட்டி கோயமுத்தூருக்கு விரட்டியிருக்கார். நீங்க கோயமுத்தூர் வந்ததும் உங்க பின்னாடியே ரத்தன்ஷா, பீட்டர், ஜோ மூணு பேரும் வந்துட்டாங்க. ரத்தன்ஷாவுக்கு



கோயமுத்தூர்ல அவுட்டர் ஏரியாவில ஒரு பங்களா இருக்கு. அங்கே மூணு பேரும் தங்கிட்டு ஜோவோட தலைமையிலே பயமுறுத்த ஆரம்பிச்சிருக்காங்க. டென்னிஸ் கோர்ட்ல இன்ஸ்பெக்டரா வந்து உங்களை மிரட்டினவன் ஜோதான். பீட்டரும் மாறு வேஷத்துல உங்களை ஃபாலோ பண்ணிட்டே இருந்திருக்கான். உங்களைக் கொஞ்சங் கொஞ்சமாப் பயமுறுத்தி உச்சக் கட்டத்திற்கு கொண்டு போய் தஸ்தாவேஜூகளைக் கேட்டிருக்காங்க. ரமணன் என்கிட்டே வந்து சரியான நேரத்துல மெஸேஜைப் பாஸ் பண்ணினதாலே நான் ஸ்டெப்ஸ் எடுக்க முடிந்தது.''

இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே -

அனுமதிக்கப்பட்டிருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு அந்த டாக்டரும் நர்ஸூம் வெளிப்பட்டார்கள்.

ரமணன் அவர்களிடம் போய்விட்டுத் திரும்பினான்.

''என்ன ரமணன்... என்னாச்சு?''

ரமணன் கசப்பாய்ப் புன்னகைத்துச் சொன்னான்.

''பீட்டர் இப்போ நிஜமாவே செத்துட்டான் ஸார்...''

**முற்றும்.**

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (ப்ரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: **ஜி.அசோகன்.** தொலைபேசி: **28544294**